விலை: 30.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk

WESTERN UNION WU
moving money for better
உலகெங்குமுள்ள நாடுகளில் உறவுகளிடமிருந்து WESTERN UNION மூலம் அனுப்பிய பணத்தை ஒருசில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக்கொள்ள.
Authorised Agent
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S.ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 021 222 2670, FAX: 021 222 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:srimurugan09@gmail.com

சங்கு 21 வள்ளுவர் ஆண்டு 2051 ஆவணி 29 திங்கட்கிழமை (14.09.2020) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 270

## வவுனியாவில் விபத்து மாணவன் உயிரிழப்பு

(வவுனியா)

வவுனியா ஈச்சங்குளம் பகுதியில் நேற்று மாலை இடம்பெற்ற விபத்தில் மாணவன் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

குறித்த விபத்து தொடர்பாக தெரியவருகையில், வவுனியா பூம்புகார் பகுதியில் இருந்து ஈச்சங்குளம் நோக்கி பயணித்துக் கொண்டிருந்த மோட்டார் சைக்கிள் நொச்சிக் குளம் பகுதியில் சென்று கொண்டிருந்தபோது அதே திசையில் துவிச்சக்கர 23

### பணம் கொடுக்க மறுத்த தாய்

## விபரீத முடிவெடுத்த இளைஞன் மரணம்

### குப்பிழானில் சம்பவம்



(குப்பிழான்)

பணம் கொடுக்க தாய் மறுத்ததால் விபரீத முடிவெடுத்த இளைஞன் ஒருவர் குப்பிழான் வடக்குப் பகுதியில் மரணமடைந்துள்ளார். 23

### கொரோனா அச்சம்

## மன்னார் ரயில் நிலையம் மூடல்

(மன்னார்)

மன்னார் பிரதான புகையிரத நிலையப் பகுதிகொரோனா பரவல் அச்சம் காரணமாக நேற்று ஞாயிற்றுக்கிழமை முதல் எதிர்வரும் 14 நாட்கள் மூடப்பட்டுள்ளதுடன் குறித்த புகையிரத 23

### நெல்லியடியில்

## ஹெரோயினுடன் இளைஞன் கைது

(கரணவாய்)

நெல்லியடியில் 4.7 கிராம் ஹெரோயினுடன் சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதுடன் அவரிடமிருந்து 34 ஆயிரத்து 500 ரூபாய் பணமும் மோட்டார் சைக்கிள் ஒன்றும் மீட்கப்பட்டுள்ளதாக நெல்லியடி பொலிஸார் தெரிவித்தனர். 23

## ஒட்டுசுட்டானில் ஹயஸ் விபத்து

### 12 பேர் படுகாயம்

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஒட்டுசுட்டான் நகரப் பகுதியில் நேற்று இடம்பெற்ற வாகன விபத்தில் 12 பேர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப் 23

### தமிழ் இனத்தின் நன்மைக்காக

# விக்னேஸ்வரனுக்கு எதிரான வழக்கை டெனீஸ்வரன் வாபஸ் பெற வேண்டும்

### தமிழ்த் தேசிய உணர்வாளர்கள் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

**நீதியரசரும் முன்னாள் வட மாகாண சபை முதலமைச்சரும் தற்போதைய பாராளுமன்ற உறுப்பினருமாகிய நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரனுக்கு எதிராக வட மாகாண சபை முன்னாள் அமைச்சர் டெனீஸ்வரன் தாக்கல் செய்த நீதிமன்ற அவமதிப்பு வழக்கை வாபஸ் பெறுமாறு தமிழ்க் கல்விமான்கள், தமிழ்த் தேசிய ஆர்வலர்கள் மற்றும் தமிழ் சட்டத்தரணிகள் எனப் பலரும் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.**

29.06.2018 மேன்முறையீட்டு நீதிமன்றம் வழங்கிய இடைக்காலக் கட்டளையை நடைமுறைப்படுத்தத் தவறிமையை நீதிமன்ற அவமதிப்பாகக் கருதி டெனீஸ்வரனால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

வட மாகாண சபை அமைச்சர் பதவியிலிருந்து டெனீஸ்வரன் நீக்கப்பட்டமையை எதிர்த்து வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

பின்னர் அவரை மீண்டும் அமைச்சரவையில் உள்வாங்குமாறு நீதிமன்றம் இடைக்காலக் கட்டளை வழங்கியதுடன் வட மாகாண சபை கலைக்கப்பட்ட பின்னர் 05.08.2019இல் டெனீஸ்வரன் அமைச்சர்ப் பதவியிலிருந்து நீக்கப்பட்டது தவறானது என்றும் தீர்ப்பளித்திருந்தது.

தற்போது பாராளுமன்ற உறுப்பினராக உள்ள வட மாகாண முன்னாள் முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் அண்மையில் பாராளுமன்றத்தில் ஆற்றிய உரை சிங்கள பௌத்த கடும்போக்குவாதிகளால் கடும் விமர்சனத்திற்கும் கண்டனத்திற்கும் உள்ளாகிய போதிலும் தமிழ்த் தேசியவாதிகளால் மிகவும் வரவேற்கப்பட்டது.

தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் துணிச்சலாக பாராளுமன்றத்தில் 02

## விக்னேஸ்வரனுக்கு பலமாக எப்போதும் இருப்பேன்

### பா.டெனீஸ்வரன் தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

எந்தப் பாராளுமன்ற உறுப்பினரும் கதைக்காத ஒரு விடயத்தை எமது முன்னாள் முதலமைச்சர் உரக்கச் சொல்லி இருக்கின்றார்.

முதற்கண் அதற்கு 23

## நேற்றும் 39 பேருக்கு கொரோனா

(கொழும்பு)

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான 39 பேர் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளதாக சுகாதார அமைச் 23

## யாழ்.பல்கலைக்கழக விடுதிக்கு முன்பாக ஆசிரியர் மீது வாள்வெட்டு

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக விடுதிக்கு முன்பாக இடம்பெற்ற வாள்வெட்டுத் தாக்குதலில் ஆசிரியர் ஒருவர் காயமடைந்துள்ளார்.

நேற்று மாலை இடம்பெற்ற இத்தாக்குதலில் வவுனியாவிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்த ஆங்கில ஆசிரியர் ஒருவர் மீதே இவ்வாறு தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. 23

## போதைக்கு அடிமையான 8 ஆயிரம் சிறைக் கைதிகளுக்கு

### புனர்வாழ்வளிக்க அரசு தீர்மானம்

(கொழும்பு)

போதைப்பொருளுக்கு அடிமையான 8 ஆயிரம் சிறைக் கைதிகளுக்கு புனர்வாழ்வளிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

ஜனாதிபதியின் ஆலோசனைக்கமைய இந்தத் திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளதாக சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு மற்றும் சிறைக் கைதிகள் புனர்வாழ்வு இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி பெர்னாண்டோ புள்ளே தெரிவித்துள்ளார்.

இதனைத் தவிர, 02

## கிளிநொச்சியில் இடம்பெற்ற செயலமர்வில் மாணவ குழுக்களிடையே மோதல்

- ஒருவருக்கு கழுத்தில் கத்திவெட்டு
- 20க்கு மேற்பட்ட கதிரைகள் அடித்து உடைப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி கூட்டுறவாளர் மண்டபத்தில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம்பெற்ற க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கு இடம்பெற்ற ஒரு செயலமர்வின் போது மாணவக் குழுக்களுக்கிடையே ஏற்பட்ட மோதலால் கூட்டுறவாளர் மண்டபம் கலவர பூமியாக மாறியதோடு, அடிதடியில் ஈடுபட்ட மாணவனொருவனின் கழுத்தும் வெட்டப்பட்டுள்ளதோடு, 20க்கு மேற்பட்ட கதிரைகளும் அடித்து உடைக் 23

# 20ஆவது திருத்தத்தின் குறைபாடுகளைத் திருத்தி புதிய வர்த்தமானி அறிவிப்பு வெளியிடப்படும்

## பாராளுமன்ற உறுப்பினர் கெவிந்து குமாரதுங்க

(கொழும்பு)

20ஆவது திருத்தச் சட்டவரைபில் இருக்கும் குறைபாடுகளை தீர்த்துக்கொண்டு புதிய வர்த்தமானி அறிவிப்பு வெளியிடப்படும் என ஜனாதிபதி வாக்குறுதி அளித்துள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் கெவிந்து குமாரதுங்க தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அரசியலமைப்பு 20ஆவது திருத்தச் சட்டவரைபு வர்த்தமானி வெளிவந்துள்ள நிலையில் அதில் மேலும் திருத்தங்களை மேற்கொள்ள வேண்டும் என்ற கருத்துக்கள் பரவலாக தெரிவிக்கப்பட்டு வருகின்றன.

எதிர்க்கட்சிகளில் இருந்து மாத்திரமல்லாது ஆளுங்கட்சி உறுப்பினர்களில் இருந்தும் அதுதொடர்பான திருத்த யோசனைகள் தெரிவிக்கப்பட்டிருக்கின்றன. இதுதொடர்பில் ஆளுங்கட்சி கூட்டத் தொடரிலும் கலந்துரையாடப்பட்டது.

அதனால் அரசியலமைப்பு 20ஆவது திருத்த சட்டவரைப்பில் இருக்கும் குறைபாடுகளை தீர்த்துக்கொண்டு பிரேரணைகளுடன் புதிய வர்த்தமானி அறிவிப்பொன்றை வெளியிடுவதாக ஜனாதிபதி எமக்கு வாக்குறுதி அளித்திருக்கின்றார்.

அத்துடன் இதுதொடர்பாக ஆராய குழுவொன்று அமைக்கப்படவேண்டும் எனவும் ஆளுங்கட்சி கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டதற்கமைய. பிரதமரினால் அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தலைமையில் குழு அமைக்கப்பட்டு. குழுவின் அறிக்கையை அடுத்த அமைச்சரவையில் சமர்ப்பிக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார். (ம)

# சிற்றுண்டிச்சாலைகளை பாடசாலைகளில் திறக்க அனுமதி

(கொழும்பு)

பாடசாலைகளில் இன்று முதல் சிற்றுண்டிச்சாலைகளை திறக்க கல்வி அமைச்சு அனுமதித்துள்ளது.

கொரோனா தாக்கத்தையடுத்து கடந்த சில மாதங்களாக பாடசாலை சிற்றுண்டிச்சாலைகள் மூடப்பட்டுள்ளன. கல்வி நடவடிக்கைகள் மீள ஆரம்பித்த போதும், சிற்றுண்டிச்சாலைகளை மீள திறப்பதை தாமதப்படுத்தி, இன்று முதல் அவற்றை திறக்க அனுமதிக்கப்பட்டுள்ளது.

சுகாதார அறிவுறுத்தல்களை பின்பற்றியே இன்று முதல் சிற்றுண்டிச்சாலைகள் திறக்கப்பட வேண்டும்.

இது தொடர்பான விழிப்புணர்வு நடவடிக்கைகள் கல்வி அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில பெரேரா ஊடாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மாகாண கல்வி திணைக்களங்கள் ஊடாக வலயக்கல்விப் பணிப்பாளர்கள் அறிவுறுத்தப்பட்டு, பாடசாலைகளில் சுகாதார நடைமுறைகள் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளன.

மாணவர்கள் சிற்றுண்டிச்சாலைக்குள் கூட்டமாகத் திரண்டு நிற்பது அனுமதிக்கப்படமாட்டாது. குறிப்பிட்ட அளவான மாணவர்களே அனுமதிக்கப்படுவதுடன், சமூக இடைவெளி பேணப்படும். மாணவர்களிடம் முற்கூட்டியே ஓடர் பெற்று, வகுப்பறைகளில் அவற்றை விநியோகிக்கும் திட்டமும் நடைமுறைப்படுத்தப்படும். (ம)

## விக்னேஸ்வ...

எடுத்துரைக்கும் தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினராக நீதியரசர் விக்னேஸ்வரன் உள்ளமையால் சிங்களக் கடும்போக்குவாதிகளால் விக்னேஸ்வரனை பாராளுமன்றத்தை விட்டு அகற்ற வேண்டும் என்ற கண்டனத்திற்குரியவராகவும் உள்ளார்.

இந்த நிலையில் இவ் வழக்கில் சி.வி. விக்னேஸ்வரன் குற்றவாளியாகக் காணப்படுமிடத்து அவர் பாராளுமன்ற உறுப்பினர் பதவியை இழப்பதுடன் சிறைத் தண்டனையையும் அனுபவிக்க வேண்டிவரும் என்பதால் பேரினவாதிகளால் இவ் வழக்கு ஆர்வமாக நோக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

தற்கால அரசியல் சூழ்நிலையைக் கருத்திற்கொண்டு தமிழ்த் தேசிய அரசியலின் தேவைகருதி இவ் வழக்கை மீளப் பெறுவது அவசியமாகும் என கல்விமான்கள், தமிழ்த் தேசிய ஆர்வலர்கள் மற்றும் தமிழ் சட்டத்தரணிகள் டெனீஸ்வரனிடம் கோரியுள்ளனர்.

இது பற்றி கருத்து வெளியிட்ட சிரேஷ்ட சட்டத்தரணி கலாநிதி குமாரவடிவேல் குருபரன் நீதியரசர் விக்னேஸ்வரன் தான் கடமையாற்றிய நீதிமன்றத்திலேயே கூண்டில் ஏறி சாட்சி சொல்வதைத் தவிர்ப்பதன் மூலம் கற்ற தமிழ்ச் சமூகத்தின் மாண்பைக் காப்பாற்றுவதாக அமையும்.

கட்சிவேறுபாடுகளுக்கு அப்பால் தமிழ் அரசியல்வாதி அதுவும் ஒரு சட்டத்தரணி கொடுத்த வழக்கால் ஒரு நீதியரசர் குற்றவாளியாகக் காணப்பட்டு பாராளுமன்ற உறுப்பினர் பதவியை இழந்தார் என்ற இழிநிலை ஏற்படக் கூடிய சந்தர்ப்பத்தை தவிர்ப்பது அவசியம்.

சட்டத்தரணி டெனீஸ்வரன் தற்கால அரசியல் சூழ்நிலை கருதி நீதிமன்ற அவமதிப்பு வழக்கை மீளப்பெற வேண்டும். அவ்வாறு செய்தால் அவர் மீதான நன்மதிப்பு உயரும் என்று குறிப்பிட்டார்.

இவ் நீதிமன்ற அவமதிப்பு வழக்கு நாளை 15ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மேன்முறையீட்டு நீதிமன்றில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-610)


**வீடு விற்பனைக்கு**

மானிப்பாயில் 2 1/2 பரப்புக் காணியுடன் நல்ல நிலையில் உள்ள வீடு விற்பனைக்கு உண்டு.

**தரகர்கள் தேவையில்லை.**

(C-312)

**077 778 7545**


## போதைக்கு...

போதைப்பொருளுக்கு அடிமையான பாடசாலை மாணவர்களுக்கும் இந்த திட்டத்தின் கீழ் புனர்வாழ்வளிக்கப்படவுள்ளது. இதற்காக உப குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாக இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி பெர்னாண்டோ புள்ளே குறிப்பிட்டுள்ளார். (ம)

# கிணற்றில் தவறி விழுந்த முதியவர் படுகாயம்

(கரணவாய்)

வீதியால் துவிச்சக்கரவண்டியில் பயணித்த நபரொருவர் வீதியின் அருகே இருந்த கிணற்றில் தவறி விழுந்து படுகாயமடைந்த நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று ஞாயிற்றுக்கிழமை இரவு எட்டு மணி அளவில் புலோலி கிராம கோட்டு- பல்லப்பை வீதிக்கு அருகாமையில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவத்தில் சிங்கைநகர் புலோலி தெற்கைச் சேர்ந்த முத்துலிங்கம் கண்ணன் என்பவரே படுகாயமடைந்தவராவார்.

பருத்தித்துறை கிராமக்கோட்டுச் சந்தியில் இருந்து சைக்கிளில் பயணித்துக் கொண்டிருந்த போது வீதியருகே இருந்த கிணற்றில் தவறி வீழுந்து கால் முறிந்த நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ம-60)

# மரண அறிவித்தல்

## அம்பலவாணர் பூபாலசிங்கம்



புளியங்கூடலைப் பிறப்பிடமாகவும் 8ம் வட்டாரம், வேலணை மேற்கை வதிவிடமாகவும் கொண்ட அம்பலவாணர் பூபாலசிங்கம் நேற்று (13.09.2020) ஞாயிற்றுக்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அம்பலவாணர் - முத்துப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான நாகரத்தினம் - நவமணி தம்பதிகளின் அன்பு மருமகனும் வரதலட்சுமியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான கந்தசாமி, இராமநாதபிள்ளை, குணரட்னம் மற்றும் பராசம்மா, சுந்தரலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் டட்சுதன், றமியா, டட்பரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்ற விமலனின் அன்பு மாமனாரும் டிலானின் அன்புப் பேரனும் காலஞ்சென்றவர்களான பூரணம், கனகம்மா, தில்லைநாயகம் மற்றும் நாகேஸ்வரி (கனடா), விஜயலட்சுமி, விஜயலக்சுமி (இலண்டன்), பூமணி, யோகலட்சுமி, நாகசிறிகரன் (ஜேர்மனி), பிரபாகரன் (இலண்டன்), பாலச்சந்திரன் (ஓய்வுபெற்ற கிராம அலுவலர் ), இரட்ணசோதி, யோகராசா, புஸ்பராணி, பேரரசி (இலண்டன்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.09.2020) திங்கட்கிழமை காலை 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக சுருவில் புளியங்கூடல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(3875)

8ம் வட்டாரம்,
வேலணை மேற்கு.

தொ. பே : 077 361 8738

தகவல்:-
குடும்பத்தினர்


**கனேடிய சுற்றுலா மற்றும் விருந்தோம்பல் கற்கை நிலையம்**

**HOTEL MANAGEMENT**

**திறமையை அடிப்படையாகக் கொண்ட சர்வதேச அங்கீகாரம்**

- 100% வெளிநாடு செல்லும் வாய்ப்பு
- 6 மாத பயிற்சி முடிவில் அரச அங்கீகார சான்றிதழ்
- 100% வேலை வாய்ப்பு
- 15 நபர்கள் மட்டுமே ஒரு அணியில் சேர்த்துக் கொள்ளப்படுவர்



(C-291)

**ஆரம்பம் : 27.09.2020**

**தொடர்புகளுக்கு :- 076 057 9999**


## கொக்குவில் கிருபாகர சிவசுப்பிரமணிய கோவில் பரிபாலன சபை

**பொதுக்கூட்ட அறிவித்தல் - 2020**

மேற்படி ஆலயத்தின் பரிபாலன சபைப் பொதுக் கூட்டம் புரட்டாதி மாதம் 11ம் நாள் ஞாயிற்றுக்கிழமை ( 27.09.2020 ) பிற்பகல் 3.00 மணிக்கு தலைவர் திரு. சி. **அம்பிகாபதி** தலைமையில் ஆலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது என்பதை அறியத் தருகின்றோம். தயவுசெய்து பொதுச் சபை உறுப்பினர்கள் அனைவரும் தவறாது கூட்டத்திற்கு சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

குறிப்பு:

**பொதுக் கூட்டத்திற்கு பிரேரணைகள் சமர்ப்பிக்க விரும்பும் உறுப்பினர்கள் 2020.09.20ம் திகதிக்கு முன்னர் தமது பிரேரணைகளை எழுத்து மூலம் செயலாளருக்கு அனுப்பி வைக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.**

கொக்குவில்
2020.09.13

(3876)

திருமதி. செ. சகாதேவன்
செயலாளர்

# 6 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

# இராஜலிங்கம் மகாலட்சுமி

தோற்றம்
27.08.1934

மறைவு
21.08.2014



**“லிங்கம்மா” நினைவுகள்
ஆறாது**

இற்றை வரையிலும் ஒற்றை உறவுனக்கு
இணையாய் யாருமில்லை – எம்மை
பெற்றவள் போலொரு பேறுடை
தெய்வம் புவியினில் ஏதுமில்லை
உற்றவர் மற்றவர் உறவுகள் சொந்தம்
உதட்டினில் தருமன்பை – எம்மை
பெற்றவள் மட்டுமே பிள்ளைகட் காயெனத்
தருவாள் தன்தெம்பை

தாயிலும் மேலாய்த் தெய்வம் உண்டெனத்
தெய்வமும் சொன்னதில்லை – பெற்ற
தாய்தரும் அன்பினைப் போலொரு அன்பினை
யாரும் தந்ததில்லை
ஆயிரம் கோடி மெத்தையில் உறங்கினும்
தாய்மடிக்கு ஈடாமோ – எம்மை
சீயென்று யாரும் சினக்காமல் வாழ
வைத்தவள் தாய்தானே,

சொன்ன சொற்படி எம்மை வளர்த்த
சொர்க்கத் தங்கமம்மா – அம்மா
உன்னை எப்படி நாங்கள் மறப்பது
எம்முயிரே எங்கம்மா
வண்ண வாழ்வினை வாழ வைத்ததுநீ
வளர்த்த வளர்ப்பம்மா – இந்த
மண்ணில் உந்தனை இழந்து போனது
பெரிய இழப்பம்மா

நீராவி யடியில் இப்போதும் உந்தன்
நினைவுகள் வாழுதம்மா – அம்மா
பேர்கூறும் போதே லிங்கம்மா என்றே
உறவுகள் கூறுதம்மா
சீரோடு வாழ்ந்து நீசேர்த்த செல்வம்
நல்லபெயர் தானம்மா – உந்தன்
பேர்சொல்லி வாழும் பிள்ளைகள் மனதில்
உன்நினைவே தேனம்மா

**குடும்பத்தினர்**

(3851)

# உணவுப் பொருட்களில் தன்னிறைவு காண வடக்கிலிருந்து விவசாய புரட்சி ஆரம்பமாகும்

## விவசாய அமைச்சர்



(கொழும்பு)

உள்நாட்டில் உற்பத்தி செய்யக்கூடிய உணவுப் பொருட்களை இங்கு உற்பத்தி செய்து அவற்றில் தன்னிறைவு காணும் விவசாய புரட்சியொன்றை வடக்கில் இருந்து ஆரம்பிக்க இருப்பதாக விவசாய அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார்.

நாளை செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்யவுள்ளமை தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

இதுதொடர்பாக அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

நாளை 15 ஆம் திகதி விவசாய அமைச்சர் என்றவகையில் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்யவுள்ளேன். வடக்கிலுள்ள 400 விவசாய அமைப்புகளை சந்தித்து தேவையான ஊக்குவிப்புகளையும் உதவிகளையும் வழங்கி விவசாயத் துறையில் தன்னிறைவு காண திட்டம் தயாரித்துள்ளேன். இதனுடன் இணைந்ததாக வடக்கில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட விதவைகள், அங்கவீனமுற்றோர், புனர்வாழ்வு பெற்ற புலி உறுப்பினர்கள் போன்றோருக்கு சுயதொழில் வாய்ப்புக்களை பெற்றுக் கொடுக்க திட்டமிட்டிருக்கின்றேன்.

ஆரம்ப காலத்தில் வெங்காயம், மிளகாய், பால் உற்பத்திகளில் வடபகுதி முன்னணியில் இருந்தது. யுத்தத்தின் பின்னர் பின்னடைவு ஏற்பட்டது. இன்றும் உள்நாட்டில் உற்பத்தி செய்யக்கூடிய அநேக உணவுப் பொருட்கள் இறக்குமதி செய்யப்படுகின்றன. அவற்றை உள்நாட்டில் உற்பத்தி செய்து விவசாய புரட்சியொன்றை ஏற்படுத்த பிரதமர் எனக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

இதனை வடக்கில் இருந்து ஆரம்பிக்குமாறும் அவர் கோரினார். இதற்கமையவே நாளை வடக்கில் ஆரம்பிக்கப்படுகிறது.

அங்குள்ள விவசாயிகள், பால் உற்பத்தியாளர்களை சந்தித்து அவர்களின் பிரச்சினைகளைத் தீர்க்கவும் விவசாய உற்பத்திகளை அதிகரிக்க தேவையான உதவிகளை வழங்கவும் இருக்கிறோம். பால் உற்பத்திகளும் அதிகளவில் இறக்குமதி செய்யப்படுகிறன. உள்நாட்டு பால் உற்பத்தியை மேம்படுத்தவும் விசேட திட்டம் முன்னெடுக்கப்படும்.

இதனைத்தொடர்ந்து ஏனைய பிரதேசங்களிலும் இந்த விவசாய புரட்சி முன்னெடுக்கப்படும். எதிர்வரும் 3 வருட காலத்தினுள் பல உணவுப் பொருட்களில் தன்னிறைவு காண திட்டம் தீட்டப்பட்டுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார்.(2)

# போதைப்பொருள் கைதிகளுக்கு புனர்வாழ்வு



(கொழும்பு)

போதைப்பொருளுக்கு அடிமையான 8,000 சிறைக்கைதிகளுக்கு புனர்வாழ்வளிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

ஜனாதிபதியின் ஆலோசனைக்கமைய இந்தத் திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளதாக சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு மற்றும் சிறைக்கைதிகள் புனர்வாழ்வு இராஜாங்க அமைச்சர் சுதர்ஷனி பெர்னாண்டோபுள்ளே தெரிவித்துள்ளார்.

இதனைத் தவிர, போதைப் பொருளுக்கு அடிமையான பாடசாலை மாணவர்களுக்கும் இந்தத்திட்டத்தின் கீழ் புனர்வாழ்வளிக்கப்படவுள்ளது.

இதற்காக உப குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (2)

# கந்தகாட்டிலிருந்து தப்பிய நபரால் மூடப்பட்டது மன்னார் புகையிரத நிலையம்

(மன்னார்)

மன்னார் பிரதான புகையிரத நிலையம் கொரோனப் பரவல் அச்சம் காரணமாக நேற்றுடன் பதினான்கு நாட்கள் மூடப்பட்டுள்ளன.

குறித்த புகையிரத நிலைய ஊழியர்களும் பாதுகாப்புக் காரணங்களுக்காகப் புகையிரத நிலையத்திலே தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

கந்தகாடு புனர்வாழ்வு நிலையத்தில் இருந்து தப்பித்து வந்த நபர் ஒருவர் நேற்று முன்தினம் மன்னார் சௌத்பார் பகுதியில் இராணுவத்தினால் பிடிக்கப்பட்ட நிலையில் குறித்த நபர் புகையிரத நிலையத்தை சூழவுள்ள பகுதியில் நடமாடி திரிந்ததையடுத்து மன்னார் பிரதான புகையிரத நிலையம் முற்றிலும் மூடப்பட்டுள்ளதுடன் கொழும்பில் இருந்து மன்னார் வரும் புகையிரதங்களும் தரித்து நிற்காமல் செல்வதற்கான ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

நேற்று முன்தினம் புகையிரத நிலையத்தில் கடமையில் இருந்த ஊழியர்களும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளதுடன் இன்று புகையிரத நிலைய ஊழியர்களுக்கு பி.சி.ஆர்.பரிசோதனை மேற்கொள்ளப்படவுள்ளது.

நேற்றுப் புகையிரத நிலைய பகுதிகளைச் சூழ மன்னார் பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரிகளினால் கிருமித் தொற்று நீக்கும் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.(2-285)

# தமிழ் மக்களுக்காக உயிரையும் கொடுப்பேன்

## -இப்படிச் சொல்கிறார் கருணா-



(அம்பாறை)

முஸ்லிம் மக்கள் எமது எதிரிகள் அல்லர். எதிர்வரும் காலங்களில் தமிழ் மக்களுக்காக உயிரைக் கொடுத்து உரிமைகளைப் பெற்றுக்கொடுப்பேன் என முன்னாள் பிரதியமைச்சரான கருணா அம்மான் தெரிவித்தார்.

அம்பாறை மாவட்டம் கல்முனை பகுதியில் தமிழர் ஐக்கிய சுதந்திர முன்னணியின் அலுவலகத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

குறித்த ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், “அம்பாறை மாவட்ட மக்களை அபிவிருத்தியின்பால் இட்டுச்செல்ல சகல அரசியல் கட்சிகளும் இணைய வேண்டும்.

இதனூடாக தமிழ் முதலமைச்சர் ஒருவரை பெற வேண்டும். இதனை ஒரு இனவாதமாக எவரும் பார்க்கக்கூடாது. இதற்கு தமிழ்த்தேசிய கூட்டமைப்பு ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

இன்று எமது மக்கள், அவர்களுக்கு சாட்டை அடி கொடுத்துள்ளனர். இதனை அவர்கள் உணர்ந்து செயற்பட வேண்டும். இதுதவிர போராளிகளுக்கான வாழ்வாதார திட்டங்களை மிக விரைவில் ஆரம்பிக்கவுள்ளோம். இத்திட்டத்தை எமது புலம்பெயர் மக்களின் உதவியுடன் மேற்கொள்ள தற்போது தீர்மானித்துள்ளோம்.

முதலில் சுயதொழில் முயற்சி வாய்ப்புக்களை ஏற்படுத்த திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. சில கிராமங்களில் மக்களிற்கு அரசியல் தெளிவின்மை காணப்படுகின்றது.

கடந்தகால தேர்தல்களின் போது சில தரப்பினர் சாராயப் போத்தல்கள் பணம் கொடுத்து வாக்குகளை வாங்கிய சந்தர்ப்பங்கள் இருக்கின்றன. இதற்கான ஆதாரங்கள் எம்மிடம் உள்ளன.

தமிழ் மக்கள் மாற்றத்தை விரும்புகின்றார்கள். இதற்கு சில கட்சிகளின் தோல்வியை குறிப்பிட்டு கூற முடியும். விளையாட்டு விவகாரங்களுக்கான அமைச்சராக நாமல் ராஜபக்ஷ நியமிக்கப்பட்டமை வரவேற்கக் கூடியது.

எமது இளைஞர்களுக்கு எதிர்காலத்திற்கு சிறந்த வாய்ப்புக்களை வழங்கக்கூடியதாக இருக்கும். இந்தவகையில் அமைச்சர் நாமல் ராஜபக்ஷவினை விமர்சிக்க முடியாது. நாங்கள் சொல்கின்ற கருத்துக்களை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளும்” என அவர் குறிப்பிட்டுள்ளார். (2)

# கட்டாக்காலி கால்நடைகள் பிரதேச சபையால் பிடிக்கப்படும்

## தவிசாளர் கருணாகரமூர்த்தி

(யாழ்ப்பாணம்)

வீதியோரங்களில் திரியும் கால்நடைகள் வேலணைப் பிரதேச சபையால் பிடிக்கப்படும் என்றும் கட்டாக்காலிகளாகத் திரியும் கால்நடைகளை உரியவர்கள் பாதுகாத்துக் கொள்ளுமாறும் வேலணை பிரதேச சபை தவிசாளர் ந.கருணாகரகுருமூர்த்தி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

தற்போது பயிர்ச்செய்கை காலம் ஆரம்பமாகியுள்ளது. இதனால் கட்டாக்காலி கால்நடைகளை கட்டுப்படுத்துமாறு பலதரப்பட்டவர்களிடமிருந்து எமக்கு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. ஆனாலும் நாம் கால்நடைகளினது பாதுகாப்பையும் கருத்தில் கொண்டே அதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றோம்.

இதன்பிரகாரம் சபையால் கட்டாக்காலிகளாக வீதிகள், ஒழுங்கைகள் போன்றவற்றில் திரியும் கால்நடைகள் பிடித்து ஒரு பொதுவான இடத்தில் வைத்துப் பராமரிக்கப்படும்.

இவற்றை உரிமை கோரி யாராவது வரும் பட்சத்தில் பராமரிப்புச் செலவை அறவீடு செய்த பின்னர் எச்சரிக்கையுடன் உரியவர்களிடம் ஒப்படைக்கப்படும்.

உரிமைகோரப்படாத கால்நடைகள் சிறிது காலத்தின் பின்னர் வேலணை பிரதேசத்திற் குட்பட்டவர்களுக்கு பொது ஏலத்தின் மூலம் விற்பனை செய்யப்படுவதுடன் அதன் மூலம் வரும் நிதியை வறிய நிலையில் உள்ளவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் தெரிவித்தார். (5-4)

# கொரோனா முடக்கத்தால் பாதிக்கப்பட்ட கடற்றொழிலாளர்கள் குறைந்த வட்டி வீதத்தில் கடன் பெற்றுக் கொள்ள நடவடிக்கை

## - அமைச்சர் டக்ளஸ் -

(திருமலை)

**கொரோனாத் தொற்றுக் காரணமாக நாடு முடக்கப்பட்டிருந்த காலத்தில் கடற்றொழிலாளர்கள் எதிர்கொண்ட பாதிப்புகளுக்கு நிவாரணம் வழங்கும் நோக்கில் அரசாங்கம் குறைந்த வட்டி வீதத்தில் கடன் வழங்க தீர்மானித்துள்ளதாக தெரிவித்த கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, அவற்றை பெற்றுக்கொள்ள விரும்புகின்றவர்களுக்கு ஏற்படக்கூடிய நடைமுறை சிக்கல்களுக்கு தன்னால் நடவடிக்கை மேற்கொள்ள முடியும் எனவும் தெரிவித்துள்ளார்.**



திருகோணமலைக்கு இரண்டு நாள் விஜயம் மேற்கொண்டிருந்த அமைச்சர் மக்கள் எதிர்கொள்ளும் பல்வேறு பிரச்சினைகள் மற்றும் தேவைப்பாடுகள் தொடர்பாக நேரில் சென்று ஆராய்ந்தறிந்து கொண்டார்.

இந்நிலையில் மாவட்டத்தின் கடற்றொழிலாளர் சங்கங்களின் பிரதிநிதிகளை நேற்றையதினம் சந்தித்து கலந்துரையாடிய அமைச்சர் கடற்றொழிலாளர்களது பிரச்சினைகள் தொடர்பில் கேட்டறிந்து கொண்ட பின் கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது திருகோணமலை மாவட்டத்தில் தடை செய்யப்பட்ட தொழில் முறைகள் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அமைச்சருக்கு அறியப்படுத்திய சிறுதொழிலாளர், அதுதொடர்பில் அடிக்கடி கலந்துரையாடப்பட்டு உறுதி மொழிகள் வழங்கப்படுகின்ற போதிலும் அவற்றை கட்டுப்படுத்துவதற்கு சம்பந்தப்பட்ட தரப்புக்களினால் ஆக்கபூர்வமான செயற்பாடுகளை மேற்கொள்வதில்லை எனவும் குற்றஞ்சாட்டியிருந்தனர்.

அத்துடன் நாட்டிலேற்பட்ட கொரோனா அச்சுறுத்தல் காரணமாக கடந்த சில மாதங்களாக தமது தொழில் நடவடிக்கைகளில் பாரிய பொருளாதார நெருக்கடி நிலை தோன்றியிருந்ததாகவும் அவற்றுக்கு தீர்வு பெற்றுத்தருவதற்கான வழிவகைகளை உருவாக்கி தருமாறும் கோரிக்கை விடுத்திருந்தனர்.

கடற்றொழிலாளர்களது பிரச்சினைகளை கருத்திற்கொண்ட அமைச்சர் அவர்கள் எதிர்கொண்ட பாதிப்புகளுக்கு நிவாரணம் வழங்கும் நோக்கில் அரசாங்கம் குறைந்த வட்டி வீதத்தில் கடன் வழங்க தீர்மானித்துள்ளதாகவும் அவற்றை பெற்றுக்கொள்ள முயற்சிப்பவர்களுக்கு வங்கிகளில் ஏற்படக்கூடிய நடைமுறை சிக்கல்களுக்கு தன்னால் நடவடிக்கை மேற்கொள்ள முடியும் என்றும் தெரிவித்தார். (5-2-4)

31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

அமரர் கானதாசன் செல்வராணி

அன்னை மடியில் 1955 . 04 . 09

ஆண்டவன் அடியில் 2020 . 08 . 17



கடந்த 17.08.2020 சிவபதமடைந்த எமது குடும்ப குலவிளக்கு அமரர் **கானதாசன் செல்வராணி** அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று திங்கட்கிழமை காலை 6.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெறும்.
அன்னாரின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் நாளை மறுதினம் 16.09.2020 புதன்கிழமை மு.ப.11.30 மணியளவில் முத்துஐயன்கட்டு தட்டயமலையில் அமைந்துள்ள அவரின் இல்லத்தில் நடைபெறும்.
அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம். மேலும் இந்த அழைப்பினை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

(3861)

60, பூந்தோட்டம்,
தட்டயமலை,
முத்துஐயன்கட்டு,
ஒட்டுசுட்டான்.

கணவர் கானதாசன்
மற்றும் குடும்பத்தினர்.
0772606408

# மன்னாரில் சிறப்பாக நடைபெற்ற இந்து எழுச்சி மாநாடு





(மன்னார்)

மன்னார் இந்துக் குருமார் பேரவையின் ஏற்பாட்டில் இந்து எழுச்சி மாநாடும் இந்துக் குருமார் பேரவையின் 25 ஆவது ஆண்டு விழாவும் நேற்று ஞாயிற்றுக்கிழமை மன்னார் நகர மண்டபத்தில் இடம் பெற்றது.

மன்னார் இந்துக் குருமார் பேரவையின் தலைவர் மனோ ஐங்கரசர்மா தலைமையில் குறித்த நிகழ்வு இடம் பெற்றது.

இதன் போது காலை 9.45 மணியளவில் மன்னார் பிரதான பாலத்தடியில் இருந்து மன்னார் நகர மண்டபம் வரை அமைதியான முறையில் ஊர்வலம் இடம் பெற்றது.

குறித்த ஊர்வலத்தில் இந்துக்குருமார்கள்,இந்து மக்கள் என நூற்றுக் கணக்கானோர் கலந்துகொண்டனர். இதன் போது நந்திக்கொடியை ஏந்தியவாறு மன்னார் நகர மண்டபம் வரை ஊர்வலமாகச் சென்றனர்.

அதனைத் தொடர்ந்து மன்னார் நகர மண்டபத்தில் அமைக்கப்பட்ட கலாநிதி மனோகரக் குருக்கள் அரங்கில் நிகழ்வுகள் இடம் பெற்றன. (5-4-285)



யாழ்ப்பாணம் - நல்லூர் சிவன் கோவில் (அம்மன்) வருடாந்த திருவிழா நேற்று ஞாயிற்றுக் கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. (படங்கள்:- ஐ.சிவசாந்தன்)

# விவசாய சம்மேளனத்தில் பதிவு மேற்கொள்ளல்

(யாழ்ப்பாணம்)

கைதடி நாவற்குழி விவசாய சம்மேளனத்தில் பதிவினை மேற்கொள்வதற்கான டோக்கன் வழங்கல் நாளை மறுதினம் 16 ஆம் திகதி புதன் கிழமை காலை ஸ்ரீமுருகன் சனசமூக நிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ளது. முன்னர் பதிவுகளை மேற்கொள்ளத் தவறியவர்கள் தற்போது ஏக்கர் வரிப்பற்றுச்சீட்டு, சந்தாப்பணப் பற்றுச்சீட்டு, காணி பதிவு செய்தமைக்கான பத்திரம் என்பவற்றுடன் சமுகமளித்து பதிவினை மேற்கொள்ளுமாறு சம்மேளனத் தலைவர் ஐ.சத்திய சீலன் அறிவித்துள்ளார். (5-4)

# முடிவுறாது இருக்கும் வீட்டுத்திட்டத்தை முடித்துத்தர முன்வாருங்கள்

## வசந்தபுரம் மக்கள் ஆர்ப்பாட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நாவாந்துறை வசந்தபுரம் கிராம மக்களுக்கு, தேசிய வீடமைப்புத் திட்டத்தின் கீழ் நிதி ஒதுக்கப்பட்டதாக கூறப்பட்டிருந்த போதிலும் இதுவரையில் அவர்களுக்கான நிதி வழங்கப்படவில்லை என விசனம் தெரிவித்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இவ்விடயம் தொடர்பில் வசந்தபுரம் கிராமத்தைச் சேர்ந்த பாதிக்கப்பட்டவர்கள் தெரிவிக்கையில், கடந்த வருடம் மே மாதம் 15 ஆம் திகதி இந்த வீட்டுத்திட்டம் எம்மில் 58 பேருக்கு கிடைக்கப்பெற்றது.




எமக்கு முதலில் வழங்கப்பட்ட வீட்டுத்திட்ட வீட்டை உடைத்து இவ் 58 வீட்டுத்திட்டத்தை ஏற்குமாறு தெரிவித்தனர்.

3 மாதத்தில் புதிய வீட்டுத் திட்டத்தை கட்டி முடிக்குமாறும், கட்டம் கட்டமாக எமக்குரிய பணத்தைத் தருவதாகவும் கூறியிருந்தனர்.

வங்கிக் கணக்கில் 7 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா வைப்பிலிடப்பட்டுள்ளதாகவும், அது கட்டம் கட்டமாகவே வழங்கப்படுமெனவும் கூறினர்.

அவர்கள் கூறியபடி வீட்டுத்திட்டம் கட்டத் தொடங்கி, அரைப் பகுதி வேலைகள் முடிவடைந்த பின்னரும் வங்கிக் கணக்கில் பணம் வைப்பிலிடப்படவில்லை.

கடந்த வருட மழை காலங்களை, ஒழுக்குகளுடன் கூடிய வீடுகளில் பல இன்னல்களுடனே கழிக்க வேண்டியதாக இருந்தது. இவ்வருடம் மழைக் காலம் ஆரம்பிக்கவுள்ளது. எமக்கு ஏற்படும் நன்மை, தீமைகளைக்கூட வீட்டிலில்லாது வீதிகளில் வைத்தே செய்ய வேண்டியுள்ளது.

எமக்கு இவ்வீட்டுத்திட்டத்தைப் பூரணப்படுத்தித் தந்தாலே போதும். இவ்விடயம் தொடர்பில் உரிய அதிகாரிகள் தலையிட்டு எமது பிரச்சினையைத் தீர்த்து வைக்க வேண்டும் எனக் கோரிக்கை விடுத்தனர். (5-8)

# விலைப்பட்டியல் காட்சிப்படுத்தப்படுவதால் விவசாயிகள்,வாடிக்கையாளர் நன்மையடைவர்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி பொதுச் சந்தையில் மரக்கறிகளின் அன்றாட கொள்வனவு விலை மற்றும் விற்பனை விலை ஆகியன பட்டியலிடப்பட வேண்டும் என சாவகச்சேரி நகரசபை ம.நடனதேவன் வலியுறுத்தியுள்ளார்.

அண்மையில் சாவகச்சேரி நகரசபையில் இடம்பெற்ற விசேட அமர்வொன்றின் போதே அவர் இதனை வலியுறுத்தியிருந்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், சந்தையில் மரக்கறிகளின் கொள்விலை மற்றும் விற்பனை விலை ஆகியவற்றை பட்டியலிடுவதன் மூலம் விவசாயிகள் மற்றும் வாடிக்கையாளர்கள் அதனைப் பார்வையிட்டு நன்மையடைய முடியும்.

சந்தையில் மரக்கறி வகைகளின் அன்றாட விலை விபரங்களை பட்டியலிடுதல் மிக அவசியமானது. அதனை வருமான வரிப் பரிசோதகர் கண்காணிக்க வேண்டும் என தெரிவித்தார்.

மரக்கறி மற்றும் கடலுணவு வகைகளை கொள்வனவு விலையில் இருந்து அதிக இலாபம் வைத்து வியாபாரிகள் விற்பனை செய்து வருவதாகவும், இதனால் பொதுமக்கள் மற்றும் உற்பத்தியாளர்கள் நட்டமடைவதாகவும் மேலும் சில உறுப்பினர்கள் சபையில் சுட்டிக்காட்டினர். (5-30)

# கையும் மெய்யுமாக பிடிபட்ட சந்தேகநபர்

(யாழ்ப்பாணம்)

சீனியர் லேனில் உள்ள வீடு ஒன்றின் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டமை தொடர்பில் தேடப்பட்டு வந்த சந்தேக நபரொருவர் கடந்த வெள்ளிக் கிழமை இரவு கைது செய்யப் பட்டதாக யாழ்ப்பாணம் பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணம் சீனியர் லேனிலுள்ள வீடொன்று இனந்தெரியாத நபர்களால் அடித்து சேதப்படுத்தப்பட்டதாக நேற்று முன்தினம் யாழ் பொலிஸ்நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பிலான விசாரணைகளை ஆரம்பித்த பொலிஸார் சந்தேகநபர்களை இனங்கண்டு தேடி வந்தனர். இந்நிலையில் சந்தேகநபர்களில் ஒருவர் கடந்த வெள்ளிக்கிழமை இரவு யாழ். நகரப்பகுதியிலுள்ள கடையொன்றில் களவாடும் நோக்குடன் மேல் கூரையைப் பிரித்து இறங்க முற்பட்ட போது யாழ். பொலிஸாரால் கையும்மெய்யுமாகப் பிடிபட்டார்.

சந்தேக நபருக்கெதிராக வீடொன்றில் அத்துமீறி நுழைந்து சேதப்படுத்தியமை, களவாட முற்பட்டமை ஆகிய இரு வழக்குகளை பதிவு செய்து நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக யாழ்ப்பாணப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (5-8)




யாழ். மாநகரசபையின் முன்னாள் முதல்வரும், தமிழர் விடுதலைக் கூட்டணியின் சட்டத்துறைச் செயலாளருமான அமரர்- பொன். சிவபாலன் மற்றும் அவருடன் குண்டுவெடிப்பில் உயிரிழந்த யாழ்.மாநகர சபை உத்தியோகத்தர்கள் நால்வரினதும் 22 ஆவது நினைவு தினம் கடந்த வெள்ளிக்கிழமை யாழ். நாச்சிமார் கோவிலடியிலுள்ள தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைமைக் காரியாலயத்தில் அனுஷ்டிக்கப்பட்டது. (படம்:- குப்பிழான் செய்தியாளர்)



அளவெட்டி மகாஜன சபையின் புதிய கட்டடத் திறப்பு விழாவும், மாணவர்களுக்கு சைக்கிள் வழங்கும் நிகழ்வும் நேற்று முன்தினம் சனிக்கிழமை தலைவர் வை.சுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்றன. இந்நிகழ்வில் விருந்தினர்களாக ஓய்வுநிலை அரசாங்க அதிபர் நா.வேதநாயகன், வலி.வடக்கு பிரதேச சபைத் தலைவர் சோ.சுகிர்தன், தெல்லிப்பழைப் பிரதேச செயலர் எஸ்.சிவஸ்ரீ ஆகியோர் கலந்து கொண்டனர். (படங்கள்:- குப்பிழான் செய்தியாளர்)

# போதைப்பொருள் வர்த்தகர்களின் சொத்துக்கள் அரசுடைமையாக்கப்படும்

(கொழும்பு)

**போதைப்பொருள் வர்த்தகர்களின் சொத்துக்களை அரசுடைமையாக்குவதற்காக புதிய சட்டமொன்றை தயாரிப்பது தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது.**

கடந்த சில மாதங்களில் திட்டமிட்ட குற்றச்செயல்களுடன் தொடர்புடைய பாதாளக் குழு உறுப்பினர்களின் கோடிக்கணக்கான ரூபா பெறுமதியான வாகனங்கள் மற்றும் காணிகள் உட்பட பல்வேறு உடைமைகள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன.

அதேநேரம், அவர்களின் வங்கி கணக்குகளில் இருந்து தற்போது வரையில் 2 ஆயிரம் மில்லியன் ரூபாவுக்கு அதிக பணமும் கைப்பற்றப்பட்டுள்ளது.

இந்த நிலையில், அவற்றை அரசுடைமையாக்குவதற்கு தற்போதுள்ள சட்டத்தில் குறைபாடுகள் காணப்படுவதாக தெரிய வந்துள்ளது. போதைப்பொருள் வர்த்தக செயற்பாடுகளுக்கு எதிராக நடவடிக்கைகள் எடுப்பதற்கு அவை தடைகளை ஏற்படுத்துவதாக பொலிஸ் உயர் அதிகாரி தெரிவித்தார்.

இதுவரையில் போதைப் பொருள் வர்த்தகர்கள், சட்டவிரோதமாக சேமித்த சொத்துக்கள் தொடர்பில் விசாரணை செய்வதற்காக குற்றப்புலனாய்வு திணைக்களத்தின் கீழ் விசேட பொலிஸ் பிரிவு ஒன்று ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. இந்த விடயம் தொடர்பில் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவுக்கும், சட்டதுறையினருக்கும் இடையில் இன்று விசேட கலந்துரையாடல் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-10)

# கூரிய ஆயுதத்தால் மகனைக் கொன்ற தந்தை

(கொழும்பு)

சப்புகஸ்கந்த பகுதியில் தந்தை ஒருவர் கூரிய ஆயுதத்தால் மகனைத் தாக்கியதில் மகன் பலியான சம்பவம் நடைபெற்றுள்ளது. சம்பவம் இடம்பெற்ற நேரத்தில் தந்தை மற்றும் மகன் ஆகியோர் போதையில் இருந்துள்ளனர்.

குறித்த மோதல் சம்பவம் நேற்று இரவு இடம்பெற்றுள்ளது. தனிப்பட்ட பிரச்சினைகள் காரணமாகவே இந்த மோதல் சம்பவம் ஏற்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர் 35 வயதான நபர் என்பதுடன் 59 வயதான தந்தை கைது செய்யப்பட்டுள்ளார் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-6)


## ஆதனப் பெயர்மாற்றம்

யாழ்.மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம்-08 கொழும்புத்துறை வீதி ஆதன இல 345/8A என்ற இலக்கத்தைக் கொண்ட ஆதனம் ஆதனவரிப்பதிவேட்டில் சொந்தக்காரர் என்ற பெயரில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இதன் பின்னதாக ஆதன அட்டவணையில் விபரிக்கப்படும் ஆதனமும் உள்ளடங்குகின்ற நில.பர 11 விஸ்தீரணமான ஆதனத்தினை பிரசித்த நொத்தாரிசு தில்லையம்பலம் ஜெகதீசன் முகதாவில் 929ம் இலக்க 15.12.1984ம் திகதியிடப்பட்ட நன்கொடை உறுதி மூலம் கொழும்புத்துறை சண்முகம் சின்னையா சுப்பிரமணியம் தனது மைத்துனி சின்னையா குணரத்தினம் கைம்பெண் சௌபாக்கியவதிக்கு நன்கொடையாக வழங்கியுள்ளார். குறித்த 929ம் இலக்க உறுதியில் தாயுறுதியின் விபரம் குறிப்பிடப்படாது தனது பிதாவழி முதுசமும் நீண்ட கால தடையற்ற ஆட்சியில் இருந்த ஆதனமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

பின்னர் சட்டத்தரணியும் நொத்தாரிசுமாகிய இராமநாதன் ஜெயசிங்கம் முகதாவில் 297ம் இலக்க 06.09.1987ம் திகிதியிட்ட அறுதி உறுதி மூலம் யாழ்ப்பாணம் கல்வியங்காடு ஆடியபாதம் வீதி சிவஞானப்பிள்ளையார் கோவிலடியைச் சேர்ந்த குணரத்தினம் இராமச்சந்திரன், குணரத்தினம் பாலச்சந்திரன், குணரத்தினம் திலைச்சந்திரன், குணரத்தினம் குமாரச்சந்திரன் ஆகியோர் காலஞ்சென்ற தமது தாயாருக்கு மேற்குறித்த 929ம் இலக்க உறுதி மூலம் நன்கொடையாக வந்தடைந்த ஆதனமென தமது உரித்தினை வெளிப்படுத்தி யாழ்ப்பாணம் 82/3 நல்லூர் குறுக்கு வீதியைச் சேர்ந்த அபயவாசகம் சாமுவேல் சந்திபால் பெண் ஜெகதீஸ்வரிக்கு அறுதியாக வழங்கியுள்ளார்.

பிரசித்த நொத்தாரிசு சிவலிங்கம் இளங்கீரன் முகதாவில் வரையப்பட்ட 10631 இலக்க 23.04.2019ஆம் திகதிய அறுதி உறுதி மூலம் யாழ்ப்பாணம் கொழும்புத்துறை கண்டி பிரதான வீதியில் இருந்து தற்காலம் கனடா தேசத்தில் வாழ்ந்து வரும் அபயவாசகம் சாமுவேல் சந்திரபாலனும் பெண் ஜெகதீஸ்வரியும் தங்கள் அற்றோனித்தத்துவக்காரி பாலையா விக்கினேஸ்வரி மூலம் வெளிப்பட்டு யாழ்ப்பாணம் சுண்டிக்குளி பழைய பூங்கா வீதி இல 17/A ஐச் சேர்ந்த விமலதாஸ் சாள்ஸ் விவியனும் பெண் தர்ஷிகா சாள்ஸ் விவியனுக்கும் அறுதியாக விற்றுள்ளானர்.

பிரசித்த நொத்தாரிசு சிவலிங்கம் இளங்கீரன் முகதாவில் வரையப்பட்ட 11628 இலக்க 10.12.2019 ஆம் திகதிய அறுதி உறுதி மூலம் யாழ்ப்பாணம் சுண்டிக்குளி பழைய பூங்கா வீதி இல 17/A ஐச் சேர்ந்த விமதாஸ் சாள்ஸ் விவியனும் பெண் தர்ஷிகா சாள்ஸ் விவியனும் ஆனந்தராஜா டொறிங்டன் றேகனுக்கும் பெண் துர்க்காவுக்கும் அறுதியாக விற்றுள்ளனர்.

ஆதன விபரம்:- வடமாகாணம் யாழ்ப்பாணம் மாவட்டம் சுண்டிக்குளி கோவில்பற்று, யாழ்ப்பாணம் மாநகரசபை யாழ்ப்பாண பிரதேச செயலகம் கிராம அலுவலர் பிரிவு J/63 கொழும்புத்துறை இறை பூசாரிவளவு இது உத்தரவு பெற்ற நிலஅளவையாளர் சி.இராசகாரியர் அவர்களால் 27.11.1984ம் திகதி பிரிவிட்டு தயாரித்த 3885ம் இலக்கத்தில் துண்டு 6 எனச் சுட்டப்பட்ட பாகம் விஸ்தீரணம் நிலப்பரப்பு 1 ஒன்று குளி 4 1/2 நாலரை இது மீளவும் உத்தரவு பெற்ற நில அளவையாளர் P.தனராஜா அவர்களால் 04.06.2010ம் திகதி 1-8 துண்டுகளாக பிரிவிட்டு தயாரித்த 2910ம் இலக்க படத்தில் துண்டு 6 எனச் சுட்டப்பட்ட பாகம் விஸ்தீரணம் நில.பர 1 குளி 7.3 இது மீளவும் குறித்த நில அளவையாளரால் 18.04.2019ம் திகதி தயாரித்த 2910 Bம் இலக்க படத்தின் படியும் ஆட்சியின் படியும் விஸ்தீரணம் நில.பர.1 ஒன்று குளி 7 ஏழு மற்றும் அதற்குச் சேர்ந்தவைகளும்.

எல்லை:-

கிழக்கு:- குறித்த 2910 Bம் படத்தில் துண்டு 5 எனச் சுட்டப்பட்ட பாகமும் திருமதி.அம்பிகாரட்ணம் சத்தியநாதனின் ஆதனமும்.

வடக்கு:- (12) பன்னிரெண்டு அடி அகலமான பாதை

மேற்கு:- குறித்த 2910B இலக்கப்படத்தில் துண்டு 7 எனச் சுட்டப்பட்ட ஆதனம்.

தெற்கு:- முத்தையா அருளையாவின் ஆதனமும் திருமதி. அம்பிகாரட்ணம் சத்தியநாதனின் ஆதனமும். இதடங்கலும்.

தற்போது ஆனந்தராஜா டொறிங்ரன் றேகன் உம் பெண் துர்க்காவும் இவ்வாதனத்தை தனது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனத்தின் ஏதேனும் பகுதிக்கு உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகை பிரசுரித்த திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும் உரிமை கோராவிடத்து குறித்த ஆதனமானது ஆனந்தராஜா டொறிங்ரன் றேகன் உம் பெண் துர்க்கா எனும் பெயரிற்கு பெயர்மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வாதனம் பெயர்மாற்றம் செய்தால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாணம் மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**இம்மனுவல் ஆனோல்ட்,**
**முதல்வர்,**
**யாழ்.மாநகரசபை.**

(C-293)



## தேவை

யாழ்ப்பாணம் கச்சேரியடியில் உள்ள சுற்றுலாவிடுதிக்கு 50 வயதிற்கு மேற்பட்ட ஆண்,பெண் இருபாலாரும் வரவேற்பாளராக உடன் தேவை. சிங்களம் தெரிந்தவர்களுக்கு முன்னுரிமை கொடுக்கப்படும். விடுதியில் தங்கியிருந்து கடமையாற்றக் கூடியவராக இருத்தல் வேண்டும். விடுதி கொமிசனுக்கும் கொடுக்கப்படும் உடன் தொடர்பு கொள்ளவும்.

**தொடர்புகளுக்கு:- 075 048 4074**

(3872)



## ஆதனப் பெயர்மாற்றம்

யாழ்.மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம் -06 ஈச்சமோட்டை வீதி ஆதன இல 19 என்ற இலக்கத்தைக் கொண்ட ஆதனம் ஆதனப்பதிவேட்டில் **S.B.**சவிரிமுத்து **A.H.**சவிரிமுத்து **V.E.**சவிரிமுத்து ஆகிய பெயர்களில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பிரசித்த நொத்தாரிசு ஆ.குமாரசாமி முகதாவில் 7391 இலக்கம் 03.11.2003 ஆம் திகதியிடப்பட்ட வெளிப்படுத்தல் உறுதி மூலம் யாழ்ப்பாணம் ஈச்சமோட்டை வீதி இல 19 ஐச் சேர்ந்த இராமசாமி பற்குணம் கைம்பெண் சரசு மேற்படி ஆதனத்தினை தான் 43 வருடங்களாக ஆட்சி செய்து வருகின்ற படியால் இவ்வாட்சியால் பெற்றுக்கொண்ட ஆட்சி உரிமையால் இவ்வாதனம் தனக்கு பூரண சொந்தமாய் வந்துள்ளதென்றும் ஆட்சி உரிமைச்சட்டத்தின் மூன்றாம் பிரிவில் கீழ் வெளிப்படுத்தியுள்ளார். பின்னர் பிரசித்த நொத்தாரிசு ஆ.குமாரசாமி முகதாவில் 7392 இலக்க 03.11.2003 ஆம் திகதியிட்ட சீதன உறுதி மூலம் யாழ்ப்பாணம் ஈச்சமோட்டை வீதி இல 19 இராமசாமி பற்குணம் கைம்பெண் சரசு மேற்படி ஆதனத்தினை தனது மகளாகிய ஈச்சமோட்டையைச் சேர்ந்த தியாகராசா மயில்வாகனம் பெண் சாந்தினிக்கு சீதனமாக வழங்கியுள்ளார்.

அதன் பின்னர் பிரசித்த நொத்தாரிசு திருமதி சுதா கஜேந்திரகுமார் முகதாவில் 813 இலக்க 2014.05.24ஆம் திகதியிடப்பட்ட சீதன உறுதி மூலம் யாழ்ப்பாணம் ஈச்சமோட்டை வீதியைச் சேர்ந்த தியாகராஜா மயில்வாகனமும் பெண் சாந்தினியும் தமது மகளாகிய கோண்டாவில் கிழக்கு கோண்டாவில் நாகநாதன் வீதியைச் சேர்ந்த அருள்நாதன் சுஜீவன் பெண் மிதிலாவுக்கு சீதனமாக வழங்கியுள்ளார்.

ஆதன விபரம்:-

வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் யாழ்ப்பாணப்பகுதி சுண்டிக்குளி கோவிற்பற்று சுண்டுக்குளி இறை பிரதேச செயலர் பிரிவு யாழ்ப்பாணம் கிராமசேவகர் பிரிவு J/66 "முதலைக்குளம் வயல்" நில.பர.01 குளி .08.50 வீடும் குழாய்கிணறும் பயிர்வகைகளும் இது 2002.08.20ஆம் திகதி உத்தரவு பெற்ற உலாந்தர் திரு.S.சுப்பிரமணியம் அவர்களால் அளந்து வரையப்பட்ட 137ஆம் இலக்கப்படத்தில் சுட்டிய 1ஆம் இலக்க துண்டு.

எல்லை

கிழக்கு:- ஒழுங்கை

வடக்கு:- முத்தையா செல்லையாவின் ஆதனம்

மேற்கு:- சந்தியாப்பிள்ளை பெண் திரேசம்மாவின் ஆதனம்

தெற்கு:- பேரின்பநாயகம் பெண் ராஜியின் ஆதனம். இதடங்கலும்

தற்போது அருள்நாதன் சுஜீவன் பெண் மிதிலா இவ்வாதனத்தை தனது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனத்தின் ஏதேனும் பகுதிக்கு உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகை பிரசுரித்த திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறு உரிமை கோராவிடத்து குறித்த ஆதனமானது அருள்நாதன் சுஜீவன் பெண் மிதிலா என்னும் பெயரிற்கு பெயர்மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வாதனம் பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாணம் மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதை தெரிவித்துக்கொள்கின்றேன்.

**இம்மனுவல் ஆனோல்ட்,**
**முதல்வர்,**
**யாழ்.மாநகரசபை.**

(C-294)

# யானைகள் வருகையால் பயிர்கள் சேதம்-மக்கள் கவலை

(கண்டாவளை)

முல்லைத்தீவு தென்னியன்குளம் கிராமத்தில் அதிகரித்துள்ள காட்டு யானைகளின் தொல்லையால் அன்றாடம் அழிவுகளை சந்திப்பதாக பிரதேச மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் துணுக்காய்மற்றும்மாந்தை கிழக்கு ஆகிய பகுதிகளில் அதிகரித்துள்ள காட்டுயானைகளின் தொல்லை மற்றும் அழிவுகளால் தாங்கள் அன்றாடம் பல்வேறு இன்னல்களை எதிர்கொள்வதாக பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர்.

துணுக்காய் பிரதேச செயலர் பிரிவின் கீழ் உள்ள தென்னியன்குளம் மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் கடந்த சில தினங்களாக காட்டுயானைகளின் தொல்லைகள் அதிகரித்துக் காணப்படுவதாகவும் பயன்தரு பயிர்களும் அழிக்கப்படுவதாகவும் பிரதேச மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

தற்போதைய வறட்சியுடனான காலநிலை காரணமாகவும் காடுகளில் மேற்கொள்ளப்படுகின்ற மணல் அகழ்வுகள் மற்றும் மரங்கள் வெட்டுதல் போன்ற செயற்பாடுகளால் காடுகளில் வாழ்ந்து வரும் காட்டுயானைகள், குரங்குகள் ஊர்மனை நோக்கி வருவதாகவும் இவற்றினாலேயே அழிவுகள் ஏற்படுகின்றன எனவும் பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு காட்டுயானைகள் வருகையைக் கட்டுப்படுத்தித் தமது வாழ்வாதார பயிர்களை பாதுகாக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பல்வேறு தரப்பினரிடமும் கோரிக்கைகள் விடுத்தபோதும் இதுவரை எந்த விதமான தீர்வுகளும் கிடைக்கவில்லை எனவும் பாதிக்கப்பட்ட மக்கள் கவலை தெரிவித்துள்ளனர். (5-4-315)

# சட்டவிரோத மணல் அகழ்வால் அழிவை எதிர்நோக்கும் பன்புல்லினம்

## பாய் உற்பத்தியாளர்கள் கவலை

(கண்டாவளை)

முல்லைத்தீவு பாலியாறு மற்றும் பறங்கியாறு ஆகிய பகுதிகளில் தொடரும் மணல் அகழ்வுகளால் பாய் உற்பத்திக்குப் பயன்படும் புல்லினம் அழிவடைந்து வருவதாகவும் இதனால் தமது வாழ்வாதார தொழில்கள் பாதிக்கப்படுவதாகவும் பாய் உற்பத்தியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

முல்லைத்தீவு துணுக்காய் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட பதினைந்திற்கும் மேற்பட்ட குடும்பங்களும் பனங்காமம் பகுதியில் உள்ள சில குடும்பங்களும் பாரம்பரியமாக 40 வருடங்களுக்கு மேலாக பன்பாய் உற்பத்தி மற்றும் பன் புல்லிலான உற்பத்திகளை மேற்கொண்டு அதன்மூலம் கிடைக்கும் வருமானத்தின் மூலம் தமது வாழ்வாதாரத்தை முன்னெடுத்து வருகின்றனர்.

இவ்வாறான பன்பாய் மற்றும் பன்பொருட்களுக்கான மூலப்பொருளாக காணப்படும் பன்புல்லை இதுவரை காலமும் பாலியாறு மற்றும் பறங்கியாறுப் பகுதிகளில் இயற்கையாவே படர்ந்து காணப்பட்ட பன்புல்லை அறுவடை செய்து பதனிட்டு தமது தொழில்களை முன்னெடுத்து வந்துள்ளனர்.

தற்போது இவ்விரு ஆற்றுப் பகுதிகளிலும் இடம்பெறும் மண் அகழ்வுகளால் இப்புல்லினம் அழிவடைந்து வருவதாகவும் தமது தொழிலுக்கான மூலப்பொருளாக காணப்படும் புல்வகையினை வேறு பிரதேசங்களுக்கு தேடிச் சென்று எடுப்பதனால் அதிகளவான செலவுகள் ஏற்படுகின்றது என்றும் பாய் உற்பத்தியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

எனவே மணல் அகழ்வினால் எமது வாழ்வாதாரமும் பாதிக்கப்படுகின்றது.

இவற்றைத் தடுத்து நிறுத்தி எமது வாழ்வாதாரத்திற்கு வழி தாருங்கள் என அவர்கள் கோரிக்கை ஒன்றை முன்வைத்துள்ளார்கள். (5-4-315)

# சட்டவிரோத சாராயக்கடத்தல் மன்னார் பொலிஸாரால் முறியடிப்பு



(மன்னார்)

மன்னார் பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற புலனாய் தகவலுக்கு அமைவாக மன்னார் உதவி பொலிஸ் அத்தியட்சகர் கஸ்தூரி ஆராச்சியின் பணிப்பின் பெயரில் மன்னார் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எஸ். கிருஸாந்தன் தலைமையிலான, மன்னார் பொலிஸ் நிலையப் போதைப்பொருள் தடுப்பு பிரிவினர் நேற்று முன்தினம் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையின் போது பாரிய அளவிலான சட்டவிரோத சாராயக் கடத்தல் ஒன்று முறியடிக்கப் பட்டுள்ளது.

கொழும்பிலிருந்து முருங்கன் ஊடாக மன்னார் சவுத்பாருக்கு பாரவூர்தி ஒன்றில் பியர் போத்தல்களுக்கு மத்தியில் சூட்சுமமான முறையில் அனுமதிப்பத்திரமின்றி கொண்டு செல்லப்பட்ட 750 மில்லி லீற்றர் அளவு கொண்ட 660 சாராயப் போத்தல்களே மேற்படி மன்னார் தள்ளாடி பகுதியில் வைத்து மன்னார் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன.

அதே நேரம் குறித்த சம்பவத்துடன் தொடர்புடையோர் என்ற சந்தேகத்தின் பெயரில் அநுராதபுரத்தைச் சேர்ந்த வாகனத்தின் சாரதி மற்றும் உதவியாளர் கைது செய்யப்பட்டுள்ளதுடன் பாரவூர்தி மற்றும் மது போத்தல்கள் பொலிஸாரின்மேலதிக விசாரணையின் பின்னர் மன்னார் மாவட்ட நீதிமன்றத்தில் கையளிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றமைகுறிப்பிடத்தக்கது.(5-4-285)

# முல்லையில் மேம்படுத்தப்படும் நன்னீர் மீன்பிடித்திட்டம்

(கண்டாவளை)

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள சிறுகுளங்களின் கீழ் நன்னீர் மீன்பிடியை மேம்படுத்தும் வகையில் இவ்வாண்டு சுமார் 3 இலட்சத்து 78 ஆயிரம் மீன்குஞ்சுகள் விடப்பட்டன.

நன்னீர் மீன்பிடியினை வாழ்வதாரமாக கொண்டு வாழ்ந்து வரும் குடும்பங்களின் வருமானத்தை அதிகரிக்கும் வகையில் பல்வேறு திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள சிறுகுளங்களின் கீழ் பருவகால மீன்பிடியை மேம்படுத்தும் வகையில் மீன் குஞ்சுகள் விடப்பட்டுள்ளன.

முல்லைத்தீவு மாவட்டத்தின் குமுழமுனை, முள்ளியவளை, புதுக்குடியிருப்பு, துணுக்காய், உடையார்கட்டு, பாண்டியன்குளம் ஆகிய பிரதேசங்களுக்கு உட்பட்ட சுமார் 28 சிறிய குளங்களின் கீழ் சுமார் 3 இலட்சத்து 78 ஆயிரம் வரையான மீன்குஞ்சுகள் விடப்பட்டுள்ளன. (5-4-315)

# ஈரப்பெரிய குளத்தில் சிவில் அலுவலகம் திறப்பு



(குருமன்காடு)

வவுனியா, ஈரப்பெரியகுளம் பகுதியில் சிவில் பாதுகாப்பு திணைக்களத்தின் அலுவலகம் ஒன்று நேற்றுத் திறந்து வைக்கப்பட்டது.

சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தின் பணிப்பாளர் ஓய்வு பெற்ற ரியர் அட்மிரல் சரத் வீரசேகர இவ் அலுவலகத்தைத் திறந்து வைத்தார்.

சிவில் பாதுகாப்புப் பிரிவினரின் சேவைகளை விஸ்தரித்து மக்களுக்கான தேவைகளைப் பெற்றுக் கொடுக்கும் முகமாகக் இவ் அலுவலகம் திறந்து வைக்கப்பட்டது. அத்துடன் சிவில் பாதுகாப்பு திணைக்கள வவுனியா அதிகாரிகளுடனும் கலந்துரையாடல் ஒன்று இடம் பெற்றது.

இதில் சிவில் பாதுகாப்புத் திணைக்கள வவுனியா வலய கட்டளை அதிகாரி ருவான் மிலாவான், பொலிஸ் அதிகாரிகள், சிவில் பாதுகாப்புப் பிரிவினர் எனப்பலரும்கலந்து கொண்டனர். (5-4-250)

# சுயதொழில் முயற்சியாளர்களுக்கு

## நேர்முகத் தேர்வு



(நெளுக்குளம்)

கடந்த யுத்த காலத்தில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்டவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் முகமாகவும் பொதுமக்களின் சுயதொழில் செயற்பாட்டை அதிகரிப்பதற்காகவும் குறைந்த வட்டி வீதத்தில் கடனுதவிகளை வழங்குவதற்கான செயற்றிட்டத்தை இழப்பீட்டிற்கான அலுவலகம் கடந்த வெள்ளிக்கிழமை முன்னெடுத்துள்ளது.

இதனடிப்படையில் கடந்த வெள்ளிக்கிழமை வவுனியா மாவட்டத்திலிருந்து சுயதொழில் கடனுக்காக விண்ணப்பித்திருந்த 230 பேருக்கான நேர்முகத் தேர்வு இழப்பீடுகளுக்கான அலுவலகத்தினால் நடத்தப்பட்டது.

இதில் இழப்பீட்டுக்கான அலுவலகத்தின் உதவிப்பணிப்பாளர் திஸ்ஸநாயக்க, மாவட்ட உதவி பிரதேச செயலாளர் சபர்ஜா மற்றும் இலங்கை வங்கி முகாமையாளர் எனப்பலரும் கலந்துகொண்டனர்.(5-4-299)

# இராசிபலன்

14.09.2020
ஆவணி 29, திங்கட்கிழமை
துவாதசி முன்னிரவு 10.36 மணிவரை
பூசம் பிற்பகல் 1.40 மணிவரை
சுபநேரம் 12.03-1.33 மணிவரை
இராகுகாலம் 7.33-9.03 மணிவரை
சந்திராஷ்டமம்:- பூராடம், உத்தராடம்
சந்நியஸ்ஸத மஹாளயம் வளவன்

**மேஷம்** – வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ள அழைப்புகள் வந்து சேரலாம், பயணங்கள் கைகூடும்.

**ரிஷபம்** – நினைத்ததை முடித்து நிம்மதி காணும் நாள், பொதுவாழ்வில் கௌரவம், அந்தஸ்து உயரும், உடல்நலனில் கவனம் தேவை, சுப நிகழ்வுகளில் புதியவர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

**மிதுனம்** – வழிபாடு காரிய வெற்றி தரும், உன்னதமான வாழ்வுக்கு அடித்தளம் அமைக்கும் நாள், சேமிப்பை அதிகரிக்கும் எண்ணம் உருவாகும், சுப செய்திகள் வந்து சேரலாம்.

**கடகம்** – கொடுக்கல் - வாங்கல்களில் கவனம் தேவை, கௌரவமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், எப்படி நடக்குமோவென நினைத்த காரியம் நல்லவிதமாக அமையலாம்.

**சிம்மம்** – தொழில் நலன்கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், திடீர் பயணங்கள் இடம்பெறலாம், சுபகாரியச் செலவுகள் இடம்பெறும் வாய்ப்புண்டு, சயனசுகக் குறைவான நாள்.

**கன்னி** – செல்வநிலை உயரும் நாள், தொழிலில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, வருங்கால நலன்கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம்.

**துலாம்** – தேடிச் சென்றவர்கள் நாடி வந்து உதவும் நாள், செய்தொழில் மேன்மையுண்டு, பிரியமான சிலரின் சந்திப்பு இடம்பெறலாம், போசன சுகமுண்டு.

**விருச்சிகம்** – சுணங்கிய காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், சுறுசுறுப்போடு செயற்படுவீர்கள், புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள், தொலைபேசி வழித்தகவல் மகிழ்ச்சி தரும்.

**தனுசு** – எதையும் சிந்தித்துச் செயற்படுத்த வேண்டிய நாள், மனதில் இனம்புரியாத கவலைகள் தோன்றி மறையும், பிரயாண பயமுண்டு, கௌரவக் குறைவான நாள்.

**மகரம்** – விட்டுப்போன உறவுகள் மீண்டும் வந்து சேரலாம், புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் மேலோங்கும் நாள், நண்பர்களால் வளர்ச்சி கூடும் நாள்.

**கும்பம்** – பொல்லாதவர்கள் உங்களை விட்டு விலகலாம், தன்னம்பிக்கை துளிர்விடும் நாள், தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள், எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும்.

**மீனம்** – தொலைபேசி வழியில் பொன்னான செய்திகள் வந்து சேரலாம், பிள்ளைகளால் பெருமை காண்பீர்கள், தொழில் வளர்ச்சி ஏற்படலாம், வருமானம் திருப்திதரும்.

**நீ நீயாக இருக்கும் போது நீ மகிழ்ச்சியாக இருப்பாய்**

# நியூ டயமன்ட் கப்பல் தீ பரவல்; ஆராய செல்லும் சி.ஐ.டி.குழுவினர்

(கொழும்பு)

தீப்பிடித்த எம்.டி.நியூ டயமண்ட் கப்பல் தொடர்பாக ஆராய்வதற்காக அக்கப்பலின் கப்டனை இன்று திங்கட்கிழமை சந்திக்கவுள்ளதாகக் கடல் சுற்றுச்சூழல் பாதுகாப்பு ஆணையகம் (MEPA) தெரிவித்துள்ளது.

குறித்த தீயணைப்பு நடவடிக்கையில் ஈடுபட்ட அனைத்து தரப்பினருடனும் கலந்துரையாடிய பின்னர், கப்பல் தொடர்பான இறுதி முடிவு எடுக்கப்படும் என அதன் நிறைவேற்றுப் பணிப்பாளர் ஜெனரல் டாக்டர் டர்னி பிரதீப்குமார தெரிவித்துள்ளார்.

மேலும், கப்பலுக்கு எந்த விதமான சேதமும் இல்லை என்பது உறுதி செய்யப்பட்டுள்ளதால், கப்பல்கரைக்கு கொண்டு வரப்படும் ஆபத்து இல்லை என்றும் குறித்த கப்பலில் தீ பரவியமைக்கான காரணங்கள் கண்டறியப்பட்ட பின்னர் கப்பல் தொடர்பாக மேலும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் பிரதீப்குமார சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை தீப்பிடித்த எம்.டி.நியூ டயமண்ட் கப்பல் தற்போது இலங்கையின் கிழக்கு கடற்கரையிலிருந்து 45 கடல் மைல் தொலைவில் உள்ளது.

இழுபறிப் படகுகளைப் பயன்படுத்தி ஆழ்கடலில் கப்பல் பாதுகாப்பாக இழுக்கப்படுவதாகக் கடற்படை மேலும் தெரிவித்தது.

இதற்கிடையில், எம்.டி.நியூ டயமண்ட் கப்பலின் கப்டன் மற்றும் குழுவினரிடமிருந்து அறிக்கை பெற சி.ஐ.டி.அதிகாரிகள் உள்ளடக்கிய குழு நியமிக்கப்பட்டுள்ளது.

தீப்பிடித்த எம்.டி.நியூ டயமண்ட் கப்பல் குறித்து விசாரணை நடத்துமாறு கொழும்பு தலைமை நீதவான் லங்கா ஜெயரத்ன அண்மையில் சி.ஐ.டிக்கு உத்தரவிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (2)

# உரமானியத்திற்கு 7 ஆயிரம் கோடி நிதி ஒதுக்கீடு



(கொழும்பு)

உர மானியம் வழங்கும் வேலைத்திட்டம் அடுத்த மாதம் ஆரம்பமாகவுள்ளது.

பெரும்போகத்தில் நெற் செய்கையாளர்கள் ஒன்பது இலட்சம் பேருக்கும் வேறு பயிர்ச்செய்கையில் ஈடுபடும் 12 இலட்சம் பேருக்கும் உரமானியம் வழங்கப்படவிருப்பதாக உர செயலகத்தின் பணிப்பாளர் மஹேஷ் கம்பன்பில தெரிவித்தார்

நெற் செய்கைக்குத் தேவையான உரம் இலவசமாக வழங்கப்படவுள்ளது. மரக்கறி மற்றும் ஏனைய பயிர்களுக்குத் தேவையான உரம் விநியோகிக்கப்படவுள்ளது. இதற்கமைவாக உர மானியத்திற்காக அரசாங்கம் ஏழாயிரம் கோடி ரூபாவை ஒதுக்கியுள்ளது என்று உர செயலகத்தின் பணிப்பாளர் மஹேஷ் கம்பன்பில மேலும் தெரிவித்தார். (2)

# கடலில் மூழ்கி மாணவன் உயிரிழப்பு

(ஏறாவூர்)

மட்டக்களப்பு பாசிக்குடா கடலில் மூழ்கி பாடசாலை மாணவன் ஒருவன் பலியானதாக கல்குடா பொலிஸார் தெரிவித்தனர்.

பாசிக்குடா யானைக்கல் கடற்பிரதேசத்தில் நேற்று முன்தினம் மாலை மீட்கப்பட்ட சடலம் வாழைச்சேனை செம்மண்ணோடை 4 ஆம் பிரிவு ஹிஸ்புல் லாஹ் வீதியை அண்டி வசிக்கும் ஜவாத் முஹம்மத் ரிஸ்னி என்பவருடையது என அடையாளம் காணப்பட்டுள்ளது.

நண்பர்கள் இருவருடன் கடலில் நீராடிக்கொண்டிருந்தபோது கடலில் இருக்கும் கல்முனையில் சிக்குண்டே இவர் நீரில் மூழ்கிய நிலையில் உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கல்குடா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (2)

# கந்தகாடு தனிமைப்படுத்தலில் இன்னும் 11 பேர் மட்டுமே

(கொழும்பு)

கொரோனாத் தொற்றுச் சந்தேகத்தில் கந்தகாடு தனிமைப்படுத்தல் நிலையத்தில் இருந்து தனிமைப்படுத்தலை முழுமையாக நிறைவு செய்த மேலும் 638 பேர் நேற்றுத் தமது வீடுகளுக்குச் சென்றனர்.

கந்தகாடு தனிமைப்படுத்தல் நிலையத்தில் இருந்து சுமார் 638 பேர் தமது தனிமைப்படுத்தல்களை முழுமையாக நிறைவு செய்துள்ளதோடு 11 பேர் மட்டும் அங்கு தனிமைப்படுத்தலில் இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் நேற்றுக் காலை நாட்டில் அமைக்கப்பட்டுள்ள ஏனைய தனிமைப்படுத்தல் நிலையங்களில் இருந்து 13 பேர் வீடு திரும்பியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2)

# விமான நிலையம் திறப்பு காலவரையறையின்றி ஒத்திவைப்பு

(கொழும்பு)

சுற்றுலாப் பயணிகளுக்கும் வியாபார விவகாரங்களுக்கும் இலங்கை வருபவர்களுக்கும் விமான நிலையத்தினை திறக்கும் திகதியை, காலவரையறையின்றி ஒத்திவைத்திருப்பதாக இலங்கை அரசு அறிவித்துள்ளது என கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அந்தவகையில், விமான நிலையத்தை மீண்டும் திறப்பது குறித்து அரசு இன்னும் இறுதி முடிவு எடுக்கவில்லை என்று சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

சுகாதார அமைச்சகம் மற்றும் கொரோனாத் தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மையம் (NOCPC) ஆகியவற்றின் ஒப்புதல் பெற்ற பின்னரே விமான நிலையம் மீண்டும் திறக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

ஓகஸ்ட் மாத நடுப்பகுதியில் விமான நிலையம் மீளதிறக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் பின்னர் அது செப்டெம்பர் மாதத்திற்கு பிற்போடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (2)

# உள்ளூராட்சி சபைகளின் நிர்வாகமும் பணிப்பொறுப்புகளும் - ஒரு தொகுப்பு

17

கலாநிதி க.தவலிங்கம்
தவிசாளர்–எல்லை நிர்ணய ஆணைக்குழு,
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.



● ஒரு குறித்த உள்ளூராட்சி சபையின் எல்லைக்குள் உள்ள அசைக்கமுடியாத சொத்தின் உரிமையாளர்.

● ஒரு குறிப்பிட்ட உள்ளூராட்சி சபையின் எல்லைக்குள் உள்ள வீட்டின் அல்லது காணியின் குத்தகைக்காரர்

● குறித்த உள்ளூராட்சிசபையின் எல்லைக்குள் உள்ள வாடகை வீட்டுக்காரர்

● குறித்த உள்ளூராட்சி சபையின் எல்லைக்குள் உள்ள அரசிற்குச் சொந்தமான வீட்டின் அல்லது காணியின் குத்தகைக்காரர்

● குறித்த உள்ளூராட்சி சபையின் எல்லைக்குள் உள்ள அசைக்கமுடியாத சொத்தின் கூட்டு உரிமையாளர் (இணை உரிமையாளர்)

வருடாந்தம் முறையான உள்ளூராட்சிசபை இணக்கப்பாட்டுடன் வரி விதிக்கப்பட வேண்டும். அவற்றிற்கு துணை விதிகள் ஆக்கப்படல் அவசியமாகும்.

### மதிப்பீட்டு வரி சம்பந்தமான அறிவித்தல்

அ. சொத்தினை மதிப்பீடு செய்ததன் பின்னர் ஒரு மதிப்பீட்டு அறிவித்தல் உரிய சொத்தினுடைய உரிமையாளர், கூட்டு உரிமையாளர் குத்தகைகாரர் அல்லது குடியிருப்பாளருக்கு டிசம்பர் மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் அவ்வாண்டில் செலுத்தப்பட வேண் டிய மதிப்பீட்டு வரி பற்றி அனுப்பப்படுகின்றது. இவ்வறிவித்தல் சொத்தில் குடியிருப்பவரிடம் கையளிக்கப்படும் சொத்தின் மீது அல்லது கட்டடத்தின் மீது அறிவித்தலை ஒட்டிவிடுதல் கூட அறிவித்தலை கையளித்ததற்கான ஒரு முறையாகக் கருதப்படும்.

ஆ. மதிப்பீட்டுக் கட்டண அறிவித்தல் சிங்கள, தமிழ், ஆங்கில மொழிகளில் இருக்க வேண்டும்.

இ. இவ்வறிவித்தல் பின்வருவனவற்றை உள்ளடக்க வேண்டும்.

- உரிமையாளருடைய பெயர்
- மதிப்பீட்டு இலக்கம்
- சொத்து அமைந்துள்ள வீதியின் பெயர்
- வருடாந்தப் பெறுமதி
- காலாண்டுக் கொடுப்பனவு
- கொடுப்பனவு செலுத்த வேண்டிய திகதி
- உரிய காலத்திற்கு முன் பணம் செலுத்துவதற்குரிய கழிவு
- மதிப்பீடு சம்பந்தமான ஆட்சேபணைகளை சமர்ப்பிப்பதற்குரிய காலம்
- கொடுப்பனவு உரியவேளையில் செய்யப்படாவிட்டால் விதிக்கப்படும் ஒரு அபராதம் சம்பந்தமான விபரங்கள்.

குறிப்பு:- மதிப்பீட்டுவரி காலாண்டுக்கு ஒரு தடவை அல்லது முழுவருடத்திற்கும் செலுத்தப்பட முடியும். முழு ஆண்டுக்குமான கொடுப்பனவு குறிப்பிட்ட வருடத்தின் முதல் மாதத்தில் செலுத்தப்பட்டால் 10வீதத்தால் கழிவு வழங்கப்படுகிறது. காலாண்டுக்குரிய கொடுப்பனவு காலாண்டின் முதல் மாதத்தில் செலுத்தப்பட்டால் 5% கழிவு வழங்கப்படுகின்றது.

குறிப்பு:- மதிப்பீட்டுக்கு எதிரான எல்லா முறைப்பாடுகளும் எழுத்து மூலமான ஆட்சேபணையாக இருக்கவேண்டும். ஏனெனில் முறைப்பாட்டை தெரிவித்த நபர் நீதிமன்றம் மூலமாக சட்டதீர்வை நாடிச்சென்றால் மதிப்பீட்டுக்கு எதிரான வழக்கு நடைபெறுகையில் புதிய ஆட்சேபனை தெரிவிக்கப்பட முடியாது.

குறிப்பு:- ஒரு எழுத்து மூலமான ஆட்சேபனை பதிவுத் தபால்மூலம் அல்லது நேரடியாக சமர்ப்பிக்கப்படல் வேண்டும். ஆட்சேபனைக் கடிதம் ஏற்றுக் கொள்ளப்பட்டதைக் குறிப்பிட்டு உள்ளூராட்சி சபையால் ஒரு கடிதம் அனுப்பப்படல் வேண்டும். ஆட்சேபனைப் புத்தகத்தில் பதியப்படும். ஆட்சேபனை தெரிவித்த நபரை விசாரணைக்கு சமூகம் அளிக்கும்படி எழுத்து மூலம் அறிவிக்கப்படுவார். விசாரணையின் திகதி, இடம், நேரம் என்பன அறிவிக்கப்படும். அதன்பின் ஒரு விசாரணை நடத்தப்படும். ஆட்சேபனை தெரிவித்த நபர் மதிப்பீடு சம்பந்தமாக தெரிவித்த முறைப்பாடுகளை நிரூபிக்க வேண்டும். விசாரணை முடிவுகள் ஆட்சேபனைப் புத்தகத்தில் பதியப்படும். வரியைக் குறைப்பதற்கு தீர்மானம் எடுக்கப்பட்டால் மதிப்பீட்டு பதிவு அதற்கேற்ப திருத்தப்படல் வேண்டும். ஆட்சேபனை தெரிவித்த நபருக்கு விசாரணை சபையால் விசாரணை முடிவு அறிவிக்கப்படும்.

குறிப்பு:- மதிப்பீட்டு வரிக் கொடுப்பனவைச் செலுத்துதல் நீதிமன்ற வழக்கு அல்லது மதிப்பீட்டுக்கு எதிரான ஆட்சேபனை காரணமாக தாமதப்பட முடியாது. முறைப்பாடு செய்கின்ற நபர் மதிப்பீட்டு வரியைச் செலுத்தவேண்டும் முறைப்பாடு செய்த நபருக்குச் சார்பாக நீதிமன்றத் தீர்ப்பு வழங்கப்படும் போது அவர் மேலதிகமாகச் செலுத்திய கொடுப்பனவு மீள் வழங்கப்படும்.

● மதிப்பீட்டு வரிக்கட்டணம் செலுத்தப்படாதவிடத்து பின்வரும் நடவடிக்கைகள் வரியிறுப்பாளருக்கு எதிராக பிரதேச சபையால் எடுக்க முடியும்.

### பிரதேச சபைப் பிரதேசம்:-

1. கொடுப்பனவு செலுத்தப்படாதவிடத்து ஒவ்வொரு காலாண்டு இறுதியில் 15% மிகை அறவீடு தரிசு நிலத்திற்கும் வதிவிடச் சொத்திற்கும் அறவிடப்படுவதுடன் 20% மிகைஅறவீடு தரிசுநிலம் வதிவிடச் சொத்து தவிர்ந்த சொத்துக்களுக்கு அறவிடப்படும்.

2. வருமானவரி அலுவலருக்கு இடர் உதவி ஆணைப்பத்திரம் வழங்கப்படும்.

3. இடர் உதவி ஆணைப்பத்திரம் விநியோகிக்கப்பட்ட பின்னர் கொடுப்பனவு செலுத்தப்படாவிட்டால் இறுதி அறிவித்தல் சொத்தின் உடைய உரிமையாளருக்கு பிறப்பிக்கப்படும்.

4. இவ்வறிவித்தல் விடுக்கப்பட்ட பின்னர் கொடுப்பனவு செய்யப்படாவிடின் காணி அல்லது சொத்தினுள் உள்ள அசையும் சொத்துக்கள் சுவீகரிக்கப்பட முடியும். அசையும் சொத்துக்களுக்கு காணியின் உடைய உரிமையாளர் உரிமை கொண்டிருக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை.

5. அசையா சொத்து அரசாங்கத்தின் உடைமையாக உள்ள சந்தர்ப்பத்தில் அரசின் உடைமைக்குள் உள்ள அசையும் சொத்துக்களும் தங்கியிருப்பவருடைய பிரத்தியேக அசையாச் சொத்துக்களும் சுவீகரிக்கப்பட முடியும்.

6. சுவீகரிக்கச் செல்கின்ற வேளையில் ஒரு வீடு அல்லது கட்டடம் பூட்டியிருப்பின் பகல் வேளையில் பூட்டை உடைத்து திறந்து அதனைச் சுவீகரிப்பதற்கு பிரதேசசபைக்கு அதிகாரம் உண்டு.

7. சொத்து சுவீகரிப்பின் பின்னர் பின்வரும் கொடுப்பனவுகள் செலுத்தப்படும் போது அச்சொத்து உரிமையாளரிடம்/ குடியிருப்பவரிடம் கையளிக்க.படமுடியும்

● இறுதி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள பணத்தொகை

● சுவீகரிக்கப்பட்ட சொத்தின் அகற்றல் அறவீடாக பிரதேசசபையால் நிர்ணயிக்கப்படும் தொகை

● சுவீகரிக்கப்பட்ட சொத்தின் பாதுகாப்புக் கட்டணமாக பிரதேச சபையால் தீர்மானிக்கப்படும் ஒரு தொகை.

8. சுவீகரிக்கப்பட்ட சொத்தின் உடைய உரிமையாளர் உரிய கொடுப்பனவைச் செலுத்தி சொத்தினை திரும்பவும் பெற்றுக் கொள்ளாவிட்டால் அச்சொத்து ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

9. ஒரு வர்த்தமானி அறிவித்தல் அல்லது பிரதேச சபை பிரதேசத்திற்குள் விநியோகிக்கப்படும் அறிவித்தலின் ஊடாக ஏல விற்பனை அறிவித்தலை விடுக்கும் முன்னர் சொத்தினை மீட்டுக் கொள்ள ஒரு கால அவகாசம் வழங்கப்படுகிறது.

10. மேற்குறிப்பிட்ட கால அவகாசத்தின் போது சொத்து மீட்கப்படாவிட்டால் அது ஏலத்தில் விற்கப்படும்.

11. ஏல விற்பனையின் பின்னர் 12 மாத காலத்திற்குள் ஏல விற்பனை மூலம் பெற்ற மேலதிக பணத்திற்கு ஒருவர் உரிமை கோராவிட்டால் அந்த பணத்தொகை பிரதேச சபை நிதியில் வைப்பிலிடப்படும்.

**நகரசபைப் பிரதேசம்:-** இப்பிரதேசத்திற்கும் பிரதேச சபை பிரதேசத்திற்குரிய நடைமுறையே பின்பற்றப்படுகிறது. மாநகர சபைச் சட்டத்தின் 170ஆம் பகுதி நகர சபைச் சட்டத்தின் 252 இல் இருந்து 266ஆம் பிரிவுகளை அடிப்படையாகக் கொண்டு நகர சபையால் நடவடிக்கை எடுக்கப்பட முடியும்.

**மாநகர சபைப் பிரதேசம்:-** இப்பிரதேசத்திற்கும் பிரதேச சபை பிரதேசத்திற்குரிய நடைமுறையே பின்பற்றப்படுகிறது. வரியிறுப்பாளருக்கு எதிராக மாநகர சபையால் மாநகர சபைச் சட்டத்தின் 252ஆம் பிரிவின் கீழ் நடவடிக்கை எடுக்கப்பட முடியும்.

உள்ளூராட்சி நிறுவனமொன்றால் காலத்துக்குக் காலம் சபையால் அவசியம் எனக் கருதப்படும் சந்தர்ப்பங்களில் அமைச்சரின் அனுமதியுடன் அதிகாரப் பிரதேசத்தில் அமைந்துள்ள அனைத்து காணிகளிலும் மற்றும் எவ்வகையிலான குடியிருப்புகளினதும் வருடாந்த பெறுமதியின் அடிப்படையில் ஏதேனுமொரு மதிப்பீட்டு வரியை அல்லது மதிப்பீட்டு வரி தயாரிப்பதற்காக சொத்து மதிப்பீடொன்றைச்செய்தல் வேண்டும். (சட்டக்குறிப்பு மா.ந.ச. கட்டளைச் சட்டத்தின் 230(1) மற்றும் ந..ச. கட்டளைச் சட்டத்தின் 160 (1))

உள்ளூராட்சி நிறுவனங்களின் அதிகாரத்துக்குட்பட்ட பிரதேசமொன்றில் அமைந்துள்ள ஏதேனுமொரு அசையாச் சொத்து அல்லது அசையாச் சொத்து வகையொன்றின் வருடாந்த பெறுமதியின் அடிப்படையில் அறவிடப்படும் மதிப்பீட்டு வரி வீதத்திற்கு அவ்விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரின் அனுமதியைப் பெற்றுக் கொள்ள வேண்டும். (சட்டக் குறிப்பு - மா.ந.ச. கட்டளைச் சட்டத்தின் 230(1) மற்றும் ந.ச. கட்டளைச் சட்டத்தின் 160 (1))

வரி விதிப்பு தொடர்பில் சபை தீர்மானமொன்றை மேற்கொண்டு, வருடாந்த வரி விதிப்பை மேற்கொள்ள வேண்டும். உள்ளூராட்சி மன்றமொன்றின் நிதியாண்டு ஜனவரி முதலாம் திகதி ஆரம்பமாகி உரிய வருடத்தின் டிசெம்பர் 31 ஆம் திகதி முடிவடையும். சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுக்கு ஏற்ப, 'மதிப்பீட்டு வரி அல்லது மதிப்பீட்டு வரிகள் 12 மாதங்களுக்கு மேற்படாமல் ஏதேனுமொரு கால எல்லைக்குள் காணப்படல் வேண்டும். (மா.ந.ச. 230(2) (A)). அவ்வாறே ஏதேனுமொரு ஆண்டுக்காக மதிப்பீட்டு வரி விதிக்கப்படுகையில் சொத்துக்களின் வருடாந்த பெறுமதியை தொடர்ந்துவரும் வருடத்திற்கு ஏற்றுக் கொள்வதற்கான சபை உடன்படிக்கையொன்றை மேற்கொள்ள வேண்டும். சொத்துக்களின் மதிப்பீடு ஒரு வருடத்துக்கு மாத்திரம் அமுலில் இருப்பதே அதற்கான காரணமாகும். அதனால், ஏதேனுமொரு வருடத்துக்காக விதிக்கப்பட்ட மதிப்பீட்டு வரி, உரிய ஆண்டுக்கு மாத்திரமே செல்லுபடியாகும். இக்காரணத்தால் மதிப்பீட்டு வரி வருடாந்தம் விதிக்கப்படுதல் சட்டரீதியான அவசியமாகும்.

குறிப்பு:- கலாசார, கல்விப் பணிகளுக்காக ஈடுபடுத்தப்படுகின்ற காணிகளையும் இலவசக் கல்விச் செயற்பாடுகளுக்கான காணிகளையும் ஆதன வரியிலிருந்து விடுவிக்கலாம். (134). ஆதனவரியைப் பிணையாக வைத்து பிரதேச சபைகள் கடன் பெறலாம். (அரசாங்கத்திடமிருந்து, ஆட்களிடமிருந்து அல்லது கூட்டுத்தாபனங்களிடமிருந்து) இதன் பொருட்டு அமைச்சரின் அங்கீகாரம் தேவை. (172)

### 02.விசேட ஆதன மதிப்பீட்டு வரி

நகர சபைப் பிரதேசம்:- நகர சபைச் சட்டத்தில் உள்ள 129 மற்றும் 130 பிரிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ள ஒழுங்குகள் மற்றும் மேற்படி ஆதன மதிப்பீட்டு வரியின் கீழ் காட்டப்பட்டுள்ள அறவிடல். பிரிவுகள் இதற்கும் ஏற்புடையதாகும்.

(தொடரும்)

# தென்புலத்தார்க்கு செய்யவேண்டிய மஹாளயம்

**உரைசேரு மெண்பத்து நான்கு நூறாயிரமாம் யோனிபேதம்**
**நிரை சேரப்படைத் தவற்றினுயிர்க் குயிராயங்கங்கே நின்றான் கோயில்**
**வரைசேரு முகின் முழுவ மயில்கள் பல நடமாட வண்டு பாட**
**விரைசேர் பொன்னி தழிதரமென் காந்தள்கை யேற்தமிழலையாமே**

என்ற திருஞானசம்பந்தர் சுவாமி அவர்களின் பாடலின் படி. $1.19X10^{-5}$ நிகழ்தகவில் தான் மனிதராக பிறக்கிறோம். இந்த மனிதப்பிறப்பென்பது ஆறாவது அறிவாகிய பகுத்தறிவுடன் கூடிய அருமையான இறைவனின் படைப்பாகும். இந்த ஆறாம் அறிவினை பயன்படுத்தி நிலையான இன்பம் (பேரின்பம்). நிலையில்லாத இன்பம் (சிற்றின்பம்) போன்றவற்றினை பிரித்தறிந்து பேரின்பப் பெருவாழ்வினை அடையும் வழியினை கடைப்பிடித்து இவ் வையகத்தில் வாழ்வாங்கு வாழ்ந்து மீண்டும் பிறப்பில்லா பெருவாழ்வினை அடைவதே பிறவிப்பயனாகும்.

இதனையே வள்ளுவரும்
**வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வான் உறையும்**
**தெய்வத்துள் வைக்கப்படும்**

ஒருவர் இல்லறத்தில் வாழ்ந்துக்கொண்டு இருக்கும் பொழுது அவரால் தெய்வீக நிலையை அடைய முடியுமா? என்ற கேள்விக்கு வள்ளுவர் அழகாகப் பதிலளித்துள்ளார் இந்தக் குறளில். ஒருவர் இல்லற வாழ்க்கையில் வாழ்வதற்கான அடிப்படை நெறிகளை கடைப்பற்றி நெறிதவறாது வாழ்ந்தால். அதாவது தமிழ் வேதங்களாகிய அறம். பொருள். இன்பம். வீடு என்ற அடிப்படையில் அறவழி நின்று பொருளீட்டி இன்பமாக வாழ்ந்து வீடு பெறுதல் என்ற வாழ்க்கை முறையினை கடைப்பிடித்து வாழ்ந்தால் அவர் வானுறையும் தெய்வத்துக்கு நிகராக வைக்கப்படுவர் என்பது பொருள்.

அப்படி உயிர் இறைவனாகும் தன்மையை கொண்ட அற்புதப் பிறப்பே மனிதப் பிறப்பு. இந்தப் பிறப்பினை அதற்காக பயன்படுத்தாமல் ஐம்பொறிகளின் வழி நின்று. உலகியலில் தொலைந்து. சாதாரண முலையூட்டியாக வாழ்ந்து மடியப் போகிறோம்என்ற எண்ணம் எப்போது வருகிறதோ. அப்போது தான் நீங்கள் மனிதப் பிறவியை உணருகிறீர்கள் எனலாம்.

**மனிதரை வழிபடும் வகைகள் மற்றும் சிறப்புகள்**

தமிழர் மரபில் மூத்தோர் வழிபாடு. குரு வழிபாடு மற்றும நீத்தார் வழிபாடு என்று மூன்று வகையாக மனித வழிபாட்டு முறையைப் பார்க்கலாம்.

**மூத்தோர் என்பவர்,** எங்களுக்கு முன்தோன்றி இப் பூவுலகில் வாழ்ந்து வாழ்வியல் அனுபவங்களை பெற்று. அவற்றினைப் பிரித்தறிந்து. அவற்றினை உணர்ந்தவர்களாக வாழ்கின்றனர். இப்படியான மூத்தோரை வழிபடுதல் தமிழர் மரபாக இருந்து வருகிறது. மூத்தோரிலே முதன்மை பெறுபவர்கள் பெற்றோர்கள் மற்றும் அவர்களின் பெற்றோர்கள். வாழும் தெய்வங்களான இவர்களை நாங்கள் வணங்கி. அவர்களின் ஆசிகளைப் பெற்று எமது வாழ்க்கையினை கொண்டு செல்வதே சிறப்பான எளிய வாழ்வியல் தந்திரமாகும்.

**குரு வழிபாடு**

தெளிவினை. ஞானத்தினை. அறிவினை. ஆற்றலினை அடைவதற்கு ஞானகுரு நிச்சயம் தேவை. சாதாரண மனிதராக பிறந்தவர்கள் இந்த வழியில் சென்று ஞானத்தினை பெறுவது இலகுவானது. அத்துடன் நமக்கு கல்வியினை தரும். கலைகளை ஊடு கடத்தும். அறிவுரைகளை வழங்கும் பெரியோர்களும் குரு எனுமிடத்தில் வருவார்கள். எமக்கு வழிகாட்டுபவர்களை வழிபடுவதும் தமிழர் பண்பாடாக இருந்து வருகிறது.

**நீத்தார் வழிபாடு வழமை முறைகள்**

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து மடிந்தவர்களை வழிபடும் மரபு பண்டைய காலத்தில் இருந்தே இருந்து வருகிறது. சங்ககால முறைமைக்கு வருவதற்கு முன்னர் சங்க இலக்கியத்தில் குறிப்பிடப்படுகின்ற ஆதித் தமிழர்கள் குமரிக் கண்டத்தில் / தென்னாட்டில் உயிர் நீத்தவர்களை வழிபடுகின்ற வழமைகளில் இருந்தது என்பதற்கு இலக்கியச் சான்றுகள் உள்ளன.

**ஆவும், ஆனியற் பார்ப்பன மாக்களும்,**
**பெண்டிரும், பிணியுடையீரும் பேணித்**
**தென்புலம் வாழ் நர்க்கு அருங்கடன் இறுக்கும்**
**பொன்போற் புதல்வர்ப் பெறா அதீரும்,**

பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி போருக்குப் போகுமுன் பசு. பார்ப்பனர் (குறிபார்ப்பார். கணி (சோதிடம்) பார்ப்பார் என்போர்). பெண்டிர். பிணியுடையோர். ஆண்பிள்ளை இல்லாதோர் ஆகியோரைப் பாதுகாவலான இடத்திற்குச் செல்லுமாறு அறைகூவிப் பின்னர்ப் போர் செய்தான் என்று நெட்டிமையார் கூறுகிறார்.

**இங்கே இந்த வரிகளை கவனித்தால்**
**தென்புலம் வாழ்நர்க்கு அருங்கடன் இறுக்கும்**
**பொன்போற் புதல்வர்ப் பெறா அதீரும்**

இறந்த முன்னோருக்குக் கடன் செலுத்தும் குழந்தைப் பேறு இல்லாதவர்கள் என குறிப்பிடப்படுகிறது. அத்துடன் இப்பாடலில் பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதியை, பஃறுளி ஆற்று மணலினும் பலநாள் வாழ்க என்று நெட்டிமையார் வாழ்த்துவதிலிருந்து இவர் பஃறுளி ஆறு கடலால் கொள்ளப் படுவதற்கு முந்திய காலத்தவர் என்பது தெரியவருகிறது.

## செப்.2-செப்-17, 2020



முன்னோர் வழிபாடானது தொன்று தொட்டு தமிழர் வாழ்வியலில் பின்னிப்பிணைந்திருக்கிறது.

**மெழுகு செய்பட மிசைத்**
**திண் நிலை மருப்பின் ஆடு தலையாக**
**விண் ஊர் புதிரி தரும் வீங்கு செலல் மண்டிலத்து -**
**நெடுநல் வாடை - 161**

மெழுகு தேய்த்த மேல் பகுதியில் வலிமையான கொம்புடன் ஆடு (மேடராசி) முதலாக விண்ணில் ஊர்ந்து திரியும் ஓவியம் இருந்தது. இதிலிருந்து மேடஇராசி தான் முதலாவது வீடாக / இராசியாக குறிக்கப்படுகிறது.

சூரியனின் பயணத்தினை இரண்டாகப் பிரிக்கலாம். இதில் சூரியன் மகர இராசியில் இருந்து மிதுன இராசி வரைக்கும் திங்களில் (மாதத்தில்) சுறவம் (தை) முதல் ஆடவை (ஆனி) வரை இருக்கும் காலம் ஆண்டுப் பகல் படைப்புருவாக்க காலமெனவும் அதாவது சூரியன் தெற்கில் இருந்து வடக்கு நோக்கி செல்லும் காலம் (வட புலப் பயணம் - உத்தராயணம்) எனவும் பின்னர் சூரியன் கடகத்தில் இருந்து தனுசு இராசி வரைக்கும் திங்களில் (மாதத்தில்) கடகத்தில் (ஆடியில்) இருந்து சிலை (மார்கழி) வரை ஆண்டிரவு ஒடுக்க காலம் அதாவது வடக்கில் இருந்து தெற்கு நோக்கி செல்லும் காலம் (தென் புலப் பயணம் - தக்ஷிணாயணம்) எனவும் பிரிக்கலாம்.

தென்புலப் பயணம் தூய்மைப்படுத்துவதற்கானது. வட புலப் பயணம் ஞானமடைதலுக்கானது என்று மரபு வழி பின்பற்றப்படுகிறது. பீஷ்மர் அம்புப்படுகையில் சிலைத் திங்களில் (மார்கழியில்) இருந்து சுறவத்திங்கள் (தை) வரை உயிரை விடாமல் வட புலப் பயணம் ஞானமடைதலுக்கானது என்று காத்திருந்து உயிரை விட்டார். ஏனெனில், இயற்கையின் இந்த மாற்றத்தை உபயோகித்து அவர் தன்னிலை மாற்றத்தை சாத்தியமாக்க விரும்பினார். அதுபோல சித்தாத்தர் (புத்த பெருமான்) அவர்களும் வட புலப்பயணத்தின் மூன்றாவது நிறை மதி நாளில் ஞானம் அடைந்தார்.

அத்துடன் இந்த காலப்பகுதியில் வளர்ச்சி. செழிப்பு அறுவடைக்கு உகந்த காலமாகும். தமிழர் திருநாளாகிய தைப் பொங்கலும் வட பயண முதல் நாளிலே கொண்டாடப்படுகிறது.

வடபுலப் பயணத்தில் வரும் மறைமதியான துசுறவ மறைமதி (தை அமாவாசை) எனவும் தென் புலப் பயணத்தில் வரும் மறைமதியானது கடக மறைமதி (ஆடி அமாவாசை) எனவும் கொண்டாடப்படுகிறது.

நீத்தார்நாள் (இறந்த தினம்) மற்றும் நீத்தல் பிறை நாள் (திதி) வழிபாடுகள்

உங்கள் அப்பாவோ. அம்மாவோ. உடன் பிறந்தோரோ அல்லது உறவினரோ சிவபுரம் அடைந்தால் (மறைந்தால்). அது நிச்சயமாக வீடு பெறுதலே. அவர்களின் ஆன்மாவைப் பொறுத்தவரை உடம்பெனும் சிறையில் இருந்து விடுதலை பெற்று எல்லாம் வல்ல பரம் பொருளின் பாதார விந்தங்களில் சென்றடைகிறார்கள். அவர்கள் நாள். இறந்த நேரம் என்ன பிறைநாள் (திதி) இருக்கிறதோ அதுதான் அவர்களின் இறந்த காலத்தினைக் குறிக்கும்பிறை நாள் கணக்கு (திதி).

பிறைநாள் (திதி) என்பது நிலவின் அசைவில் வைத்து கணிக்கப்படுகிறது. பதினாறு பிறை நாட்கள் இருக்கின்றன. இவற்றினை தமிழில் அதாவது உருவாக்கப்பட்ட மொழியில் பார்த்தால் காரணத்துடன் விளக்கமும் கிடைக்கும். மறைமதி (அமாவாசை) அடுத்து ஒருமை (பிரதமை). பின்னர் இருமை (துவிதியை). மும்மை (திருதியை). நான்மை (சதுர்த்தி). ஐம்மை (பஞ்சமி). அறுமை (சஷ்டி). எழுமை (சப்தமி). எண்மை (அஷ்டமி). தொண்மை(நவமி). பதின்மை (தசமி). பதிற்றொருமை (ஏகாதசி). பதிற்றிருமை (துவாதசி). பதின்மும்மை (திரயோதசி). பதினான்மை (சதுர்த்தசி). நிறைமதி (பௌர்ணமி) என்று வளர்கிறது. தேய்கிறது.

உதாரணமாக அம்மா அல்லது அப்பா பதிற்றிருமை (துவாதசி) பிறைநாளில் இறந்தால். மாதந்தோறும் அடுத்த பன்னிரெண்டு மாதங்களுக்கு பதிற்றிருமைப் பிறை நாளில் அவருக்கு உரிய பூசை வழிபாடுகளை செய்து உணவு படைத்து . மற்றவர்களுக்கும் பகிர்ந்து . காகம். பசுபோன்ற உயிரினங்களுக்கும் . சிவனடி யார்களுக்கும் உணவளித்து அவர்களின் சிவபுரப் பயணத்திற்கு வலுவூட்டுவதே அவர்களின் அவ்வுலக வாழ்விற்கும் எங்களின் இவ்வுலக வாழ்விற்கும் அருள் சேர்க்கும். இப்படி மாதம் தோறும் செய்ய முடியாததால் பன்னிரெண்டு மாதங்களுக்கும் சேர்த்து முதல் மாத பிறை நாளாகிய (திதியாகிய) தினத்தில் அல்லது அந்தியேட்டி நாளில் ஒன்றாக சேர்த்துக் கொடுப்பது தற்கால வழமையாக மாறிவிட்டது.

அதன் பின்னர் ஒவ்வொரு ஆண்டும் அதே திங்கள் (மாத) அதே பிறைநாளில் (திதியில்) ஆண்டு பிறைநாளாக (ஆண்டுத் திதியாக) தமிழர் மரபில் கடைப்பிடிக்கப்படுகிறது.

இப்படியான காலங்களில் அம்மாவை அல்லது அப்பாவை நினைத்து சிவனடியார்களுக்கு உணவளித்தல் பெரும் புண்ணியம்.

பசித்தவனுக்கு அன்னந் தந்தால். உண்டவனுக்கு ஊன் குளிரும். உள்ளம் குளிரும். உணர்வு குளிரும் அத்துடன் உயிரும் குளிரும். உயிர் குளிர்ந்தால் உயிருக்குயிரான சிவம் குளிரும்.

அத்துடன் சிவனடியாருக்கு அமுது கொடுத்தலை திருஞான சம்பந்தர் சுவாமிகள் பின்வருமாறு விபரிக்கின்றார்.

இரண்டாம் திருமுறையில் திருஞான சம்பந்த சுவாமிகள் மயிலாப்பூரில் இறந்த பெண்ணின் சாம்பலில் இருந்து அந்தப் பெண்ணை உயிர் பெறச் செய்தார். அதற்காக தமிழில் பாடிய திருப்பதிகம் பூம்பாவைத் திருப்பதிகம் ஆகும். இப்படிபல அற்புதங்களை செய்யப் பாடப்பட்ட பதிகங்கள் தமிழிலே தான் பாடப்பட்டது என்பதை கவனத்தில் கொள்க.

அதிலே அடியாருக்கு அமுது செய்வதன் மகத்துவத்தினையே முதலாவது பாடலாக பாடியுள்ளார்.

இதனை பெரிய புராணத்தில் திருஞான சம்பந்த நாயனார் வரலாற்றில் தெய்வ சேக்கிழார் சிவபெருமானின் அடியார்களுக்கு அமுது செய்வித்தலும். சிவபிரானின் திருவிழாக்களைக் கண்டுகளித்தலும் மனிதப் பிறவியில் கிடைத்தற்கரிய பேறு என்று கூறுகிறார்.

**அருளில்லார்க்கு அவ்வுலகம்இல்லை பொருளில்லார்க்கு**
**இவ் வுலகம் இல்லாகியாங்கு - திருக்குறள்**

என்பதற்கு அறவழியில் பொருளைத் தேடும் இவ்வுலகில் நாங்கள் அருளையும் தேட வேண்டும். அதேவேளை இறந்த எங்கள் முன்னோருக்கு அப்பா- அம்மா போன்றோருக்கு அவ்வுலகில் அருள் கிடைக்க இவ்வுலகில் இருந்து ஆற்றும் கடனே பிறைநாள் (திதி . பிதிர் வழிபாடுகள்) வழிபாடுகள். இப்படியான வழிபாட்டினை நிச்சயமாக பிள்ளைகளாகிய . சகோதரர்களாகிய நாங்கள் செய்ய வேண்டும். இது அவர்களுக்கு அவர்கள் சென்ற பின் செய்யும் பணிவிடையாகும். அத்துடன் இதன் வழி எங்களுக்கும் அருளும் பொருளும் . ஆற்றலும் வந்து கிடைக்கின்றன.

மறைமதி (அமாவாசை) தினத்தில் தென்புலத்தார் வழிபாடு மற்றும் பேரொடுக்கம் (மஹாளய அமாவாசை)

வருடத்தில் சுறவத்திங்கள் மறை மதிப் பிறை நாள் (தை அமாவாசை) மற்றும் கடகத் திங்கள் மறை மதிப் பிறை நாள் ( ஆடி அமாவாசை) முக்கியமான நாட்களாகும்.இத்தினத்தில் விரதமிருந்து . நீர் நிலைகளில் அல்லது கிணற்றில் நீராடி இறந்தவர்களுக்கு வழிபாடு செய்வது சிறப்பானதாகும். அத்துடன் எள்ளுடன் தர்ப்பை புல் சேர்த்து . நீர் இறைத்து , பிண்டம் வைக்கக்கூடியவர்கள் பிண்டம் வைத்து வழிபாடு செய்யலாம். ( அண்டத்தில் இருப்பது பிண்டத்தில் இருக்கும் என்பார்கள்).

அத்துடன் ஆண்டு பிறை நாளாக (ஆண்டுத் திதியாக) மற்றும் திங்கள் (மாத) பிறைநாளில் (திதியில்) தென்புலத்தார் வழிபாடு செய்ய முடியாதவர்கள் , பலவருடங்களாக செய்யாமல் விட்டவர்களுக்கு ஒரு சிறப்பானசெய்தி. குவலையை விட்டு கன்னித் திங்கள் (புரட்டாதி மாதம்) வருகின்ற மறைமதி பிறைநாள் (புரட்டாதி அமாவாசை) தினத்தன்று இந்த வழிபாட்டினை செய்யலாம். முன்னர் குறிப்பிட்டது போல கதிரவனின் தென்புலப் பயணம் தூய்மைப்படுத்துவதற்கானது (ஒடுக்ககாலம்). ஆகவே இந்த மறை மதிப் பிறைநாள் மேலும் சிறப்பு பெறுகிறது. அத்துடன் இந்தக் காலப்பகுதியில் எம் முன்னோர்கள் பூமிக்கு வந்து எமது வழிபாட்டினை மற்றும் படையலை ஏற்கின்றனர் என்றும் கருதப்படுகிறது. அதற்கும் மேலாக அவர்களுக்கு அருளூட்டும் வகையில் நாங்கள் வழிபாடுகள். சிவ பூசை . சிவமங்கல நீராட்டு. சிவப்பெரு வேள்வி. அடியாருக்கு அமுது. மற்றைய உயிரினங்களுக்கு உணவு. பசுவுக்கு உணவு. காக்கைக்கு உணவு படைத்தல் போன்றவற்றினை செய்து பலன்களை பெறலாம்.

இப்படிபட்ட இறைவனை முழு முதலாகக் கொண்ட சைவம் அதன்வழி வந்த தமிழ் இரண்டையும் இரு கண்களாகப் போற்றி. அதன்வழி நின்று பிறவிப் பெருங்கடலை நீந்திக் கடப்போம்.

மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்.
தென்னாடுடைய சிவனே போற்றி
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி

**சிவத்திரு. திருவம்பலம் தென்னவன்**
**(குணரத்தினம் பார்த்தீபன் - தொலைத் தொடர்பு பொறியியலாளர்)**
**தென்னாடு - செந்தமிழாகம சிவமடம்,**
**கொக்குவில் கிழக்கு , கொக்குவில்.**

# பாரதம்

# நிலச்சரிவில் சிக்கி வீட்டுடன் காணாமல் போன நபர்கள்

## மீட்புப் பணி தீவிரம்



(காத்மாண்டு)
நேபாளத்தில் கடந்த சில தினங்களாக பெய்து வரும் கனமழை காரணமாக பல்வேறு இடங்களில் நிலச்சரிவுகள் ஏற்பட்டுள்ளன.

இந்நிலையில், கனமழை காரணமாக சிந்துபால்சவுக் மாவட்டத்தில் நேற்று இரவு திடீரென நிலச்சரிவு ஏற்பட்டது.

மலை அடிவாரத்தில் உள்ள 18 வீடுகள் நிலச்சரிவில் அடித்துச் செல்லப்பட்டன.

அந்த வீடுகளில் வசித்த 12 இற்கும் மேற்பட்டோரைக் காணவில்லை.

அவர்களின் கதி என்ன? என்பது தெரியவில்லை.

அங்கு மீட்புப் பணிகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. (2)

# காட்டுத் தீயால் அதிகரிக்கும் உயிரிழப்புகள்

(கலிபோர்னியா)
அமெரிக்க மேற்கு கடற்கரை மாநிலங்கள் முழுவதும் பரவி வரும் காட்டுத்தீயால் 30 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளதாக அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

ஒரேகான், கலிபோர்னியா மற்றும் வோஷிங்டனில் 3 வாரங்களாக பரவிவரும் தீயானது மில்லியன்கணக்கான ஏக்கர் நிலத்தை எரித்ததோடு, ஆயிரக்கணக்கான வீடுகளையும் அழித்து வருகிறது.

இதன் காரணமாக பல்லாயிரக்கணக்கான மக்கள் தங்கள் வீடுகளை விட்டு வெளியேற வேண்டிய கட்டாயத்தில் உள்ளனர்.

இந்தக் காட்டுத்தீக்கு மோசமான வன நிர்வாகத்தின் செயற்பாடே காரணம் என ட்ரம்ப் குற்றம் சாட்டியிருந்தார். (2)

# இறந்த மனைவியை மெழுகுச் சிலையாய் வடித்து அழகு பார்த்த அன்புக் கணவன்



(சென்னை)
இந்தியாவில் பிரபல தொழிலதிபரொருவர், தனது மனைவியின் நினைவாக தத்ரூப சிலையொன்றை வடித்துள்ளார்.

மதுரை மேலப்பொன்னகரம் பகுதியை சேர்ந்தவர் சேதுராமன். பிரபல தொழிலதிபரான இவருடைய மனைவி பிச்சைமணி அம்மாள் கடந்த ஓகஸ்ட் 8 ஆம் திகதி இயற்கை எய்தினார். தனது மனைவி பிரிந்ததை, தாங்க முடியாமல், தனியாக தவித்து வந்துள்ளார் தொழிலதிபர் சேதுராமன்.

எனவே மனைவியின் நினைவு எப்போதும் தனக்குள் இருக்க வேண்டும் என்று உணர்ந்த அவர், பிச்சைமணி அம்மாளுக்கு சிலை ஒன்றை வடிவமைக்க வேண்டும் என எண்ணினார்.

ஓவியரைக் கொண்டு நவீன தொழில்நுட்பத்துடன் என்றும் நிரந்தரமாக இருக்கும் வகையில் 6 அடியில் பிச்சைமணி அம்மாளின் உருவத்தை தத்ரூபமாக வடிவமைத்தார்.

தத்ரூபமான தனது மனைவி சிலையை பார்த்து தொழிலதிபர் சேதுராமன் பிரமித்து போனார். பிச்சைமணி அம்மாள் இறந்து 30 ஆம் நாளையொட்டி, பாசமிகு மனைவியின் சிலையை வைத்து அவர் வழிபாடு செய்தார்.

இச்சம்பவம் அப்பகுதி மக்களை பெரிதும் நெகிழ்ச்சியடைய செய்துள்ளது. (2)



கொரோனா பரவல் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக மை
கொரோனா பரிசோதனை நடத்த வனத்துறையினர் முடிவு செய்
முன்னிட்டு ஆண்டுதோறும் 10 நாட்களுக்கு தசரா விழா கோ
கொரோனா பரவல் காரணமாக மைசூர் தசரா விழா கொண்டாடப்
மைசூர் தசரா விழாவை எக்காரணம் கொண்டும் ரத்து செய்யக் க
அரசு திட்டமிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# உலகை அச்சத்தில்

# பயன்பாட்டிற்கு வ

(மொஸ்கோ)

உலகையே அச்சத்தில் ஆழ்த்திய
வைரஸ் பெருந்தொற்று நோயை தடுப்பத
ஸ்புட்னிக்-5 என்ற தடுப்பூசி உருவாக்க
பயன்பாட்டிற்காக ரஷ்யா தடுப்பூசி விந
கியுள்ளதாக அதிகாரபூர்வமாக அறிவிக்

அந்த நாட்டின் பாதுகாப்பு அமைச்சகமும், கமலேயா தேசிய தொற்றுநோயியல் மற்றும் நுண்ணுயிரியல் ஆராய்ச்சிமையமும் இணைந்து உருவாக்கியுள்ள இந்த தடுப்பூசியை ரஷ்யா முறைப்படி பதிவு செய்துள்ளது.

இந்த தடுப்பூசியை மனிதர்களுக்கு செலுத்தி பார்க்கிற 3ஆவது இறுதிக்கட்ட மருத்துவ பரிசோதனையும் தொடங்கியது. இந்த சோதனையின்போது 31 ஆயிரம் தன்னார்வலர்களுக்கு தடுப்பூசிபோட்டு சோதிக்கப்பட்டது.

இதற்கு மத்தியில், கொரோனா பாதிப்புக்கு ஆளாகாமல் தடுப்பதற்கு மக்கள்

# ஒக்ஸ்போர்ட் பல்கலை

(லண்டன்)
ஒக்ஸ்போர்ட் பல்கலைக் கழகத்தின் கொரோனாத் தடுப்பூசி பரிசோதனை மீண்டும் தொடங்கியுள்ளதாக அஸ்ட்ராஜெனிகா நிறுவனம் அறிவித்துள்ளது.

ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தின் கோவிஷீல்டு என்ற கொரோனாத்

# வெளிநாடு



ாக மைசூர் தசரா விழாவில் பங்கேற்கும் 5 யானைகளுக்கு
ு செய்துள்ளனர். கர்நாடக மாநிலம் மைசூரில் விஜயதசமியை
ா கோலாகலமாக கொண்டாடப்பட்டு வருகிறது. இந்த ஆண்டு
டாடப்படுமா என்ற கேள்வி எழுந்தது. இருப்பினும் உலகப்புகழ்பெற்ற
ய்யக் கூடாது என்ற நோக்கத்தில் எளிமையாக நடத்த கர்நாடக

## அமெரிக்கா, இஸ்ரேல் உள்ளிட்ட தலைவர்களின் புகைப்படங்களை எரித்து காசாவில் ஆர்ப்பாட்டம்



(காபூல்)

இஸ்ரேலுடனான உறவை சீராக்க இரு வளைகுடா நாடுகளின் நடவடிக்கைகளுக்கு எதிர்ப்பு தெரிவித்து காசாவில் உள்ள பாலஸ்தீனியர்கள் நேற்று முன்தினம் இஸ்ரேல், அமெரிக்கன், பஹ்ரைன் மற்றும் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் தலைவர் களின் புகைப்படங்களை எரித்தனர்.

பெருமளவான மக்கள் கலந்து கொண்ட காசா போராட்டத்தை ஆளும் குழு ஹமாஸ் ஏற்பாடு செய்தது.

இஸ்ரேலுடனான உறவை சீராக்க ஒப்புக்கொள்வதில் பஹ்ரைன் கடந்த வெள்ளிக்கிழமை ஐக்கிய அரபு எமிரேட்ஸில் இணைந்தது.

இது ஈரானைப் பற்றிய பகிரப்பட்ட அச்சங்கள் மூலம் ஓரளவு உருவாக்கப்பட்டதுடன் பாலஸ்தீனியர்களை மேலும் தனிமைப்படுத்தக்கூடியதும் ஆகும்.

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு, பஹ்ரைன்மன்னர்ஹமாத் பின் ஈசா அல் கலீஃபா, ஐக்கிய அரபு எமிரேட்ஸின் அபுதாபி மகுட இளவரசர் ஷேக் முகமது பின் சயீத் அல் நஹ்யான் ஆகியோரின் படங்களை ஆர்ப்பாட்டக்காரர்கள் தீ வைத்து எரித்தனர்.


அமெரிக்கா, இஸ்ரேல், ஐக்கிய அரபு எமிரேட்ஸ் மற்றும் பஹ்ரைன் ஆகியவை மத்திய கிழக்கில் அமைதி மற்றும் ஸ்திரத்தன்மைக்கு ஒரு குறிப்பிடத்தக்கபடியாக இராஜதந்திர நகர்வுகளை பாராட்டினாலும், பாலஸ்தீனியர்கள் இதை ஒரு துரோகமாகவே பார்க்கிறார்கள்.

2007 ஆம் ஆண்டு வரை ஆழ்ந்த அரசியல் விரிசல் இருந்த போதிலும், பாலஸ்தீனிய ஜனாதிபதி மஹ்மூத் அப்பாஸ், இஸ்ரேலிய ஆக்கிரமிப்பு மேற்குக் கரையில் பாலஸ்தீனிய ஆணையம் மட்டுப்படுத்தப்பட்ட ஆட்சியைக் கொண்டுள்ளது.

மேலும் அவரது ஹமாஸ் அமைப்பினர் வளைகுடா நாடுகளின் நடவடிக்கைக்கு எதிராக ஒன்றுபட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (2)

## தில் ஆழ்த்திய கொரோனா
## வருகிறது ரஷ்ய தடுப்பூசி

**ந்தியுள்ள கொரோனா**
**டுப்பதற்காக ரஷ்யாவில்**
**ாக்கப்பட்டது. மக்கள்**
**விநியோகம் தொடங்**
**ிவிக்கப்பட்டுள்ளது.**




பயன்பாட்டுக்காக இந்தத் தடுப்பூசியின் விநியோகம் தொடங்கியுள்ளதாக ரஷ்ய சுகாதார அமைச்சகம் நேற்று முன்தினம் அதிகாரப்பூர்வமாக அறிவித்தது.

இதையொட்டி ரஷ்ய சுகாதார அமைச்சகம் வெளியிட்ட அறிக்கையில், "கமலேயா தேசிய தொற்று நோயியல் மற்றும் நுண்ணுயிரியல் ஆராய்ச்சி மையத்தால் உருவாக்கப்பட்ட தடுப்பூசியின் முதல் தொகுதி ரஷ்ய பிராந்தியங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

முதல் விநியோகமானது, தடுப்பூசியை பரவலாக்கும். மிகவும் பாதிக்கப்படக்கூடிய மக்களுக்கு கொரோனா தடுப்பூசி முதலில் போடப்படும்" என கூறப்பட்டுள்ளது.

உலகிலேயே ரஷ்யாவில் தான் கொரோனாத் தடுப்பூசி முதன்முதலாக மக்கள் பயன்பாட்டுக்கு வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது. (2)

## தங்கச் சுரங்கம் இடிந்து வீழ்ந்ததில் 50 பேர் பலி!



**(கொங்கோ)**

**ஆபிரிக்க நாடுகளில் ஒன்றான கொங்கோ ஜனநாயகக் குடியரசில் தங்கச் சுரங்கம் இடிந்து வீழ்ந்து விபத்துக்குள்ளானதில் 50 சுரங்கத் தொழிலாளர்கள் உயிரிழந்துள்ளனர். தெற்கு கிவு மாகாணத்தின் தலைநகரான புகாவுக்கு மேற்கே கிட்டத்தட்ட 200 கிலோமீற்றர் தொலைவில் உள்ள கமிட்டுகா நகரில் இந்த சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை நிகழ்ந்தது. கனமழையால் தங்கச் சுரங்கத்திலிருந்து 1 கிலோமீற்றர் தொலைவில் அமைந்துள்ள என்ஜாலி நதியின் நீர் மட்டம் வெகுவாக அதிகரித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (2)**

## லையின் தடுப்பூசி பரிசோதனை மீண்டும் ஆரம்பம்




தடுப்பூசி பரிசோதனையில் பங்கேற்ற தன்னார்வலர்களுக்கு, எதிர்மறையான விளைவுகள் ஏற்பட்டதை அடுத்து சோதனை தற்காலிகமாக நிறுத்தப்பட்டது.

இந்த நிலையில் கோவிஷீல்டு பரிசோதனை பாதுகாப்பானது எனவும், மீண்டும் சோதனைகளை தொடரலாம் எனவும் இங்கிலாந்தின் மருந்தக ஒழுங்குமுறை மேலாணையம் அனுமதி அளித்துள்ளது.

இதனால் மீண்டும் பரிசோதனை தொடங்கப்பட்டிருப்பதாக அஸ்ட்ரா ஜெனிகா நிறுவனம் அறிவித்துள்ளது. (2)

# 20வது திருத்தம் தொடர்பில் ஆராய நியமிக்கப்பட்டது நிபுணர் குழு

(கொழும்பு)

20 ஆவது அரசியலமைப்பு திருத்தம் தொடர்பில் ஆய்வு செய்வதற்கு பிரதமர் மகிந்த ராஜபக்ஷவினால் பாராளுமன்ற பிரதிநிதிகளை கொண்ட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

அமைச்சரவை அமைச்சர்கள். இராஜாங்க அமைச்சர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோரை உள்ளடக்கிய குழுவின் தலைவராக அமைச்சரவை அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் நியமிக்கப்பட்டுள்ளார்.

அமைச்சர்களான ஜி.எல். பீரிஸ், உதய பிரபாத் கம்மன்பில, அமைச்சர் மொஹமட் அலி சப்ரி, நிமல் சிறிபால டி சில்வா, விமல் வீரவன்ச உள்ளிட்டோரும் இராஜாங்க அமைச்சர்களான சுசில் பிரேம ஜயந்த, எஸ். வியாழேந்திரன் ஆகியோரும் பாராளுமன்ற உறுப்பினர்களான டிலான் பெரேரா, பிரேமநாத் சீ.தொலவத்த ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர். இக்குழுவின் அறிக்கை நாளை பிரதமர் மகிந்த ராஜபக்ஷவிடம் கையளிக்கப்படவுள்ளது. (2)

# சுற்றுலா நகர வீதிகள் புனரமைக்கப்படும்

## பிரதமர் ஆலோசனை



(கொழும்பு)

உள்ளூர் மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் கவனத்தை மிகவும் ஈர்த்த சுற்றுலா நகரங்களுக்கான வீதிகளை மேம்படுத்துவது தொடர்பில் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ சம்பந்தப்பட்ட அமைச்சுகளுக்கு ஆலோசனை வழங்கினார்.

சுபீட்சத்தின் நோக்கு கொள்கைப் பிரகடனத்திற்கு அமைய சுற்றுலாத்துறையை மேம்படுத்தும் நோக்கில் பிரதமர் இத்தீர்மானத்தை முன்னெடுத்தார்.

இதுவரை சுற்றுலா நகரங்களுக்குச் செல்வதற்கான வீதிகள் மற்றும் பழுதடைந்த நிலையில் காணப்படும் அனைத்து வீதிகளையும் புனரமைக்கும் நடவடிக்கைகளை விரைவுபடுத்துமாறும் பிரதமர் சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு அறிவுறுத்தினார்.

உள்ளூர் சுற்றுலாப் பயணிகள் இதுவரையில் தங்களது சுற்றுலா நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளனர்.

இதேவேளை, சுற்றுலாப் பயணம் மேற்கொள்வதற்கு பாதுகாப்பான நாடாக இலங்கை விளங்குவதால் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் கவனம் இலங்கை மீது திரும்பியுள்ளது.

இந்தச் சந்தர்ப்பத்தில் நாட்டின் பிரதான வருமான மார்க்கமாகக் காணப்படும் சுற்றுலாத் துறையை அபிவிருத்தி செய்வதற்கு இது ஒரு சிறந்த வாய்ப்பாகும்.

விமான நிலையங்கள் திறக்கப்பட்டதன் பின்னர் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் வருகை மற்றும் சுற்றுலாத்துறையை கட்டியெழுப்புவதற்கான முன்னேற்பாடாக இந்த வீதிகளைப் புனரமைக்கும் வேலைத்திட்டத்தை வெகுவிரைவில் ஆரம்பிக்குமாறு பிரதமர் வலியுறுத்தினார். (2)

# வாகன இலக்கத்தகடுகளை தபால்மூலம் வழங்க நடவடிக்கை




(கொழும்பு)

வாகன உரிமங்கள் மற்றும் பதிவு செய்யப்பட்ட இலக்க தகடுகளை தபால்மூலம் வழங்க புதிய திட்டம் தொடங்கப்படும் என்று அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்தார்.

எதிர்காலத்தில் வாகன உரிமையாளர்கள் தங்களது பழைய இலக்கத்தடுகளை மோட்டார் போக்குவரத்துத் துறையிடம் ஒப்படைக்கத் தேவையில்லை என்று அமைச்சர் அமுனுகம மேலும் தெரிவித்தார்.

இரண்டு மாகாணங்களுக்கிடையில் வாகனங்கள் விற்பனையின் போது இலக்க தகடுகளில் மாற்றம் செய்யத் தேவையான சட்டமும் நீக்கப்பட்டு, அதற்கு பதிலாக ஒரு புதிய திட்டத்துடன் மாற்றப்படும்.

அண்மையில்கொழும்பில்நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் உரையாற்றியபோது வாகன ஒழுங்குமுறை, பேருந்துப் போக்குவரத்துச் சேவைகள் மற்றும் கட்டணங்கள் மற்றும் வாகனத் துறை அமைச்சர் திலும் அமுனுகம இதைக் குறிப்பிட்டார். (2)

# மாணிக்கக்கல் அகழ்வுக்குழி எமனாகியது



(மஸ்கெலியா)

மஸ்கெலியா பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பிரவுன்ஸ்விக் தோட்டத்தில் மாணிக்கக்கல் அகழச் சென்ற நபர் மண்மேடு சரிந்துவிழுந்து உயிரிழந்ததாக மஸ்கெலியா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

இது குறித்து மேலும் தெரியவருகையில், மஸ்கெலியா பிரவுன்ஸ்விக் ரைட்அக்கரை தோட்டத்தைச் சேர்ந்த 26 வயதுடைய ஒரு குழந்தையின் தந்தையான சுப்பிரமணியம்அமிலசந்திரன் என்ற இளம்குடும்பஸ்தர் நேற்று முன்தினம் 12 ஆம் திகதியன்று இரவு சுமார் 9 மணியளவில் வீட்டில் இருந்து வெளியே சென்ற நிலையில் மாணிக்கக்கல் அகழ்வதற்காக வெட்டிய குழியில் மண் திட்டு சரிந்ததில் மரணித்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதையடுத்து குறித்த சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மஸ்கெலியா பொலிஸ் நிலைய பொலிஸார் முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (2)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## வாழ்வது எதற்காக?

ஒருத்தர் ஒரு அலுவலகத்திலே வேலை பார்க்கின்றார். அலுவலகம் முடிந்து மாலை வீட்டுக்குப்போகும் போது பார்த்தீர்கள் என்றால்... ஒரு பெரிய பையைத் தூக்க முடியாமல் தூக்கிக் கொண்டு போவார். எல்லாம் வேலை பதிவேடுகள். வீட்டுக்குப் போயும் அலுவலக வேலையைப் பார்ப்பதற்காக அவர் அப்படி சுமந்து கொண்டு போகின்றார்.

கடமையிலே கண்ணும் கருத்துமாக இருக்கின்றவர் என்று அவருக்குப்பெயர். பல பேர் இப்படி உண்டு. அலுவலகத்தை வீட்டிற்கு சுமந்து கொண்டு போகின்றவர்கள். இப்படிப்பட்டவர்கள் வாழ்க்கை என்பது ஒரு திருவிழா என்பது தெரியாமலே வாழ்ந்து முடித்து விடுகின்றார்கள்.

வாழ்க்கை என்பது கடமைகளை நிறைவேற்றுவதற்காக அமைந்த ஒன்றா? அல்லது அது ஒரு கொண்டாட்டமா? என்பதனை முதலில் புரிந்து கொள்ள வேண்டும் என்கின்றார் ஓஷோ. வாழ்க்கை கொண்டாடுவதற்காக அமைந்த ஒன்று. இப்படி நினைக்கின்றவர்கள் வேலை செய்வதனையே விட்டு விடுவார்கள் என்று அர்த்தமில்லை.

அவர்கள் நிச்சயமாக வேலைகளைச் செய்வார்கள். ஆனால் அதுவும் அவர்கள் கொண்டாட்டத்தின் ஒரு பகுதியாக அமைந்து விடும். விழாவின் அம்சம் அதிலே கலந்திருக்கும். வேலையிலே மூழ்கிப் போகின்றவர்களுக்கு வாழ்க்கையே வேலையாக ஆகி விடும். பல பேர் அப்படித்தான். வாழ்க்கையே ஒரு தொழிற்சாலையாக மாற்றிக்கிட்டுக் கவலைப்படுகின்றார்கள்.

வாழ்வதற்காகத் தான் வேலை செய்கின்றோம். ஆனால் வேலையே வாழ்க்கையாகப் போய் விடுகின்றது. ஆடிப்பாட மகிழ நேரம் இல்லாமல் மாலை நேரம் வந்து விடுகின்றது. எல்லோரும் கொஞ்சம் யோசித்துப் பாருங்கள். மனிதனைத் தவிர மற்ற எல்லாவற்றிற்கும் இந்த வாழ்க்கை என்பது ஒரு விளையாட்டுத்தான், திருவிழா தான்.

இவன் தான் வேலை செய்கின்றான். கடினமாக உழைக்கின்றான். ஏராளமாக கண்ணீர் சிந்துகின்றான். நமக்கு நாமே குழப்பத்தையும் சிக்கலையும் உண்டாக்கிக் கொள்ளுகின்றோம். அதிலே சிக்குகின்றோம். பிறகு காலம் முழுவதும் ஓய்வு கிடைக்காதா? நிம்மதியாக வாழ்க்கையை அனுபவிக்க முடியாது என்று ஓடிக்கொண்டே இருக்கின்றோம். அந்தநாள் வருவதே இல்லை.

தொழில் போதையிலே மூழ்கிக் கிடக்கின்றவர்களுக்கு ஓய்வு மகிழ்ச்சி வாழ்க்கையின் இன்பம் எதுவுமே தெரிவதில்லை. பழங்குடி மக்களைப் பாருங்கள். தொழிலுக்கும் கொண்டாட்டத்திற்கும் என்ன உறவு என்பது புரியும். நாள் பூராக அவர்கள் உழைக்கின்றது இரவில் ஆனந்தமாக ஆடிப்பாடி மகிழ்ந்தான்.

ஆனால் நாகரிக மனிதன் என்ன செய்கின்றான்? பகலிலே மட்டுமல்ல இரவிலும் உழைக்கின்றான். இரவு பகலாக உழைக்கின்றேன் சேர் என்றும் பெருமையாக சொல்லிக் கொள்ளுகின்றேன். இன்றைய உலகில் ஆனந்தம் இருக்க வேண்டிய இடத்திலேயே எல்லாம் பொழுதுபோக்கு ஆக்கிரமித்துக் கொண்டிருக்கின்றது.

ஆனந்தம் என்பது நீங்களும் பங்கு கொள்ளலாம், கலந்து கொள்ளலாம். பொழுதுபோக்கில் நீங்கள் வெறும் பார்வையாளர்தான் ஆட்டத்தைப் பார்ப்பது பொழுதுபோக்கு.

நீங்களே ஆடுவது ஆனந்தம் கொண்டாட்டம். வாழ்வையே ஒரு வேலையாக ஆக்குபவர்கள் இந்த உலகத்தையே ஒருபைத்தியக்கார விடுதியாக ஆக்கிவிடுகிறார்கள்.

எதையோ நோக்கி எங்கேயோ ஓடும் பைத்தியக்காரர்களாகத்தான் அவர்கள் காட்சி அளிக்கிறார்கள். எங்கே ஓடுகிறோம் என்பது யாருக்கும் தெரியாது.

ஒருவன் வாடகைக் காரில் ஏறி உட்கார்ந்து போ வேகமாக என்றான். கார் பறந்தது. கொஞ்ச நேரம் கழித்து காரை செலுத்தியவர் மெதுவாக திரும்பி எங்கே போகவேண்டும் என்று கேட்டார். அதற்கு இந்த ஆள்... எங்கே போகவேண்டும் என்பது முக்கியமில்லை... நான் வேகமாகப் போகனும் என்பதுதான் முக்கியம்! என்றானாம்.

இது மாதிரிதான் வாழ்க்கையில் எல்லோரும் பறந்துகொண்டிருக்கிறார்கள். ஒரு புகையிரத நிலைய பிளாட்பாரத்தில ஒருவன் அவசரமாக எதையோ தேடிக்கொண்டிருந்தான். எதைத் தேடுகிறீர்கள்? என்றார் ஒருத்தர்.

என் ரிக்கெட்டைத் தவறிவிட்டு விட்டேன் சேர்! என்று சொல்லிவிட்டு... மறுபடியும் குனிந்து தேடினார். இதற்குள்ளே ரயில் வந்துவிட்டது.

பரவாயில்லை... வாருங்கள்... வேறு ரிக்கெட் வாங்கிக் கொள்ளலாம் என்றார் அவர். அது ஒன்றும் கஷ்டமில்லை சேர்...வேறு ரிக்கெட் வாங்கிக்கொள்ளலாம். ஆனால் அந்தப் பழைய ரிக்கெட் கிடைத்தால்தானே நான் எந்த ஊருக்குப் போகவேண்டும் என்பது தெரியும் என்றான் இவன்.

# கொரோனா எதிர்ப்பு நடவடிக்கைக்கு 56 மில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்கிய உலக வங்கி

(கொழும்பு)

**கொரோனா வைரஸ் எதிர்ப்பு நடவடிக்கைகளுக்காக இலங்கைக்கு உலக வங்கி 56 மில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்கியுள்ளது. சுகாதார செயற்பாடுகளுக்கு கடந்த ஏப்ரல் மாதம் 20 ஆம் திகதி அனுமதியளிக்கப்பட்ட 128.6 மில்லியனில் 56 மில்லியன் அமெரிக்க டொலர் இலங்கைக்கு வழங்கப் பட்டுள்ளது.**



இந்த விடயம் தொடர்பாக கருத்து தெரிவித்துள்ள நேபாளம் மற்றும் இலங்கை மாலை தீவுக்கான உலக வங்கியின் பிராந்திய இயக்குநர் பரிஸ் எச். ஹதாத்-செர்வோஸ், கொரோனாத் தொற்றினை அடுத்து ஏற்பட்ட அவசரநிலைமை மற்றும் அதிலிருந்து மீள்வதற்கு எடுக்கப்படும் நடவடிக்கைக்காக இலங்கை அரசாங்கத்துடன் நெருக்கமாக பணியாற்றி வருகிறோம்.

உணவுப் பாதுகாப்பு, மாணவர்களின் கல்வியை மேம்படுத்துவதற்கும் மக்கள் பொதுப் போக்குவரத்தைப் பயன்படுத்தலாம் என்பதை உறுதி செய்வதற்கும் பொது சேவைகளை தொடர்ந்து வழங்க டிஜிட்டல் தீர்வுகளைப் பயன்படுத்தவும் இருக்கும் திட்டங்களிலிருந்து நிதியுதவிகளை ஒதுக்கீடு செய்யத் தயாராக உள்ளோம்

அந்தவகையில் உள்ளூர் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக 17 மில்லியன், பொது கல்வி நவீனமயமாக்கல் திட்டத்திற்கு 15 மில்லியன், இலங்கை ஆரம்ப சுகாதார அமைப்பு வலுப்படுத்தும் திட்டத்திற்கு 9 மில்லியன், பாசன விவசாய திட்டத்திற்கு 15 மில்லியன் டொலர்கள் ஒதுக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இவை ஏழை மற்றும் பாதிக்கப்படக்கூடிய விவசாய குடும்பங்கள் விதைகளை வாங்குவதற்கும், உணவுப் பாதுகாப்பை உறுதி செய்வதற்கும், தொலைதூரக் கல்வி மூலம் வீட்டிலேயே கற்க உதவுவதற்கும், பாடசாலை மாணவர்கள் மின் கற்றல் மூலம், குறிப்பாக கிராமப்புற, சிறிய மற்றும் வளமற்ற பாடசாலைகளுக்கு உதவுவதற்கும் உதவும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்தோடு பாடசாலை நடவடிக்கைகள் மீண்டும் தொடங்கியதும் மாணவர்களுக்கு பாதுகாப்பான மற்றும் சுகாதாரமான பாடசாலைச் சூழலை உருவாக்க இது உதவும் என்பதுடன் பொதுப் போக்குவரத்தை கிருமி நீக்கம் செய்வதற்கும், கை சுத்திகரிப்பு மற்றும் பாதுகாப்பு உபகரணங்கள் மற்றும் உடல் வெப்பநிலை அளவீடு செய்யும் கருவிகளை வழங்குவதற்கும் இந்த நிதிகள் பயன்படுத்தப் படும் என உலக வங்கி குறிப்பிட்டுள்ளது. (2)

# சகல உரிமைகளும் பெற்று சுதந்திரமாக மலையக மக்கள் வாழ வேண்டும்

## தொண்டமானின் அனுதாப பிரேரணையில் அதாவுல்லா

(கொழும்பு)

சம்பளப் பிரச்சினை மட்டுமன்றி மலையக மக்களின் சகல உரிமைகளும் பெற்று சுதந்திரமாக வாழக்கூடிய நிலை உருவாக்கப்பட வேண்டும். அனைத்து சிறுபான்மை மக்களின் பிரச்சினைகளுக்கும் தீர்வு கிட்டும் போதுதான் மலையக மக்களின் பிரச்சினைகளுக்கும் தீர்வு கிடைக்கும். எல்லா சிறுபான்மை தலைவர்களும் காலத்துக்கு காலம் பேச்சுவார்த்தை மட்டும் நடத்திவிட்டு சென்றுவிடுகிறார்களே தவிர பிரச்சினைகள் தீர்க்கப்படவில்லை. நாம் அனைவரும் ஒரு புள்ளியில் இருந்து அதை தீர்த்து வைக்க வேண்டுமென தேசிய காங்கிரஸின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ஏ.எல்.எம். அதாவுல்லா பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.



பாராளுமன்றத்தில் நடைபெற்ற முன்னாள் அமைச்சரும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவருமான அமரர் ஆறுமுகம் தொண்டமானின் அனுதாப பிரேரணையில் உரையாற்றும் போதே தேசிய காங்ஸிரசின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ஏ.எல். எம். அதாவுல்லா இவ்வாறு தெரிவித்தார்.

சிறுபான்மை மக்கள் என்ற வகையில் மலையக மக்களுடன் நாம் எப்போதும் துணையாக இருப்போம். மலையக மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தி செயற்படும் இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமானுடன் எப்போதும் நாம் இணைந்து செயற்படுவோம்.

அமைச்சர் ஆறுமுகன் தொண்டமானுடன் நான் இறுதியாக கலந்துரையாடிய போது நாங்கள் இருவரும் நாடு தொடர்பிலும் சிறுபான்மை மக்கள் தொடர்பிலும் அதிகநேரம் கலந்துரையாடினோம். இவ்வளவு சீக்கிரம் அவர் எம்மை விட்டு பிரிந்து விடுவார் என நான் கனவிலும் நினைக்கவில்லை. அந்தவகையில் நல்ல நண்பனை, நல்ல சகோதரனை, சிறந்ததொரு தலைவனை நாம் இழந்திருக்கின்றோம்.

அமைச்சரவையிலும் பாராளுமன்றத்திலும் பல கூட்டங்களிலும் வெளிநாட்டுப் பயணங்களிலும் நாம் சந்தித்து பல்வேறு விடயங்களை கலந்துரையாடியதை நான் நினைத்துப் பார்க்கின்றேன். இப்போதும் அதை மறக்க முடியாதுள்ளது. தீர்க்கமான முடிவுகளை எடுக்கக்கூடிய தலைவர் தொண்டமான் என அவர் மேலும் தெரிவித்தார். (2)

# பௌத்தம் பற்றி அறிய விரும்புவோர்க்கு புதிய இணையத்தளம் அறிமுகம்




(கொழும்பு)

பௌத்த மக்கள் போன்றே பௌத்த தத்துவம் குறித்து ஆர்வம்கொண்ட பிற மதத்தவர்களுக்கும் அறிவை பெறுக் கொள்வதற்கு களனிரஜமஹா விகாரையின் உத்தியோகப் பூர்வ இணையத்தளம் ஆதாரமாக விளங்கும் என பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் சனிக்கிழமை, களனிரஜமஹா விகாரையின் www.kelaniya temple.lk என்ற உத்தியோகபூர்வ இணையத்தளத்தை வெளியிடும் நிகழ்வில் கலந்து கொண்டிருந்தபோதே பிரதமர் இவ்வாறு குறிப்பிட்டார்.

பௌத்த தத்துவம் தொடர்பிலும், பிக்குமார்களுக்கு ஏற்படும் பல்வேறு பிரச்சினைகள் தொடர்பிலும், தீர்வு வழங்குவதற்கு அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்பட வேண்டிய ஒரு செயற்பாடு . களனி ரஜமஹா விகாரையின் விகாராதிபதி பேராசிரியர் கொள்ளுபிட்டியே மகிந்த சங்கரக்கித தேரர் உள்ளிட்ட சபையினரால் நிறைவேற்றப்பட்டுள்ளதாக பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

களனி ரஜமஹா விகாரையின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தை ஆரம்பித்து வைக்கும் நிகழ்வு ஒரு வரலாற்று தருணம் என்றும், உலகளாவிய ரீதியில் பௌத்த மறுமலர்ச்சி ஏற்பட்டுள்ள சந்தர்ப்பத்தில் பௌத்த தத்துவம் தொடர்பில் ஆர்வம் கொண்ட அனைவருக்கும் இப்புதிய இணையத்தளத்தின் ஊடாக பௌத்தம் குறித்த விடயங்களை அறிய முடியும் என்றும் தர்ம வித்யாலயாவின் தலைவரும் களனி பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளருமான தெனியாயே பஞ்சலோக தேரர் தெரிவித்தார். (2)

# அவுஸ்திரேலியாவில் ஆற்றில்மூழ்கி தமிழ் இளைஞன் உயிரிழப்பு

(விக்டோரியா)

விக்டோரியாவின் மில்டுரா பகுதியிலுள்ள Murray ஆற்றில் மூழ்கி தமிழ் இளைஞர் ஒருவர் உயிரிழந்தார்.

கடந்த வெள்ளிக்கிழமை தனது நண்பர்களுடன் ஆற்றுக்குச் சென்று நீச்சலில் ஈடுபட்டபோது காணாமல் போயிருந்து பின் சடலமாக மீட்கப்பட்டார். மெல்பேர்னில் கல்விகற்றுவரும் இலங்கையைச் சேர்ந்த 21வயது தமிழ் இளைஞரே இவ்வாறு மரணமடைந்ததாகவும், தனது நண்பர்களோடு அவர் ஆற்றுப் பகுதிக்கு சென்றிருந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது. (2)



# புலம்பெயர்ந்த ஈழத் தமிழர்கள் ஓர் உலகளாவிய ஆய்வு

## 66

கலாநிதி முருகர் குணசிங்கம்

மேலும் இக்காலகட்டத்தில் "தமிழீழ விடுதலை அமைப்பு" **(Tamil Eelam Liberation Organisation - TELO)** இதே காலப் பகுதியில் தோற்றம் பெற்ற ஒன்றாகும்.

பின்னர் இவ்வமைப்பு பல்வேறு காரணங்களால் செயலிழந்து போயிருந்தது. இவ்வேளையில் 1976 ஆம் ஆண்டு மே மாதம் 5 ஆம் திகதி தமிழ்ப் புதிய புலிகள் என்னும் அமைப்பு வேலுப்பிள்ளை பிரபாகரன் தலைமையில் தமிழீழ விடுதலைப் புலிகள் **(Libration Tigers of Tamil Ealam - LTTE)** என்னும் புதிய பெயரைத் தாங்கி தமிழ் ஈழ விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்துச் சென்றது.

1976 மே 14 ஆம் திகதி வட்டுக்கோட்டையில் நடைபெற்ற வரலாறு படைத்த மகா நாட்டில் தமிழர் ஐக்கிய முன்னணி தமது கட்சிப் பெயரை மாற்றி "தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி" **(Tamil United Liberation Front - TULF)** என்ற புதிய பெயரில் இயங்கத் தொடங்கியது.

மேற்கூறப்பட்ட நிலைமைகள் அனைத்தும் ஈழத்தமிழர்கள் தமக்கே உரித்தான தாம் இழந்த தமது தாய்நாட்டை சிங்கள அரசிடம் இருந்து மீட்டெடுப்பதற்கான போராட்டத்திற்கு ஆயத்தம் ஆகின்றார்கள் என்பதையே தமிழ் மக்களுக்கும் சிங்கள தேசத்திற்கும் உலகத்திற்கும் பறைசாற்றுவதாக அமைந்தன.

1977களில் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் இனவாதத்தைத் தேர்தல் அறிக்கையின் மையப் பொருளாக வைத்து ஜெயவர்த்தன தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி அமோக வெற்றி பெற்றது.

இதுவரை நிதி, நீதி, நிர்வாகம், மொழி, கல்வி, தொழில் சிங்களக் குடியேற்றங்கள் எனப் பல வழிகளில் ஈழத்தமிழர்களின் ஜனநாயக உரிமைகளை மறைமுகமாகவும் வெளிப்படையாகவும் பறித்த சிங்களப் பெரும்பான்மை அரசு தற்போது மிகவும் வெளிப்படையாகவும் நேரடியாகவும் ஈழத் தமிழர்கள் வாழ்வு உரிமைகளில் கை வைக்கத் தொடங்கியது.

இதனை எதிர்த்து அறவழிப் போராட்டங்களை நடத்திய ஈழத்தமிழர்கள் படிப்படியாக நம்பிக்கை இழந்து நின்றனர்.

சிங்கள அரசின் முப்படைகளினதும் தொடர்ச்சியான அச்சுறுத்தல்களாலும் சிறைபிடிப்பு, சித்திரவதை, காணாமல் போதல், கொலை, பலாத்காரச் சம்பவங்கள் நாளுக்கு நாள் அதிகரித்தன. 1977, 1979, 1981, 1983 ஆம் ஆண்டுகளில் இடம்பெற்ற ஈழத்தமிழர்களுக்கு எதிரான திட்டமிட்ட இனப்படுகொலைகள் தமிழ் இளம் தலைமுறையினரைக் கொதிப்படையச் செய்தது.


முதலில் தமிழர்களின் உயிர் உடைமைகளுக்குக்கு பாதுகாப்புத் தேவை. அதற்கு தமிழ்த் தேசம் சிங்கள ஆக்கிரமிப்புப் படைகளிடம் இருந்து விடுபட்டு சுதந்திரத் தமிழ் ஈழமாக மலர வேண்டும் என்ற உணர்வை விதைத்தது.

தமிழர் மிதவாத அரசியல் கட்சிகள் செயல் இழந்தன. அவர்களது பாராளுமன்ற அங்கத்துவம் சிங்கள அரசினால் பறிக்கப்பட்டது.

அவர்களுள் பெரும்பான்மையினர் 1983 இனக்கலவரத்தை அடுத்துத் தமிழ்நாட்டில் தஞ்சம் புகுந்தனர்.

தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் தவிர்ந்த ஏனைய போராட்ட இயக்கங்கள் பல்வேறு காரணங்களாலும் அவைகளின் போக்குகளாலும் கொள்கைகளினாலும் காலப்போக்கில் செயல் இழந்து போயின.

தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் தலைமையில் அணிதிரண்டனர். ஆயிரமாயிரம் தமிழ் இளைஞர்களும் இளம் பெண்களும் இலட்சிய வேட்கையோடும் உறுதியோடும் இயக்கத்தில் இணைந்தனர்.



வட்டுக்கோட்டை தீர்மானம்

தமிழ் ஈழத்தை நேசித்த ஈழத்தமிழர்கள் விடுதலைப் புலிகளின் பின்னால் அணிவகுத்து காப்பு அரண்களாகச் செயற்பட்டனர்.

1970களின் இறுதிப் பகுதியில் சிங்கள அரசின் மூர்க்கத்தனத்தால் உருவாக தமிழ் ஈழ விடுதலைப் போராட்டம் 2009 ஆம் ஆண்டு மே மாதம் 19 ஆம் திகதி இந்தியா, அமெரிக்கா, பிரித்தானியா ஆகிய மூன்று நாடுகளும் தமது வல்லரசுக் கொள்கைகளைத் தக்கவைப்பதற்காகவும் முதலாளித்துவ உலகப் பொருளாதாரக் கொள்கைகளைத் தங்குதடையின்றி நடத்துவதற்காகவும் தமது பூகோள புவிசார் நலன்களுக்காகவும் தமிழ் ஈழ விடுதலைப் புலிகளை அழித்து ஒழிப்பதில் முனைப்பாகச் செயற்பட்டன.

மேற்கண்ட நாடுகளைப் பின்பற்றும் ஐரோப்பிய, தென்னாபிரிக்கா, இஸ்ரேல் போன்ற பல்வேறு நாடுகள் வழங்கிய இராணுவ உதவிகளாலும் ஆயுத உதவிகளாலும் இராணுவ ஆலோசனைகளாலும் நவீன தொழில்நுட்பத் தொலைத் தொடர்புச் சாதனங்களை வழங்கி உதவியதாலும் விடுதலைப்புலிகள் தோற்கடிக்கப்பட்டார்கள் என்றும் போர் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டதாகவும் சிங்கள அரசு அறிவித்தது.

ஆனால் மேற்கண்ட நாடுகள் புலம்பெயர்ந்த தமிழர்களின் அமைப்புகளைத் தடை செய்யாமலும் சமாதானப் பேச்சுவார்த்தை என்ற பொறிக்குள் விடுதலைப் புலிகளைத் திட்டமிட்டுப் பங்கெடுக்க வைக்காமலும் போருக்கான மேற்குறிப்பிட்ட உதவிகளை வழங்காமலும் மேலும் இந்திய அரசு தவறான அறிவுறுத்தல்களால் உள்வாங்கப்படாமலும் இருந்திருந்தால் ஈழதேசம் அந்த மண்ணில் மீண்டும் மலர்ந்து இருக்கும் என்பது மறுக்க முடியாத உண்மை ஆகும்.

(பேட்டி: இந்திய அமைதிப் படையின் உளவுத்துறைக்குப் பொறுப்பான ஹரிகரன் இந்திய வானொலிக்கு 2014 ஒகஸ்ட் மாதம் முதல் வாரத்தில் வழங்கிய பேட்டி) மேற்கண்ட பின்னணியை வைத்துக் கொண்டு புலம்பெயர்ந்து வாழும் தமிழர்கள் அவர்கள் சார்ந்த அமைப்புக்கள் தேச விடுதலை நோக்கிய அரசியல் செயற்பாடுகள் குறித்துச் சுருக்கமாக ஆராய்வது பொருத்தம் ஆகும்.

இதன்மூலம் 2009 ஆம் ஆண்டு மே மாதத்திற்குப் பின்னரான புலம்பெயர்ந்த தமிழ் மக்கள் நிலைப்பாட்டினையும் தமிழ் அரசியல் அமைப்புகளின் நடவடிக்கைகளையும் சுருக்கமாக ஆய்வு செய்வது அவசியமாகின்றது.

1983 ஆம் ஆண்டு இனக்கலவரத்தைத் தொடர்ந்து பல்வேறு மட்டத்து ஈழத் தமிழர்கள் பல கொடூரமான நினைவுகளையும் இழப்புகளையும் காயங்களையும் அதிர்ச்சிகளையும் சுமந்து கொண்டு உலகின் பல நாடுகளுக்கு அகதிகளாகச் சென்றடைந்தனர்.

இலங்கை அரசின் கொடூரமுகம், ஈழத்தின் கள நிலைமை, ஈழ விடுதலையின் தவிர்க்க முடியாத தேவை, அவ்விடுதலையை யார் வென்றடுக்கக் கூடியவர்கள் என்ற தெளிவான சிந்தனை ஆகிய அனைத்தையும் சுமந்து கொண்டு சென்றார்கள்.

புலம்பெயர்ந்து தமிழர் வாழ்ந்த நாடுகளில் ஏற்கனவே குறிப்பிடப்பட்ட பல விடுதலை இயக்கங்களின் பிரதிநிதிகள் கிளைகளை நிறுவிப் பல்வேறுபட்ட செயற்பாடுகளில் களம் இறங்கியிருந்தனர்.

ஆனால் ஈழத்தின் நிலைமை நாளுக்கு நாள் மாற்றம் அடைந்து கொண்டே சென்றது. ஈழவிடுதலை இயக்கங்களுக்கு இடையே இருந்த கருத்து வேறுபாடுகள், கொள்கை வேறுபாடுகள், தலைமைத்துவப் போட்டி ஆகியவை காரணமாகச் சில இயக்கங்கள் சிதைந்து, மறைந்து போயின.

ஒரு சில இயக்கங்கள் சிங்கள அரசுடன் கைகோர்த்து நின்றன. மேலும் ஒருசில இயக்கங்கள் சமூகவிரோதச் செயல்களில் ஈடுபட்டு ஈற்றில் செயல் இழந்து போய்விட்டன.

ஆனால் தமிழ் ஈழ விடுதலைப் புலிகளின் இலட்சியப் போக்கும் தளராத கொள்கையும் எதற்கும் விலைபோகாத உறுதியான நிலைப்பாடும் களம் இறங்கிப் போராடித் தமிழ் ஈழத்து மக்களையும் தமிழர் தாயகப் பகுதிகளையும் பாதுகாக்கும் இடையறாப் போராட்டங்களும் சிங்களப் படைகளை ஓட ஓடத் துரத்தி அவர்களது எல்லைக்கு உள்ளேயே முடக்கி வைத்து இருந்த நிலைமையும் தமிழ் ஈழத்தை நேசிக்கும் ஈழத்தமிழர்களையும் புலம்பெயர்ந்த தமிழ் மக்களையும் வெகுவாகக் கவர்ந்து இழுத்து விடுதலைப் புலிகள் இயக்கத்திலும் அதன் தலைவர் பிரபாகரனிலும் அசைக்க முடியாத நம்பிக்கையை ஏற்படுத்தின.

புலம்பெயர்ந்து வாழும் கீழ்மட்ட மத்திய வர்க்க ஈழத்தமிழர்கள் விடுதலைப்புலிகள் அமைப்பின் பின்னால் அணி திரளத் தொடங்கியதை இந்நூலாசிரியர் கடந்த முப்பது ஆண்டுகளுக்கும் மேலாகப் பல்வேறு நிகழ்வுகளுக்கு ஊடாக நேரில் கண்டு அறிந்து இருக்கின்றார்.

அத்தோடு இத்துறை சார்ந்த நேர்மையான ஆய்வாளர்களின் கருத்துகளும் முடிவுகளும் மேற்கண்ட நிலைப்பாட்டிலேயே காணப்படுகின்றன.

ஆனால் தனிப்பட்ட விருப்பு வெறுப்புகளாலும் பாதிப்புகளாலும் விதண்டாவாதங்களாலும் போட்டி பொறாமைகளாலும் உந்தப்பட்ட சில ஈழத்தமிழ் அறிஞர்களும் இன அழுத்தங்களால் உந்தப்பட்ட சில மேலைத் தேசக் கல்விமான்களும் தமது பல்வேறுபட்ட மாற்றுக் கருத்துகளை முன்வைக்கவும் தவறவில்லை.

எனினும் அவர்களின் மனச்சாட்சிக்கு களத்திலும் புலத்திலும் உள்ள உண்மையான நிலைமைகள் தெரியாமல் இருப்பதற்கு எதுவித நியாயங்களும் இல்லை.

(தொடரும்)

# மின்னணுக்கழிவுகளை தபால் நிலையங்கள் மூலம் சேகரிக்கத் திட்டம் - தபால்மா அதிபர்



(கொழும்பு)

**இலங்கை மத்திய சுற்றாடல் அதிகார சபை தபால் திணைக்களத்துடன் இணைந்து மின்னணுக் கழிவுகளை தபால் நிலையங்களினூடாக சேகரிக்கும் சிறப்பு திட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளது. ஒக்டோபர் 09 ஆம் திகதி வரும் சர்வதேச தபால் தினத்தை முன்னிட்டு தபால் திணைக்களத்தினால் சமூக பொறுப் புணர்வு திட்டமாக இது ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தபால்மா அதிபர் ரஞ்சித் ஆரியரத்ன சுட்டிக் காட்டியுள்ளார்.**

அதன்படி தொலைபேசி, கணனி, தொலைக்காட்சி, ரேடியோக்கள் போன்ற மின்னணுக் கழிவுகளை மக்கள் அந்தந்த தபால் நிலையங்களிடம் ஒக்டோபர் 5 - 10 வரையான காலப்பகுதியில் ஒப்படைக்கலாம். போதுமான இடவசதி இல்லாத பல தபால் நிலையங்களை கருத்திற் கொண்டு. சேகரிக்கப்படும் மின்னணுக் கழிவுகளை பிரதேச செயலக அலுவலகங்களுக்கு மாற்றுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு சேகரிக்கப்பட்ட மின் கழிவுகளை மறு சுழற்சி செய்வதற்கும், மறு சுழற்சி செய்ய முடியாத கழிவுப் பொருட்களை ஏற்றுமதி செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (2)

# இரண்டு வரவு-செலவுத் திட்டங்கள் அடுத்த மாதம் பாராளுமன்றத்தில்

(கொழும்பு)

2020 ஆம் ஆண்டிற்கான அரசாங்க செலவினம் 3,085 பில்லியன் ரூபாய் ஆகும்.இது குறித்த விபரங்கள் அடுத்த மாதம் அரசாங்கம் முன்வைக்கும் என்று எதிர்பார்க்கப்படும் நிலையில் இரண்டு ஒதுக்கீட்டுச் சட்டமூலங்கள் ஒன்றில் வெளிப்படும் என அறியமுடிகின்றது.

இந்த செலவீனங்களில் நல்லாட்சி அரசாங்கத்தின் 2019 ஆம் ஆண்டிற்கான கடன்களும் அடங்கும் என இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்தார்.

2019 முதல் நல்லாட்சி அரசு தீர்வு காணாத கடன் உட்பட அதன் வட்டி மற்றும் கடன் தவணைகளையும் உள்ளடக்கியது என்றும் இது சுமார் 2,000 பில்லியன் ரூபாய் ஆகும் என இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க குறிப்பிட்டுள்ளார்.

அடுத்த மாதம் இரண்டு வரவு- செலவுத் திட்டங்கள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்-அதில் ஒன்று 2020 ஆம் ஆண்டிற்கும் மற்றொன்று 2021 ஆம் ஆண்டிற்குமானது என்றும் தெரிவித்தார்.

2020 ஒதுக்கீட்டுச் சட்டமூலம் விவாதிக்கப்படாது என்றும் அரசாங்கம் எடுக்கும் முடிவுகளுடன் வெளிப்படையாக இருக்க மட்டுமே அதை முன்வைப்பதாகவும் 2021 ஒதுக்கீட்டு சட்டமூலம் விவாதிக்கப்பட்டு வழக்கம் போல் வாக்கெடுப்புக்கு விடப்படும்.

மேலும் 2021 ஒதுக்கீட்டுச் சட்டமூலத்திற்கான செலவுகள் மற்றும் பிற விபரங்களை அமைச்சுக்கள் இன்னும் இறுதி செய்யவில்லை என்றும் தேவையான கலந்துரையாடல்கள் இடம்பெற்றுவருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (2)

# 20-வது திருத்தத்தினால் எமக்குள் எந்த முரண்பாடுகளும் இல்லை

(கொழும்பு)

அரசியலமைப்பின் 20 ஆவது திருத்தத்தினால் அரசாங்கத்துக்குள் எவ்வித முரண்பாடும் தோற்றம் பெறாது எனத் தெரிவித்தார் காணி விவகார அமைச்சர் எஸ்.எம்.சந்திரசேன, ஆளும் தரப்பின் உறுப்பினர்களும் திருத்தம் தொடர்பில் தனிப்பட்ட மற்றும் கட்சி ரீதியான நிலைப்பாட்டை அறிவித்துள்ளார்கள்.

அனைத்து தரப்பினரது கருத்துக்களும் பரிசீலனை செய்யப்பட்டு சிறந்த தீர்வு பெற்றுக் கொள்ளப்படும்.

அரசியலமைப்பின் 19 ஆவது திருத்தம் தொடர்பில் மக்கள் தங்களின் அபிலாசைகளை குறிப்பிடும் வாய்ப்பு வழங்கப்படவில்லை. 20 ஆவது திருத்த விவகாரத்தில் மக்களின் கருத்துக்கள் ஏற்றுக்கொள்ளப்படும். அரசியலமைப்பின் 20 ஆவது திருத்தத்துக்கான சட்டமூல வரைபு இவ்வாரம் பாராளுமன்றத்தில் நீதியமைச்சரினால் சமர்ப்பிக்கப்படும்.

20 ஆவது திருத்தத்துக்கு நாட்டு மக்கள் எவரும் 7 நாட்களுக்குள் ஆட்சேபனை தெரிவித்து உயர்நீதிமன்றில் மனுத் தாக்கல் செய்ய முடியும். சட்ட மாதிரிகள் பரிசீலனையை தொடர்ந்தே 20 ஆவது சட்ட மூல வரைபு அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டு அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டது என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (2-4)

# சித்தியடையும் சகலருக்கும் பட்டப்படிப்பு வாய்ப்புகள்

(கொழும்பு)

எதிர்காலத்தில் பல்வேறு பட்ட கல்வி சீர்மைப்பு வேலைத் திட்டங்களை அறிமுகப்படுத்த அரசாங்கம் எதிர்பார்த்துள்ளதாக இராஜாங்க அமைச்சர் சுசில் பிரேமஜயந்த அண்மையில் தெரிவித்தார்.

அதனடிப்படையில் கல்வி பொதுச் சுகாதார உயர்தரப் பரீட்சையில் சித்தியடையும் சகலரும் பட்டப்படிப்பை மேற்கொள்வதற்கான வசதிகளை ஏற்படுத்துவது இதன் நோக்கமெனவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை கல்வித்திட்ட அமைப்பில் மாற்றங்களை ஏற்படுத்த எதிர்பார்த்திருப்பதாக கல்வி அமைச்சர் ஜி.எல் பீரிஸ் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (2-6)



வவுனியாவில் வீதியை கடக்க முற்பட்ட விஷேட தேவைக்குட்பட்ட வயோதிபருக்கு வீதிப்போக்குவரத்து பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் உதவிபுரிவதை படத்தில் காணலாம். (படம்:- நெளுக்குளம்செய்தியாளர்)

# வெளிநாடுகளில் இருந்து திரும்பிய ஒன்பது பேருக்கு கொரோனா உறுதி

(கொழும்பு)

இலங்கையில் கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 3204 ஆக அதிகரித்துள்ளது.

ஏற்கனவே 3195 பேர் அடையாளம் காணப்பட்டிருந்த நிலையில் மேலும் 9 பேர் அடையாளம் காணப்பட்டனர்.

இவர்களில் 8 பேர் கட்டாரில் இருந்து வந்தவர்கள் என்பதுடன் மற்றைய நபர் ஐக்கிய அரபு இராச்சியத்தில் இருந்து நாடு திரும்பியவர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2)



# போதைப்பொருட்களுடன் மூன்று பெண்கள் கைது

(கொழும்பு)

ஹெரோயின்மற்றும்போதைப்பொருடகளுடன் கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவினரால் 3 பெண்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட நபர்களிடம் இருந்து 90 கிராம் ஹெரோயின் , நான்கு கிலோ கிராம் மாவா மற்றும் 29 கஞ்சா பக்கெட்டுகள் என்பன கைப் பற்றப்பட்டுள்ளன.

அத்தோடு கைப்பற்றப்பட்ட போதைப்பொருட்களின் பெறுமதி சுமார் 10 இலட்சம் ரூபா எனக் குற்றத்தடுப்பு பிரிவினர் தெரிவித்துள்ளதோடு கைது செய்யப்பட்டவர்களிடம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர். (2)

# புலனாய்வு பிரிவினரின் உதவிகளைக்கொண்டு பகிடிவதைகளைத்தடுக்க விசேட திட்டம்

**(கொழும்பு)**

**பல்கலைக்கழகங்களில் இடம்பெறும் பகிடிவதைகளை தடுப்பதற்காகப் புலனாய்வுப் பிரிவினரின் உதவிகளைப் பெற்றுக்கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளது. பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் சிரேஷ்ட பேராசிரியர் சம்பத் அமரதுங்க இதனைத் தெரிவித்துள்ளார்.**



இந்த விடயம் தொடர்பில் பாதுகாப்பு செயலாளரிடம் கோரிக்கை விடுத்துள்ளதாகவும் தெரிவித்த அவர்,

அதற்கான முழுமையான ஒத்துழைப்பை வழங்குவதற்கு பாதுகாப்பு செயலாளர் இணக்கம் வெளியிட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

இதன்படி, பல்கலைக்கழகங்களில் இடம்பெறும் பகிடிவதை சம்பவங்கள், புலனாய்வுப் பிரிவினரின் கவனத்திற்கு கொண்டு செல்லப்படவுள்ளன.

இதற்கமைய, அடையாளம் காணப்படுகின்ற சந்தேகநபர்களைச் சட்டத்தின்முன் நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் சிரேஷ்ட பேராசிரியர் சம்பத் அமரதுங்க தெரிவித்துள்ளார்.

சட்டத்திற்கு அமைய, பல்கலைக்கழகங்களில் புதிய மாணவர்கள் உள்ளீர்க்கப்பட்டதன் பின்னர், அவர்களது இணக்கமின்றி முன்னெடுக்கப்படும் அனைத்துச் செயற்பாடுகளும் பகிடிவதை என அடையாளப்படுத்தப்படுகிறது. அவ்வாறான செயற்பாடுகள் மாணவர்களுக்கு உடல் மற்றும் உள ரீதியான தாக்கத்தைச் செலுத்தும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

பகிடிவதைகள் காரணமாக பல்கலைக்கழகங்களில் மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளுக்குப் பாதிப்பு ஏற்படுவதோடு அது நாட்டின் பொருளாதாரத்திலும் தாக்கம் செலுத்துகின்றமை குறிப்பிடத்தக்கது. (2)



## போராட்டத்தில் ஈடுபட்ட கைதிகள் சிலர் ஆபத்தான நிலையில்

(கொழும்பு)

பூஸா சிறைச்சாலையில் கைதிகள் ஆரம்பித்த உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் இரு கைதிகள் ஆபத்தான நிலையில் இருப்பதாக சிறைச்சாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

எனினும் இவர்களின் இதயத்துடிப்பை அளவிட ஈ.சீ.ஜி. பயன்படுத்தப்படுவதாகவும்தேவை ஏற்படின் வைத்தியசாலைக்கு அழைத்துச்செல்ல நோயாளர் காவு வண்டி தயாராக உள்ளதாகவும் சிறைச்சாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

உணவு தவிர்ப்புப் போராட்டங்களில் ஈடுபடுபவர்களில் பலர் போராட்டத்தினை நிறைவுக்குக் கொண்டுவந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-6)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2115

**கஸ்ரோன்**



உலகம் மறந்து விளையாடும் குழந்தைகளை தான் உலகமே இரசிக்கிறது.

**தாரணி**



உள் அளவு தாழ்வு மனப்பான்மை வான் உயர கனவுகளை தகர்த்து விடுகிறது பறக்க விடாமல்...!!!

**சிரஞ்சீவி**

அளவுக்கு மீறிய கோபங்களில் எல்லாம் அளவேயில்லாத அன்பு நிறைந்திருக்கும்...



**ரூபினி**

குழந்தைகளுக்கு எப்படி தான் தெரியுமோ... கடையில இருக்கிறதுலேயே காஸ்ட்லியான பொம்மையை தான் பிடிச்சிருக்குனு கை காட்டுறாங்க.



**பாஸ்கரன்**

பேசுவதை விட கேட்பது எனக்கு பிடிக்கும் எதிரில் இருப்பது நீயாக இருந்தால்...!



**வக்சலா**

நமதருகில் இருக்கும் முகங்களெல்லாம் உண்மையென நினைக்காதே! கிழித்துப்பார் பலரின் முகத்திரைகள் கிழியக்கூடும்!



**நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.**

# அரச நிலங்களை பன்னாட்டு நிறுவனங்களுக்கு வழங்குவதற்கான முயற்சியில் அரசாங்கம்

## சஜித் குற்றச்சாட்டு

(கொழும்பு)

அரச நிலங்களை பன்னாட்டு நிறுவனங்களுக்கு வழாங்குவதற்கான முயற்சியில் அரசாங்கம் ஈடுபட்டுள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

நாட்டில் தற்போதுள்ள அரசாங்கத்தின் செயற்பாடுகள் தொடர்பாக கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். இவ்விடயம் தொடர்பாக சஜித் பிரேமதாஸ மேலும் தெரிவிக்கையில்,

“ஜனாதிபதித் தேர்தலில் வெற்றியடைந்து பின்னர் பாராளுமன்றத் தேர்தலிலும் பாரிய வெற்றியைத் தமதாக்கியுள்ளனர்.

ஜனாதிபதித் தேர்தலிலும் சரி, நிறைவடைந்த பாராளுமன்றத் தேர்தலிலும் சரி சுற்றுச்சூழல் பாதுகாப்பு தொடர்பாக அதிகமாக பேசினார்கள்.

சுற்றுச்சூழலின் பெரும்பாலான பகுதிகள் முழுமையாக அழிந்துள்ளன. சுற்றுச்சூழல் குறித்தே அரசாங்கத்தில் அதிகமானோர் பேசினர்.

தேர்தலிலும் சுற்றுச்சூழல் பாதுகாப்புத் தொடர்பாகப் பேசினார்கள். காடழிப்பு உள்ளிட்ட சுற்றுச்சூழலில் பாதிப்பை ஏற்படுத்துபவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதாக கூறினார்கள்.

வில்பத்து வனத்தை நாசப்படுத்திய முக்கிய சந்தேகநபருக்கு கடுமையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென வலியுறுத்தியவரே அதற்கு எதிராக தற்போது செயற்படுகிறார்.

இந்த நாடு மிகவும் பெறுமதிமிக்கது. இருப்பினும் அரச நிலங்களை பன்னாட்டு நிறுவனங்களுக்கு வழாங்கும் முயற்சிகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன” என அவர் கவலை வெளியிட்டுள்ளார்.(2)

# ஆன்மீகம்



## மாற வேண்டியவை மனோபாவங்களே!

ஒரு தங்க மாலையைப் பிள்ளையாருக்குக் காணிக்கையாகத் தந்துவிட கொள்ளைக் கூட்டத் தலைவன் விரும்பினான். இருள் சூழ்ந்திருந்த கோயிலில் பிள்ளையார் சந்நிதியில் யோக நிஷ்டையில் அசைவற்று அமர்ந்திருந்த பட்டினத்தாரையே விநாயகர் என்று எண்ணி அவர் கழுத்தில் தங்கமாலையை அணிவித்து விட்டுக் கொள்ளையர் கூட்டம் சென்று விட்டது. அரண்மனை கொள்ளையடிக்கப்பட்டதை அறிந்த சேவகர்கள் நாலாபுறமும் திருடர்களைத் தேடினர். பொன்மாலையைச் சூடிய வண்ணம் காட்சியளித்த பட்டினத்தாரைப் பார்த்து ‘இவனே திருடன்’ என்று அரசன் முன்பு நிறுத்தினர். அரசன் சற்றும் ஆராயாமல் இவனைக் கழுவில் ஏற்றுங்கள் என்றார். அப்போது பட்டினத்தார் பாடிய பாடல் என்ன தெரியுமா?

**‘என் செயல் ஆவது யாதொன்றுமில்லை! இனி தெய்வமே**
**உன் செயலே என்று உணரப் பெற்றேன்! இந்த ஊன் எடுத்த**
**பின் செய்த தீவினை யாதொன்றும் இல்லை! பிறப்பதற்கு**
**முன் செய்த தீவினையே இங்கனே வந்து மூண்டதுவே!’**

பழுத்த துறவியார் பட்டினத்தாரைத் திருடனாக ஆக்கிய தீவினையைப் போலவே பிரபலமான விளையாட்டு வீரர் வாழ்வில் விளையாடிய விதியையும் அதை அவர் ஏற்றுக் கொண்ட பாங்கையும் அறிந்தால் எத்தகைய விளைவையும் எதையும் தாங்கும் இதயத்துடன் வாழ்வை எப்படி எதிர்கொள்ள வேண்டும் என்று நாம் அறிந்து கொள்ளலாம்: உலகின் பிரபலமான டென்னிஸ் வீரர் ‘ஆர்தர் ஆஷ்’ ஏராளமான விருதுக்குச் சொந்தக்காரர். அமெரிக்காவின் வேர்ஜினியாவில் 1943 இல் பிறந்தவர். ரீகன், பில்கிளிண்டன் போன்ற அமெரிக்க ஜனாதிபதிகளிலேயே பாராட்டப் பெற்றவர். அவருக்கு நாற்பதாவது வயதில் இதய அறுவைச் சிகிச்சை நடந்தது. மருத்துவர்கள் அவரது உடலில் இரத்தம் செலுத்தினார்கள். அப்போது உயிர்கொல்லி நோயான எயிட்ஸ் தாக்கியிருந்த ஒருவரின் இரத்தத்தைத் தவறாகச் செலுத்திவிட்டனர்.

காப்பாற்ற வேண்டியவர்களையே காலர்களாக மாற்றிவிட்டது விதி. ‘ஆர்தர் ஆஷ்’ மீளாத நோயாளியாகி படுத்த படுக்கையானார். லட்சக்கணக்கான ரசிகர்கள் கண்ணீரும் பிரார்த்தனையுமாகக் கடிதங்கள் எழுதினர். மலைபோல் குவிந்த மடல்களுக்கெல்லாம் பதில் எழுதாத ஆர்தர் ஆஷ் ஒரு ரசிகருக்கு மட்டும் உணர்ச்சி பூர்வமாகப் பதில் எழுதினார். “இவ்வளவு கொடூரமான நோய்க்கு கடவுள் ஏன் உங்களைத் தேர்வு செய்தார்? என்று கேட்டிருக்கிறீர்கள். ஐம்பது மில்லியன் குழந்தைகள் டென்னிஸ் கற்றுக்கொள்ள ஆசைப்பட்டாலும் ஐந்து மில்லியன் பேர் தேர்வாகி அதிலும் ஐந்து லட்சம் பேரே வெறியுடன் விளையாடுகிறார்கள். அவர்களில் ஐம்பதாயிரம் பேர் இறுதிக் கட்டத்திற்கும், ஐயாயிரம் பேர் க்ராண்ட் ஸ்லாமுக்கும் ஐம்பது பேர் விம்பிள்டனுக்கும் போகிறார்கள்.

பிறகு நான்கு பேர் செமி ஃபைனலுக்கும் இரண்டு பேர் ஃபைனலுக்கும் வருகிறார்கள். கடைசியில் ஒருவரைத்தான் வெற்றிக்கோப்பை வந்தடைகிறது. மாபெரும் மகத்தான அந்தப்பரிசு ஐம்பது மில்லியன் பேரில் என்னை வந்தடைந்தபோது ‘இந்த வெற்றிக்கு என்னை ஏன் தேர்ந்தெடுத்தாய் இறைவா’ என நான் கேட்டதில்லை. ‘இறைவன் எனக்குத் தர விரும்பியது இது’ என்று ஏற்றுக் கொண்டேன். அதேபோல் இந்த நோயும் அவன் எனக்குத் தர விரும்பியது. இதையும் சந்தோஷத்துடன் ஏற்றுக்கொள்கிறேன். “டென்னிஸ் வீரரின் இந்த பதிலுக்காகவே எத்தனை தங்கக் கோப்பைகளை வேண்டுமானாலும் நாம் அவருக்குத் தரலாம் அல்லவா?

# செய்தித்துளிகள்

## பொலிஸ் அதிகாரிகளுக்கு இடமாற்றம்

(கொழும்பு)

38 பிரதிப் பொலிஸ் அத்தியட்சகர்களுக்கு இடமாற்றம் வழாங்கப்பட்டுள்ளது.

தேசிய பொலிஸ் ஆணையத்தின் ஒப்புதலைத் தொடர்ந்து இம்மாதம் 10 ஆம் திகதி முதல் இந்த இடமாற்றங்கள் வழாங்கப்பட்டதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது. (2)

## இரண்டு மணித்தியாலத்தில் 699 பேர் கைது

(கொழும்பு)

மேல் மாகாணத்தில் நேற்று முன்தினம் 7 மணி முதல் இரவு 9 மணி வரையான காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின்போது 699 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேல் மாகாணத்தின் பேருந்து நிலையங்கள். புகையிரத நிலையங்கள் உள்ளிட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட சோதனையின்போதே இவர்கள் போதைப்பொருள் மற்றும் சட்டவிரோத குற்றங்களுக்காக கைதுசெய்யப்பட்டுள்ளனர். (2)

## 405 பேர் நாடு திரும்பினர்

(கொழும்பு)

கொரோனா வைரஸ் பரவல் அச்சம் காரணமாக வெளிநாடுகளில் சிக்கித் தவிக்கும் இலங்கையர்களை நாட்டுக்கு அழைத்து வரும் நடவடிக்கை தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

அதற்கமைய மத்திய கிழக்கு நாடுகளில் தங்கியிருந்த 405 இலங்கையர்கள் நேற்று ஞாயிற்றுக்கிழமை நாட்டுக்கு அழைத்து வரப்பட்டனர்.

நாட்டை வந்தடைந்த அனைவருக்கும் விமான நிலையத்தில் வைத்து பி.சி.ஆர்.பரிசோதனை முன்னெடுக்கப்பட்டது.

பரிசோதனை முடிவுகள் வரும் வரையில் விமான நிலையத்தை அண்மித்த பகுதியில் உள்ள ஹோட்டல்களில் அவர்கள் தங்கவைக்கப்பட்டனர். (2)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|
| கத்தரிக்காய் | 100 | 80 | 80 |
| உருளைக்கிழங்கு | 130 | 120 | 140 |
| பச்சைமிளகாய் | 120 | 150 | 200 |
| தக்காளி | 200 | 150 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 90 | 120 | 80 |
| கோவா | 120 | 140 | 140 |
| கரட் | 170 | 160 | 200 |
| பூசணி | 120 | 120 | 120 |
| புடோல் | 80 | 80 | 80 |
| வாழைக்காய் | 120 | 120 | 120 |
| சின்ன வெங்காயம் | 140 | 100-180 | 160 |
| பெரிய வெங்காயம் | 150 | 150 | 160 |
| பாகற்காய் | 250 | 250 | 300 |
| வெண்டிக்காய் | 80 | 70 | 120 |
| கருணைக் கிழங்கு | 180 | 150 | 160 |
| பயற்றங்காய் | 300 | 200 | 200 |
| லீக்ஸ் | 100 | 100 | 100 |
| பீற்றூட் | 100 | 90 | 100 |
| கறிமிளகாய் | 300 | 280 | 320 |
| முருங்கைக்காய் | 300 | 250 | 160 |
| போஞ்சி | 320 | 260 | 320 |
| கத்தரிதம்புள்ள | 70 | -- | 60 |
| கீரை - 1 பிடி | 35 | 30 | 40 |
| தேசிக்காய் | 150 | 100 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 90 | 40-80 | 60-80 |
| இராசவள்ளி | -- | -- | -- |
| வெங்காயப்பூ | 240 | 250 | 240 |
| முள்ளங்கி | 80 | -- | 80 |
| பொன்னாங்காணி | 35 | 40 | 40 |
| வல்லாரை | 50 | 20 | 30 |
| ஈரப்பலா | -- | 50 | 80 |




# மகா கஞ்சனின் கதை

கந்தன் என்ற ஒரு மகா கஞ்சன். ஆலங்குடி என்ற ஊரில் வசித்து வந்தான். ஒரு நாள், விமான நிலையத்தைப் பார்ப்பதற்காக தன் மனைவியோடு சென்றார்.

விமானம் மேலே கிளம்புவதையும், வானில் வட்டமிடுவதையும், கீழே இறங்குவதையும், இருவரும் ஆர்வத்துடன் வேடிக்கை பார்த்தனர்.

அவர்களின் ஆர்வத்தைப் பார்த்த விமானி ஒருவர், நீங்கள் இருவரும் வாருங்கள் ஆளுக்கு நூறு ரூபாய் தான் வானத்தில் ஒரு சுற்றுச் சுற்றி விட்டு வரலாம் என்றார்.

கஞ்சனுக்கு ஆர்வம் தான். ஆனால் செலவுக்கு பயந்து நாங்கள் வரவில்லை. என்றான்.

அவர்களிடம் பணம் பெற நினைத்த விமானி, நீங்கள் எந்தக் கட்டணமும் இல்லாமல், உங்களை இனாமாகவே விமானத்தில் ஏற்றிச் செல்கிறேன்.

வானத்தில் விமானம் பறக்கும்போது, என்ன நடந்தாலும், நீங்கள் சிறு சத்தம் கூடப் போடக் கூடாது. அப்படி சத்தம் போட்டால், இருநூறு ரூபாயை நீங்கள் கொடுத்துவிட வேண்டும் என்றார்.



கஞ்சன் தன் மனைவியுடன், விமானத்தில் ஏறி அமர்ந்தான். விமானம் தலைகீழாகப் பறந்தது.

சீறிப் பாய்ந்தது. உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு இருந்த கஞ்சன், சத்தம் போடாமல் இருந்தான். விமானத்தைத் தரை இறக்கினார் விமானி.

கஞ்சனுக்கு கை கொடுத்து, நான் பயமுறுத்தும் விமான விளையாட்டுகளை வானத்தில் செய்யும்போது, வேறு யாராக இருந்தாலும் சத்தம் போட்டிருப்பார்கள்.

ஆனால், நீங்கள் சிறு சத்தம் எழுப்பவில்லை. எப்படி இது உங்களால் முடிந்தது? என்று கேட்டார் விமானி.

நான் கூட, ஒரே ஒரு சமயம், என் மனைவி, விமானத்தில் இருந்து கீழே விழுந்த போது கத்த நினைத்தேன். நல்லவேளை கத்தாமல் இருந்தேன்.

கத்தியிருந்தால் கட்டணம் செலுத்த வேண்டியிருக்கும் என்றான் கஞ்சன். அதை கேட்ட விமானி மயங்கி விழுந்தார்.

**நீதி :**
**சிக்கனம் இருக்கலாம் ஆனால், கஞ்சத்தனம் இருத்தல் கூடாது.**

# ராஜராஜ சோழப்பேரரசின் வரலாறு

## கலாரசிகனின் கலைக்கோயில்

67


தட்சிணமேரு

இந்தப் பாறைவடிவம், பல கற்களை இணைத்து உருவாக்கப்பட்டதாக இருந்தாலும் ஒரே கல் போன்ற தோற்றமளிக்கும் வகையில் அவ்வளவு நேர்த்தியாகக் கட்டப்பட்டிருக்கிறது.

இதுதவிர, நிழல் கீழே விழாத கோபுரம், வளர்ந்து வருகின்ற நந்தி போன்ற செய்திகளும் பொய்யே.

**வாயில்கள்**

ராஜராஜனின் கல்வெட்டுக்களில் கேரளாந்தகன் திருவாயில், ராஜராஜன் திருவாயில் என இரண்டு வாயில்களைப் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளன.

அதைப்போலவே இந்தக் கோயில்களில் அணுக்கன் திருவாயில் என்கிற இன்னொரு வாசலும் உண்டு.

இவ்வாலயத்தின் நுழைவு வாயிலாகத் திகழ்வது கேரளாந்தகன் திருவாயில்.

இது சற்றே உயரமான அகலம் குறைந்த கோபுரம். மொத்தக் கோபுரத்தையும் இரண்டு தடிமனான கற்சுவர்களில் தாங்கி நிறுத்தியிருக்கிறார்கள்.

அடுத்தது ராஜராஜன் திருவாயில், கேரளாந்தகன் திருவாயிலைவிடச் சற்றே உயரம் குறைந்த ஆனால் அதைவிடவும் அகலமான கோபுரம். இந்த இடத்திலிருந்தே ராஜராஜனின் ஆச்சரியமூட்டும் பணி ஆரம்பமாகிவிடுகிறது. துவாரபாலகர்களை மட்டும் கவனியுங்கள் என்ன ஒரு கம்பீரம்.

இந்த இரண்டு திருவாயில்களையும் தாண்டி உள்ளே சென்றால் நாம் காண்பவை நந்தி மண்டபமும் மாபெரும் நந்தி உருவமும். நந்தி மண்டபமும் அங்கே அமைக்கப்பட்டிருக்கும் மாபெரும் நந்தியும் நாயக்க மன்னர்களின் கொடை.

ஒரே கல்லினால் செய்யப்பட்ட மிகப்பெரிய நந்திகளுள் இதுவும் ஒன்று. நாயக்க மன்னர்கள் பெரும்பாலும் வைணவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

(தமிழகத்தின் மிகப் பெரிய நந்தி திருவாவடுதுறை கோமுக்தீஸ்வரர் கோயிலில் உள்ளது) திருச்சி அருகிலிலுள்ள பச்சை மலையிலிருந்து கொண்டு வரப்பட்ட கருங்கல்லால் செய்யப்பட்ட இந்த நந்தி 25 தொன் எடை கொண்டது.

ராஜராஜன் கல்நந்தியை நிறுவவில்லையா? அதுவே முதலில் கருவறைக்கு எதிரில் இருந்தது. முதலில் அமைக்கப்பட்ட நந்தி, கேரளாந்தகன் மற்றும் ராஜராஜன் வாயில்களுக்கு இடைப்பட்ட பகுதியில் இருந்தது.

இப்போது அது நந்தி மண்டபத்துக்குத் தெற்கேயுள்ள திருச்சுற்று மாளிகையில் வடதிசை நோக்கியபடி உள்ளது. பின்னாளில் நாயக்கர்கள் மூலவருக்கு இணையான பெரிய நந்தியை நிறுவினார்கள்.

அணுக்கன் திருவாயில், ஒரு சிறப்பு நுழைவாயில் மரத்தால் செய்யப்பட்டது போன்று நுணுக்கமான வேலைப்பாடுகளுடன் இவ்வாயில் நிலைக்கல்லால் அமைந்துள்ளது.

இது தமிழகப் பாணியிலான கோபுரமாக இல்லாமல் சேரநாட்டுக் கோபுரக் கலைப்பாணியில் இரண்டு அல்லது மூன்று அடுக்குகளோடு திகழ்கிறது.

ராஜராஜனும் ஆடல் மகளிரும் தெய்வீகப் பணியாளர்களும் நுழைவதற்காக உருவாக்கப்பட்ட வாயில். இவ்வாயில் வழியாக மட்டுமே புகுந்து கருவறைக்குச் செல்வார் ராஜராஜன்.

(தொடரும்)

நேரத்தை தள்ளிப் போடாதீர்கள். தாமதங்கள் அபாயமான முடிவைக் கொண்டுள்ளன.
– ஷேக்ஸ்பியர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## வேற்றுமை மறந்து நாம் ஒன்றுபட வேண்டிய நேரம்

தேவர்கள், மனிதர்கள், விலங்குகள், பறவைகள், ஓரறிவு கொண்ட மரங்கள் என இவையனைத்துக்கும் பலமும் பலவீனமும் இருக்கவே செய்கிறது. இஃது இறைவனின் படைப்பு.

அந்தவகையில் சிங்கத்தின் பலம் அதன் பிடரியில் உள்ளது. யானைக்குத் துதிக்கை பலம், மானுக்கு கொம்பு, கழுகுக்கு அலகு, பாம்புக்குப் பல்லு இவ்வாறு ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு பலம் இருக்கிறது.

இதை நாம் கூறும்போது ஐயா! தற்போது தமிழர்களுக்கு ஏதும் பலம் உண்டா? என்று நீங்கள் யாரேனும் கேட்கலாம்.

அவ்வாறு கேட்டால் நிச்சயமாகப் பலம் உண்டு. அது எதுவெனில் **ஒற்றுமை** என்பது தான் எங்களின் பலமாகும்.

எனவே தமிழர்களாகிய நாம் ஒற்றுமை என்பதை இழப்போமாக இருந்தால், அதன் விளைவு எங்கள் இனத்தை நாமே வேரறுப்பதாக இருக்கும்.

எனவே யார் எந்தப் பக்கமாக இருந்தாலும் நாம் தமிழர் என்ற இனத்தின் பேரால் தமிழ் இனம் சார்ந்து நாம் அனைவரும் ஒற்றுமைப்பட வேண்டும்.

இதற்கான சந்தர்ப்பத்தை சமகால சூழ்நிலை ஏற்படுத்தியுள்ளது.

அந்த வகையில், தமிழ் மக்களாகிய நாம் ஒன்றுபட்டு எங்களின் பலத்தைக் காட்டுவோமாக இருந்தால், எங்களுக்கான விடிவு அதிக தொலைவில் இல்லை என்பதை சத்தியம் செய்யலாம்.

இங்கு ஒற்றுமை என்பது பலவாறாக ஏற்பட முடியும். அதில் ஒன்று எங்களுக்குள் பேதமை இல்லை என்பதை நாம் நிரூபித்துக் காட்டுவதாகும்.

தமிழனைக் கொண்டு தமிழனை வெட்டிச் சரித்து தமிழ் இனத்தை நிர்மூலமாக்க நினைக்கின்ற பேரினவாதத்தின் கபடத்தனத்துக்குத் தொடர்ந்தும் தமிழினம் இரையாக முடியாது.

இந்த உண்மையை உணர்ந்து கொண்டு நாம் அனைவரும் ஒற்றுமைப்பட்டு செயலாற்ற வேண்டும்.

இந்த ஒற்றுமைக்கான ஓர் அடித்தளத்தை ஆரம்பித்து வைக்கக்கூடிய சந்தர்ப்பம் வடக்கு மாகாண சபையின் முன்னாள் அமைச்சர் டெனீஸ்வரனுக்குக் கிடைத்துள்ளது.

ஆம், வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரனுக்கு எதிராக நீதிமன்ற அவமதிப்பு வழக்கொன்றை டெனீஸ்வரன் தாக்கல் செய்திருந்தார்.

அவர் தாக்கல் செய்த வழக்கு விசாரணைக்கு உட்பட்டிருக்கக்கூடிய நிலையில், நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் தமிழ் மக்களின் அவலத்தை பாராளுமன்றத்தில் பட்டவர்த்தனமாக முன்வைப்பது கண்டு, சர்வதேசம் நம்மை நோக்கி திசை திரும்புகிறது.

இந்நிலையில் நாம் ஒற்றுமையாக உள்ளோம் என்பதை உறுதி செய்ய வேண்டியது கட்டாயம் என்பதால், சட்டத்தரணி டெனீஸ்வரன் அவர்கள் தமிழன் எப்போதும் ஒற்றுமையாக இருப்பான் என்பதை தனது செயலால் நிரூபித்துக் காட்ட வேண்டும் என்பதே ஒட்டுமொத்தத் தமிழர்களினதும் பெருவிருப்பமாகும்.

# இன்று மரணதண்டனைக் கைதியை அனுமதித்தால் நாளை பயங்கரவாதி பாராளுமன்றம் வருவான்

## ஐ.தே.க. சுட்டிக்காட்டு

(கொழும்பு)

பாராளுமன்றத்தின் உயரிய கௌரவத்தையும் அதன் சிறப்புத் தன்மையையும் சீரழித்து செயற்படும் சபாநாயகரின் மரணதண்டனைக்கைதி தொடர்பான தீர்மானத்தை விலக்கிக்கொள்ள வேண்டும். அவ்வாறு அல்லாதுபோனால் எதிர்காலத்தில் பயங்கரவாதிகள் கூட பாராளுமன்ற உறுப்புரிமையை பெறும் நிலை ஏற்படும் என ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

அக் கட்சியின் பொதுச் செயலாளர் அகிலவிராஜ் காரியவசம் நேற்று ஞாயிற்றுக்கிழமை விடுத்துள்ள அறிக்கை ஒன்றிலேயே மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது, மரணதண்டனை விதிக்கப்பட்ட கைதியொருவர் பாராளுமன்ற உறுப்பினராக சட்டபூர்வமாக பதவியேற்ற சந்தர்ப்பம், இதற்கு முன்னர் இலங்கை பாராளுமன்ற வரலாற்றில் இடம்பெற்றதில்லை. பிரேமலால் ஜயசேகர என்ற குற்றவாளியை பாராளுமன்றத்திற்கு அனுமதிக்க பல தரப்பினர் முன்னின்று செயற்பட்டுள்ளனர்.

இந்த நீதிமன்றம் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் குறித்த நியமனத்தின் சட்ட அங்கீகாரம் மற்றும் அங்கீகாரமற்ற தன்மை குறித்தோ அல்லாது அவரது தகுதியற்ற தன்மை குறித்து கேள்விக்கு உட்படுத்தாது என மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர் குறிப்பிட்டுள்ளார். மேலும் சிறைச்சாலைகள் ஆணையாளரின் சர்ச்சைக்குரிய கடிதத்தில் சவாலுக்கு உட்படுத்தியுள்ள நிர்வாக சட்டங்களில் மாத்திரம் அவதானம் செலுத்தப்படவுள்ளது.

பாராளுமன்ற அமர்வு மற்றும்வாக்களிப்பு போன்ற விடயதாணங்கள் இந்த நீதிமன்றில் சவாலுக்கு உட்படுத்தப்படமாட்டது என்பதுடன் இந்த நெருக்கடிக்கான தீர்வை சபாநாயகர் அல்லது வேறு நீதிமன்றில் தீர்த்துக்கொள்ளப்பட வேண்டும் என்பதையும் மிக தெளிவாக குறிப்பிட்டுள்ளார்.

எனவே பிரேமலால் விடயத்தில் சபாநாயகர் தனது தீர்மானத்தை மீளாய்வு செய்ய வேண்டும். அவ்வாறு அல்லாது பாராளுமன்றத்தின் உயரிய தன்மையை சீரழித்து செயற்படும் நிலை தொடர்ந்தால் எதிர்காலத்தில் பயங்கரவாதிகள் கூட பாராளுமன்ற உறுப்புரிமை பெறும் நிலை ஏற்படும் என ஐக்கிய தேசிய கட்சியின் பொதுச் செயலாளர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார். (2)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை 15 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8 மணியிலிருந்து பிற்பகல் 5 மணி வரை **வவுனியா பிரதேசத்தில்** பம்பைமடுவிலிருந்து குருக்கள் புதுக்கு ளம் வரை, பூவரசங்குளத்திலிருந்து செங்கற்படை, வேளாங்குளம் கடற்படை முகாம், பம்பைமடு பல்கலைக்கழகம், வவுனியா பல்கலைக் கழகம், நித்தியநகர் ஆகிய பிரதேசங்களல் மின்சாரம் தடைப்படும்.

## தபால் திணைக்களத்தில் வெற்றிடங்கள்

(கொழும்பு)

தபால் திணைக்களத்தின் பல்வேறு துறைகளில் 1,633 வெற்றிடங்கள் காணப்படுவதாக தபால் திணைக்களத்தின் வருடாந்த அறிக்கை சுட்டிக் காட்டுகின்றது.

இந்த வெற்றிடங்கள் காரணமாக தபால் திணைக்களத்தின் செயல்திறன் மற்றும் தரம் பாதிக்கப்பட்டுள்ளதாக குறித்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடிதங்களை விநியோகிக்கும் தபால் ஊழியர்களுக்கான வெற்றிடங்கள் நிலவுவதால், கடிதங்களை விநியோகிக்கும் நடவடிக்கைகளுக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளன.

தனிப்பட்ட ரீதியான கடிதங்கள் தற்போது குறைவடைந்துள்ள போதிலும், வர்த்தக ரீதியிலான கடிதங்கள், பொதிகள் ஆகியன அதிகரித்துள்ளதாக தபால் திணைக்களத்தின் 2019 ஆம் ஆண்டுக்கான அறிக்கை குறிப்பிட்டுள்ளது.(2)

## வாழ்வைப் பொன்னாக்கும் வைர வரிகள்

**கடவுள் அருகில் இருந்தால் சிலந்தி வலையே காக்கும் சுவராகும். இல்லையென்றால் சுவரும் சிலந்தி வலையாகும். -இத்தாலி பழமொழி**

# வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

## ஐந்திணைப்புப் பண்பாடு



தற்சோதனை என்பது தன்னைப் பற்றி ஆராய்தல் என்று விளங்கும். தன்னைப் பற்றிச் சிந்தித்தல், தன் குறையுணர்தல், தான் திருத்தம் பெறத் திட்டம் வகுத்தல், வகுத்த வழியே செயலாற்றி வெற்றி பெறுதல் என்பன எல்லாம் தற்சோதனைப் பயிற்சியில் அடங்கும்.

தற்சோதனையை நான்கு பிரிவுகளாக்கி ஒவ்வொன்றாகப் பயிற்சியளிக்கப்படுகின்றது. முதற் பயிற்சி "நான் யார்?" என்ற வினாவினை எழுப்பி விடை பெறுதலாகும். உடல், உயிர், அறிவு, மெய்ப்பொருள் என்ற நான்கும் இணைந்தே மனிதன் என்ற இயக்கமாக விளங்குகிறது. இந்த நான்கு நிலைகளைப் பற்றி விளக்கத்தின் மூலமும், சிந்தனையின் மூலமும் உணர்ந்து கொள்வதே மெய்யுணர்வாகும்.

இரண்டாவது பயிற்சி எண்ணம், சொல், செயல் இவற்றை ஒழுங்குபடுத்துவதாகும். தனக்கும், பிறர்க்கும், தற்காலத்திலும், பிற்காலத்திலும் அறிவிற்கும் உடல் உணர்ச்சிக்கும் துன்பம் எழாத அளவிலும், முறையிலும் எண்ணம், சொல், செயல் மூன்றையும் பண்படுத்திப் பயன் பெறுதலாகும்.

மூன்றாவது பயிற்சி அறுகுணச் சீரமைப்பு. பேராசை, சினம், கடும்பற்று, முறையற்ற பால் கவர்ச்சி, உயர்வு தாழ்வு மனப்பான்மை, வஞ்சம் எனும் ஆறு குணங்களையும் நிறைமனம், சகிப்புத்தன்மை, ஈகை, கற்பு, நேர் நிறை விளக்கம், மன்னிப்பு என்ற ஆறு நற்குணங்களாக மாற்றும் பயிற்சி முறையே அறுகுணச் சீரமைப்பாகும். மனிதன் உணர்ச்சி வயப்படும்போது தான் அவன் ஆறு தீய குணங்களாக மாறுகிறான். அறிவின் வயம் நின்ற மாறாத விழிப்பு நிலை பெற்றால் உணர்ச்சி வயமாக மாற வழியே இல்லை. மனித இனப் பண்பாட்டிற்கு அறுகுணச் சீரமைப்பு இன்றியமையாததாகும்.

நான்காவது பயிற்சி கவலை ஒழித்தல். அறியாமை, உணர்ச்சி வயமாதல், சோம்பேறித்தனம் இவற்றால் செயல் தவறுகளும் கணிப்புத் தவறுகளும் ஏற்படுகின்றன. இவைகளையெல்லாம் ஆராய்ந்து முறைப்படி எல்லாக் கவலைகளையும் ஒழித்து நலம் பெறக் கவலையொழித்தல் என்ற பயிற்சி நன்கு உதவுகின்றது. குண்டலினி யோகத்தால் விழிப்பு நிலை பெற்று தற்சோதனைப் பயிற்சி முறையால் மனத்தூய்மையும், வினைத்தூய்மையும் உண்டானால், அவற்றின் அடிப்படையில் ஒழுக்க உணர்வு, கடமையுணர்வு, மெய்ப்பொருள் உணர்வு என்ற மூன்றும் இயல்பாக வந்துவிடும். எனவே, இத்தகைய பண்பாட்டின் பயிற்சி முறையை "ஐந்திணைப்புப் பண்பாடு" என்று வழங்குகிறோம்.

# கே.சி.சி.சி. வெற்றிக் கிண்ணம் - 2020

# விக்டோறி அணி 2 வது சுற்றுக்கு தகுதி

கே.சி.சி.சி.வெற்றிக்கிண்ணம்-2020 தொடரின் முதலாவது சுற்றில் 8 ஆவது போட்டி நேற்று முன்தினம் சனிக்கிழமை கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

போட்டியில் மூளாய் விக்டோறி அணி, சிறி காமாட்சி அணியை ஒரு விக்கெட்டுக்களால் வெற்றிபெற்று இரண்டாவது சுற்றுக்குத் தகுதி பெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய சிறி காமாட்சி அணி 30 ஓவர்களில் 8 விக்கெட்டுக்களை இழந்து 143 ஓட்டங்களைப் பெற்றது.

போட்டியில் துவாரகன் - 12, சயந்தன் - 13, செந்தில்குமரன் - 23, தர்ஸன் - 22, பிரதாப் - 29 ஓட்டங்களைப் பெற்றனர்.

களத்தடுப்பில் விக்டோறி அணி சார்பாக கயந்தன் - 03, ஐங்கரன் - 02, சரத்குமார், கவிதன், வேணுதாஸ் தலா ஒரு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய மூளாய் விக்டோறி அணி 26 ஓவர்களில் 9 விக்கெட்டுக்களை இழந்து 144 ஓட்டங்களைப் பெற்றது.

போட்டியில் சசி - 13, பத்மபிரியன் - 17, சரத்குமார் - 22, கரிதாஸ் - 16, வேணுதாஸ் ஆட்டமிழக்காது 34 ஓட்டங்களைப் பெற்றனர்.

களத்தடுப்பில் சிறி காமாட்சி அணி சார்பாக நிருஜன் - 03, பிரதாப் - 02, கபில், தர்ஸன், சபேஸன் தலா ஒரு விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

இப்போட்டியில் வெற்றி பெற்ற மூளாய் விக்டோறி அணி எதிர்வரும் 26 ஆம் திகதி பிற்பகல் 1.30 மணிக்கு கே.சி.சி.சி.அணியுடன் 2 ஆவது சுற்றில் மோதவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (4)

## எல்.பில்.எல். தொடரில் விளையாட விரும்பும் பிரபலங்கள்

இலங்கையில் நடைபெறும் லங்கன் பிரீமியர் லீக் (எல்.பி.எல்) இருபது -20 தொடரில் விளையாட, வீரர்கள் பலர் விருப்பம் தெரிவித்துள்ளனர்.

முன்னதாக லங்கன் பிரீமியர் லீக், ஓகஸ்ட் 28ஆம் திகதி முதல் செப்டெம்பர் 20 ஆம் திகதி வரை நடைபெறுவதாக இருந்தது. ஆனால், இலங்கைக்கு வரும் வெளிநாட்டு வீரர்கள் 14 நாட்கள் தனிமைப்படுத்திக்கொள்ள வேண்டும் என இலங்கை அரசு உத்தரவிட்டதால், கடந்த மாதம் தொடர் ஒத்திவைக்கப்பட்டது.

இந்நிலையில் இந்தமுறை வெளிநாட்டு வீரர்கள் ஏழு நாட்களுக்கு மட்டும் தனிமைப்படுத்திக்கொள்ள அனுமதிக்குமாறு இலங்கை அரசாங்கத்திடம் இலங்கை கிரிக்கெட் சபை கோரிக்கை விடுத்துள்ளது. அதற்கமைய தற்போது நவம்பர் 14 ஆம் திகதி முதல் டிசெம்பர் 6ஆம் திகதி வரை தொடரை நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்த தொடரில் பங்கேற்க கிறிஸ் கெயில், டேரன் சமி, டேரன் பிராவோ, சயித் அப்ரிடி, சகிப் அல் ஹசன், ரவி பொபாரா, கொலின் முன்ரோ, வெர்னோன் பிளாண்டர், முனாப் படேல் ஆகிய சர்வதேசப் போட்டிகளில் விளையாடிய வீரர்கள் விருப்பம் தெரிவித்தனர்.

ஒவ்வொரு உரிமையாளரும் ஆறு சர்வதேச வீரர்களை வாங்க முடியும். அதாவது லங்கன் பிரீமியர் லீக் தொடரில் 30 சர்வதேச கிரிக்கெட் வீரர்களுக்கும் 65 உள்ளூர் கிரிக்கெட் வீரர்களுக்கும் வாய்ப்புள்ளது. ஒவ்வொரு அணியிலும் 19 உறுப்பினர்கள் உள்ளனர். மொத்தத்தில், ஐந்து உரிமையாளர்களுக்கு ஏலம் எடுக்க சுமார் 150 வீரர்களின் தேர்வு இருக்கும்.

கொழும்பு, கண்டி, காலி, தம்புள்ளை, யாழ்ப்பாணம் என ஐந்து அணிகள் இந்த தொடரில் பங்குபெற உள்ளதுடன் 23 போட்டிகளும் நடைபெறவுள்ளன. (4)

### அன்பு வாசகர்களே!

உங்கள் பிரதேச விளையாட்டுச் செய்திகளை Valampurisp@gmail.com அல்லது 076 636 3378 என்னும் Viber இலக்கத்துக்கு அனுப்பி வையுங்கள்.

உங்களை உலகறியச் செய்ய நாம் தயார்

## ஐ.பி.எல். போட்டியில் விளையாடவுள்ள முதல் அமெரிக்க வீரர்

ஐ.பி.எல். வரலாற்றிலேயே முதல் முறையாக அமெரிக்காவைச் சேர்ந்த ஒரு வீரர் 13-வது ஐ.பி.எல். போட்டியில் விளையாடவுள்ளார்.

கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணிக்காக ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ள அந்த வீரரின் பெயர் அலி கான். வேகப்பந்து வீச்சாளரான அவர் இங்கிலாந்தை சேர்ந்த கேரி குர்னேவுக்கு பதிலாக சேர்க்கப்படவுள்ளார்.

குர்னே தோள்பட்டை காயத்தால் விலகியுள்ளார். அவருக்கு பதிலாக 29 வயதான முகமது ஹசன் அலிகான் அணியில இணைக்கப்படவுள்ளதுடன் ஐ.பி.எல். நிர்வாகத்தின் அனுமதிக்காக கொல்கத்தா அணி காத்திருக்கிறது.

ஐ.பி.எல். நிர்வாகம் அலிகானுக்கு அனுமதி அளித்தால் ஐ.பி.எல்.இல் விளையாடவுள்ள முதல் அமெரிக்க வீரர் என்ற பெருமையை அவர் பெறுவார்.

அலிகான் இந்த சீசனில் கரீபியன் பிறீமியர் லீக் 20 ஓவர் தொடரில் போலார்ட் கப்டனாக இருந்த டிரின்பாகோ நைட் ரைடர்ஸ் அணியில் ஆடினார். இந்த தொடரில் அவர் 8 விக்கெட்டுகளை வீழ்த்தியதுடன் அவர் யார்க்கர் பந்து வீசுவதில் தேர்ச்சி பெற்றிருந்தார்.

கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி தனது ஆரம்ப ஆட்டத்தில் எதிர்வரும் 23 ஆம் திகதி மும்பையை சந்திக்கிறது.

கடந்த ஐ.பி.எல். தொடரின் போதே கொல்கத்தா அணி நிர்வாகம் அலிகானை அணியில் இணைக்க முயன்று முடியவில்லை. அப்போது அவர் கனடா 20 ஓவர் போட்டிகளில் சிறப்பாக பந்து வீசி அனைவரது கவனத்தையும் ஈர்த்திருந்தார்.

இதைத் தொடர்ந்து அலிகானின் திறமையை கண்ட வெஸ்ட் இண்டீஸ் வீரர் பிராவோ அவரை கரீபியன் பிறீமியர் லீக் தொடரில் அறிமுகப்படுத்தினார்.

கடந்த சீசனில் அவர் கயானா அமேசான் வாரியர்ஸ் அணியில் இடம்பெற்று 12 விக்கெட்டுகளை வீழ்த்தினார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (4)

# ஐ.பி.எல். கிண்ணத்தை இம்முறை டில்லியே கைப்பற்றும்


பீற்றர்சன்

இந்த ஆண்டுக்கான ஐ.பி.எல். கோப்பையை டில்லி அணி கைப்பற்றும் என இங்கிலாந்து முன்னாள் கப்ட னும், தொலைக்காட்சி வர்ணனையாளருமான பீற்றர்சன் அவரது கணிப்பை தெரிவித்துள்ளார்.

13 ஆவது ஐ.பி.எல். 20 ஓவர் கிரிக்கெட் போட்டி எதிர்வரும் 19 ஆம் திகதி முதல் நவம்பர் 10 ஆம் திகதி வரை ஐக்கிய அரபு எமிரேட்சில் உள்ள டுபாய், அபுதாபி, சார்ஜா ஆகிய இடங்களில் நடைபெறவுள்ளது.

இந்த போட்டியில் நடப்பு சம்பியன் மும்பை இந்தியன்ஸ், சென்னை சுப்பர் கிங்ஸ், ரோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர், கிங்ஸ் லெவன் பஞ்சாப், சன் ரைசர்ஸ் ஐதராபாத், டில்லி கேபிடல்ஸ், ராஜஸ்தான் ரோயல்ஸ், கொல்கத்தா நைட் ரைடர்ஸ் ஆகிய 8 அணிகள் பங்கேற்கின்றன.

ஒவ்வொரு அணியும் மற்ற அணிகளுடன் தலா 2 முறை மோதவேண்டும். லீக் முடிவில் புள்ளிகள் அடிப்படையில் முதல் 4 இடங்களை பிடிக்கும் அணிகள் 'பிளே ஓப்' சுற்றுக்கு முன்னேறும். தொடக்க ஆட்டத்தில் சென்னை சுப்பர் கிங்ஸ்-மும்பை இந்தியன்ஸ் அணிகள் மோதுகின்றன.

இந்த நிலையில் ஐ.பி.எல். கோப்பையை டில்லி அணி கைப்பற்றும் என்று இங்கிலாந்து முன்னாள் கப்டனும், தொலைக்காட்சி வர்ணனையாளருமான பீற்றர்சன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் தனது டுவிட்டர் பதிவில் கூறியிருப்பதாவது,

கொரோனா மருத்துவ தடுப்புப் பாதுகாப்பில் இங்கிலாந்தில் இருந்த நான் தற்போது கொரோனா மருத்துவ தடுப்புப் பாதுகாப்பு உள்ள டுபாய்க்கு சென்று கொண்டிருக்கிறேன். கிரிக்கெட் போட்டி மீண்டும் தொடங்குவது மிகுந்த மகிழ்ச்சியை அளிக்கிறது.

ஐ.பி.எல். போட்டிக்கு வர்ணனையாளராக தொடர்ந்து பணியாற்றுவது எனக்கு எப்போதுமே பிடித்திருக்கிறது. ஐக்கிய அரபு எமிரேட்சில் நடைபெறும் இந்த ஐ.பி.எல். போட்டியில், டில்லி கபிடல்ஸ் அணி கோப்பையை வெல்லும் என்று நம்புகிறேன் என அவர் தெரிவித்திருந்தார்.

ஐ.பி.எல். போட்டியில் டில்லி அணி முதலில் டில்லி டேர் டெவில்ஸ் என்ற பெயரில் ஆடியது. கடந்த 2 சீசனில் அதன் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. ஐ.பி.எல். இறுதிப்போட்டிக்கு முன்னேறாத ஒரே அணி டில்லிதான்.

அந்த அணி கடந்த முறை பிளேஓப் சுற்றுவரை வந்தது. டில்லி கபிடல்ஸ் அணியில் கப்டன் ஸ்ரேயாஷ் அய்யர், தவான், ரிஷப் பண்ட், ரகானே, அஸ்வின், ரபடா, பிரித்விஷா போன்ற முன்னணி வீரர்கள் உள்ளனர்.

டில்லி அணி தொடக்க ஆட்டத்தில் கிங்ஸ் லெவன் பஞ்சாபை சந்திக்கிறது. இதே போல பஞ்சாப், பெங்களூர் அணிகளும் இதுவரை ஐ.பி. எல். கோப்பையை வென்றதில்லை.

மேலும் பீற்றர்சன் ஐ.பி.எல். போட்டியில் பெங்களூர்,டில்லி, புனே அணிக்காக விளையாடி இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (4)

## வவுனியா விபத்...

வண்டியில் பயணித்த மாணவனுடன் மோதியதிலேயே குறித்த விபத்து இடம் பெற்றுள்ளது.

விபத்தில் துவிச்சக்கரவண்டியில் பயணித்த நொச்சிக்குளம் பகுதியை சேர்ந்த எ.புவிதன் (வயது - 14) என்ற மாணவன் படுகாயங்களுக்குள்ளாகிய நிலையில் இராணுவத்தினரின் உதவியுடன் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

குறித்த மாணவன் புதுக்குளம் மகா வித்தியாலயத்தில் ஒன்பதாம் தரத்தில் கல்வி கற்று வருகிறார்.

விபத்தை ஏற்படுத்திய சந்தேகத்தின் பேரில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதுடன், மற்றைய நபர் தப்பிச் சென்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (ம-299)

## விபரீத முடிவெடு...

குறித்த சம்பவம் நேற்று ஞாயிற்றுக் கிழமை அதிகாலை இடம்பெற்றுள்ளது.

இதுதொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

நேற்று முன்தினம் சனிக்கிழமை இரவு குறித்த இளைஞன் தாயிடம் பணம் கேட்டுத் தொந்தரவு செய்துள்ளார்.

எனினும், தாயார் பணம் கொடுக்க மறுத்த நிலையில் "நீ நாளைக்கு விடிய அழுவாய்" எனத் தாயாருக்கு விரக்தியுடன் தெரிவித்த குறித்த இளைஞன் வீட்டின் முன்பகுதித் தளத்தினுள் தூக்கிட்டுத் தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

இதில் குப்பிழான் வடக்கு கற்கரைக் கற்பக விநாயகர் ஆலயத்திற்கு அண்மைய பகுதியில் வசித்து வந்த உமாபரன் சுகந்தன் (வயது-22) என்ற இளைஞனே இவ்வாறு மரணமடைந்தவராவார். (ம-18)

## ஹெரோயினுடன்...

நெல்லியடி - கொடிகாமம் வீதியில் உள்ள அரசடிச் சந்திக்கு அண்மையாக நேற்று ஞாயிற்றுக்கிழமை மாலை ஹெரோயின் போதைப்பொருள் விற்பனை செய்யப்படுவதாக நெல்லியடிப் பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலையடுத்து ஜெயதிலக தலைமையிலான பொலிஸார் அப்பகுதியில் திடீர் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர்.

இதன்போது 4.7 கிராம் ஹெரோயினுடன் வடமராட்சிதிக்கம் பகுதியைச் சேர்ந்த 34 வயதுடைய சந்தேகநபர் கைது செய்யப்பட்டதுடன் அவரிடமிருந்து 34 ஆயிரத்து 500 ரூபாய் ரொக்கப் பணமும் அவர் பயன்படுத்திய மோட்டார் சைக்கிளும் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (ம-30.60)

## ஒட்டுசுட்டானில்...

பட்டுள்ளனர்.

இந்த விபத்துச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருகையில்,

முல்லைத்தீவு மாங்குளம் வீதியில் ஒட்டுசுட்டான் சிவன் ஆலயத்திற்கு முன்பாக உள்ள பேருந்து தரிப்பிடத்திற்கு அருகில் மாங்குளம் நோக்கிய திசையில் பயணித்த பிக்கப் ரக வாகனம் ஒன்று மீண்டும் முல்லைத்தீவு பக்கமாக திரும்ப முற்பட்ட வேளை மாங்குளம் நோக்கி வருகை தந்த ஹயஸ் வாகனம் குறித்த வாகனத்துடன் மோதியதில் குறித்த விபத்து ஏற்பட்டுள்ளது.

இதன்போது ஹயஸ் வாகனத்தில் பயணித்த 12 பேர் படுகாயமடைந்த நிலையில் அருகில் இருந்தவர்களால் மீட்கப்பட்டு நோயாளர் காவு வண்டி ஊடாக முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். (ம-281)

## ஆசிரியர் மீது...

தாக்குதலில் காயமடைந்த ஆசிரியர் வைத்தியசாலையில் சிகிச்சைகளுக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை கோப்பாய் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-3)

## மன்னார் ரயில்...

நிலைய ஊழியர்களும் பாதுகாப்பு காரணங்களுக்காக புகையிரத நிலையத்திலே தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

வவுனியா, பெரியகாடு இராணுவ புனர்வாழ்வு நிலையத்தில் இருந்து கொரோனா சந்தேகநபர் ஒருவர் தப்பித்து வந்த நிலையில், நேற்று முன்தினம் சனிக்கிழமை மாலை மன்னார் சௌத்பார் பகுதியில் இராணுவத்தினால் கைது செய்யப்பட்டார்.

இந்த நிலையில் மன்னார் சௌத்பார் புகையிரத நிலையத்தைச் சூழவுள்ள பகுதியில் குறித்த நபர் நடமாடித் திரிந்ததையடுத்து மன்னார் பிரதான புகையிரத நிலையம் முற்றிலும் மூடப்பட்டுள்ளதுடன் கொழும்பில் இருந்து மன்னார் வரும் புகையிரதங்களும் தரித்து நிற்காமல் செல்வதற்கான ஏற்பாடுகளை புகையிரத நிலையம் மேற்கொண்டுள்ளது.

அதே நேரத்தில் நேற்று முன்தினம் சனிக்கிழமை மன்னார் புகையிரத நிலையத்தில் கடமையில் இருந்த ஊழியர்களும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளதுடன், புகையிரத நிலைய ஊழியர்களுக்கு பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்படவுள்ளது.

மேலும் நேற்றைய தினம் ஞாயிற்றுக் கிழமை மன்னார் புகையிரத நிலைய பகுதிகளைச் சூழ மன்னார் பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரிகளினால் கிருமித் தொற்று நீக்கும் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

*(மற்றொரு செய்தி உள்ளே)* (ம)

## நேற்றும்...

சின் தொற்றுநோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.

இதனையடுத்து நாட்டில் கொரோனா வைரஸினால் பாதிக்கப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 3 ஆயிரத்து 234 ஆக அதிகரித்துள்ளது.

நேற்று அடையாளம் காணப்பட்டவர்களில் 15 பேர் கட்டாரில் இருந்தும் 02 பேர் மாலைதீவில் இருந்தும் ஐக்கிய அரபு இராச்சியத்தில் இருந்தும் உக்ரைனில் இருந்தும் நாடு திரும்பிய தலா ஒருவரும் இதில் அடங்குவதாக சுகாதார அமைச்சின் தொற்றுநோயியல் பிரிவு அறிவித்துள்ளது. (ம)

## விக்னேஸ்வர...

தலைவணங்குகிறேன்.

அவருக்கு பக்கபலமாக நான் எப்போதும் இருப்பேன் என வட மாகாண முன்னாள் அமைச்சர் பா.டெனீஸ்வரன் தெரிவித்திருக்கின்றார்.

சி.வி.விக்னேஸ்வரன் மீது டெனீஸ்வரன் தொடுத்துள்ள நீதிமன்ற அவமதிப்பு வழக்கை வாபஸ் பெற வேண்டும் என சட்டத்தரணி கலாநிதி குமார வடிவேல் குருபரன் உட்பட பலர் முன் வைத்துள்ள கோரிக்கைகளுக்குப் பதிலளிக்கும் வகையில் வெளியிட்டுள்ள முகப்புத்தகப் பதிவிலேயே டெனீஸ்வரன் இதனைத் தெரிவித்திருக்கின்றார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

என்னுடைய நோக்கம் முன்னாள் முதலமைச்சரை சிறையில் அடைக்க வேண்டும் என்பதல்ல. எந்த தவறும் செய்யாமல் வீண்பழி சுமத்தியது பிழையென்பதை உணர்த்த வேண்டும் என்பதற்காகவே வழக்குத் தொடுத்தேன்.

அந்த நேரத்தில் எவரும் இதில் உள்ள நியாயப்பாடுகளை சீர்தூக்கிப் பார்க்க முன்வரவில்லை. எனக்கு பக்கபலமாக இருந்தது என்னுடைய நியாயப்பாடு ஒன்று மட்டுமே.

கடந்தவைகடந்தவையாகவே இருக்கட்டும். இன்று எந்தப் பாராளுமன்ற உறுப்பினரும் கதைக்காத ஒரு விடயத்தை எமது முதலமைச்சர் உரக்கச் சொல்லி இருக்கின்றார்.

முதற்கண் அதற்கு தலைவணங்கிறேன். இதனை எமது இனம் சார்ந்த ஒரு விடயமாகவே நான் பார்க்கின்றேன். அதன் பொருட்டு அவருக்கு பக்கபலமாக நான் எப்போதும் இருப்பேன் எனத் தெரிவித்துள்ளார். (ம)

## கிளிநொச்சியில்...

கப்பட்டுள்ளன.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது, கிளிநொச்சி மாவட்டத்தில் இவ்வருடம் க.பொ.த.சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள சுமார் 2 ஆயிரத்து 600 வரையான மாணவர்கள் கூட்டுறவாளர் மண்டபத்திற்கு செயலமர்வுக்காக அழைக்கப்பட்டிருந்தனர்.

மண்டபத்திற்குள் சுமார் ஆயிரத்து 200 மாணவர்கள் மாத்திரமே அமர்ந்திருக்க முடியும். இதனால் ஆரம்பத்திலேயே சில மாணவர்களிடையே முறுகல் நிலை ஏற்படத் தொடங்கியது.

ஒரு கட்டத்தில் மாணவர்கள் சிலர் அடிதடியில் ஈடுபட்டனர். கதிரைகளாலும் பரஸ்பரமாகத் தாக்கிக்கொண்டனர். பின்னர் மண்டப வளாகத்திலிருந்து வெளியேறிய மாணவர்கள் வீதியிலும் மோதிக்கொண்டனர். கையில் பொல்லுகளுடன் சில மாணவர்கள் அடிதடியில் ஈடுபட்டுள்ளனர். இதன்போது ஒரு மாணவனின் கழுத்தில் சிறிய கத்தி ஒன்றினால் வெட்டப்பட்டுள்ளது.

வெட்டுக்காயங்களுக்குள்ளான மாணவன் கிளிநொச்சி வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டார். (ம-350)






















## வெளிநாடுகளுக்கான துரித தபால்கள், பொதிகள் சேவை



| | | | |
|---|---|---|---|
| கனடா | - 650/= | ஜேர்மனி | - 1150/= |
| லண்டன் | - 1050/= | பிரான்ஸ் | - 1150/= |

**அருள்**
தபால் கந்தோர் வீதி,
சாவகச்சேரி.

**அருள்**
பெற்றோல் செற் எதிரில்
பிரதான வீதி, நெல்லியடி.

**அருள்**
இ.போ.ச. பஸ் டிப்போ எதிரில்
பிரதான வீதி, பருத்தித்துறை.

(C-301)

**தொ. இல:- 076 443 1576**

## விரைவு பொதிகள் சேவை

**V2 TRAVELS**

**UK-1025/=Kg**

பிரான்ஸ் / ஜெர்மனி / டென்மார்க்
நெதர்லாந்து / இத்தாலி / சுவிஸ் 1150/=Kg

எமது நேரடிக்கிளைகள்
- யாழ்ப்பாணம்
- நெல்லியடி
- புதுக்குடியிருப்பு
- பருத்தித்துறை
- கிளிநொச்சி
- கொடிகாமம்
- சுன்னாகம்
- வல்வெட்டித்துறை
- சாவகச்சேரி
- மானிப்பாய்

DHL (C-132)

**0768226240**

**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

## AIRR LINE

வெளிநாடுகளுக்கான
தபால் பொதிகள் சேவை
**கனடா - 650/=**

கே.கே.எஸ். வீதி,
உப்புமடம்.

**Tel : 076 443 1575**

(C-302)

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத் தருகின்றோம்

## றாஜ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை ஆகிய பகுதிகளில்

*வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தை தந்து வாங்கப்படும்.*

தொடர்பு: றாஜ் - 077 679 6623

(3873)

## ஊடகக் கற்கை
## Media Studies

மாபெரும் விசேட
இறுதிக் கருத்தரங்கு
**A/L 2020**
நாளை ஆரம்பம்

15, 16, 17, 18.09.2020
மதியம் 1.30 - 5.30 வரை

ஆசிரியர்
**திரு. என். கஜிதரன்**
B.A (Hons) Spl. In Media
M.A (Mass Comm..)


Note : பழைய, புதிய பாடத்திட்டம் உள்ள டக்கப்படும், புதிய மாதிரி வினாத்தாள் கலந்துரையாடப்படும், கையேடுகள் வழங்கப்படும், வெளிமாணவர்களும் பங்குபற்றலாம், சுகாதார விதிமுறை களின்படி கலந்துகொள்ளவும்.

இடம் :-
**பொருளியற் கல்லூரி**
நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

தொடர்புகளுக்கு (C-310)
**077 395 6158**
**075 916 0431**

மீண்டும்

## வெளிநாடுகளுக்கான துரித தபால்கள் பொதிகள் சேவை



அசாதாரண சூழ்நிலை காரணமாக முடங்கியிருந்த
எமது சேவை மீண்டும் வழமைபோல்
அனைத்து நாடுகளுக்கும்
**100%** பாதுகாப்புடன் நடைபெறுகின்றது.

(C-245)

**அருள் குளோபல் எக்ஸ்பிறஸ்**
இல.01, பிறவுண் வீதி, நாவலர் வீதிச் சந்தி,
யாழ்ப்பாணம்
தொ.பே:- 021 222 6113

**அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட்**
இல.10, புதிய மாநகர சபை கட்டிடத் தொகுதி,
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொ.பே:- 021 222 3536



## விற்பனைக்கு



மிகவும் நல்ல
நிலையிலுள்ள
யப்பான்
மிற்சுபிசி ஜீப்
( Japan
Mitsubishi
Jeep ) 4DR5
விற்பனைக்கு
உண்டு.

(C-311)

**தொடர்பு : 071 735 5929**

உ
ஸ்ரீ துர்க்காதேவி துணை



# திறப்புவிழா அழைப்பு

**தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தால்**
புதிதாக நிர்மாணிக்கப்பட்ட
மருத்துவ சேவைக் கட்டடத் தொகுதி
திருமகள் புத்தகசாலை
திருமகள் அழுத்தகம்

காலம் : சார்வரி வருடம் ஆவணி மாதம் 29ம் நாள்
(14.09.2020) திங்கட்கிழமை
நேரம் : பகல் 11.37 மணி முதல் 12.20 மணி வரை
இடம் : 185, காங்கேசந்துறை வீதி, சுன்னாகம்.

இவ் வைபவத்தில் அனைவரும் பங்குபற்றி தேவஸ்தானப் பணிகளை
சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

நிர்வாக சபை
துர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை.

thurkaiammantemple@gmail.com
021 224 1909

(3874)

## திருமகள் புத்தகசாலை

சகல சமய நூல்கள், பாடசாலை உபகரணங்கள்,
பன்னிரு திருமுறைகள், பரிசளிப்புக்குரிய நூல்கள்,
இலக்கிய சஞ்சிகைகள், பத்திரிகைகள், போட்டோபிரதி,
மாணவர்களுக்கான பொருட்கள்,
அனைத்தும் பெற்றுக்கொள்ளலாம்.

**185, கே.கே.எஸ் வீதி, சுன்னாகம்.**

## திருமகள் அழுத்தகம்

அச்சுவேலைகள், ஆலய வெளியீடுகள்
மற்றும் பதிப்பு வேலைகள்
நிறைவு செய்து தரப்படும்.

**185, கே.கே.எஸ் வீதி, சுன்னாகம்.**

(3874)

## CIMS COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS

**Care Giver Course - பராமரிப்பாளர் பயிற்சி நெறி**

- கனடாவில் / வெளிநாடுகளில் வேலைவாய்ப்பை பெற்றுக்கொள்ள
- படித்துக்கொண்டே 50'000/= சம்பளம் பெறலாம்.
- சனி, ஞாயிறு வகுப்புக்கள். (முழுநேர வேலைசெய்பவர்களும் படிக்கலாம்)

(C-308)

**சிறுவர் பராமரிப்பு/ முதியோர் பராமரிப்பு/விசேட தேவையுள்ளோர் பராமரிப்பு/வீட்டு பராமரிப்பு**




அரச அங்கிகாரம் பெற்ற எமது கற்கை நெறியானது அதிக செயன்முறைகளுடனும் (Practicals) பயிற்சிகளுடனும் (On the Job Training) கூடியதாக அமைவதால் எமது மாணவர்கள் மிக இலகுவாகவும் திருத்தமாகவும் வேலைகளை செய்யும் ஆற்றலை பெறுவார்கள். மேலும் எமது கற்கை நெறிகள் கனடாவின் Care Giver வேலை வாய்ப்பு மற்றும் குடிவரவு திட்டத்தினை அடிப்படையாகக்கொண்டு அமைக்கப்பட்டிருப்பதால் கனடா மற்றும் எந்தவொரு வெளிநாட்டிலும் வேலைவாய்ப்பினை பெற்றுக்கொள்ளக்கூடியதுடன் உள்நாட்டில் கூட சிறுவர் பராமரிப்பு மையங்கள், முதியோர் பராமரிப்பு மையங்கள், விசேட தேவையுள்ளோர் பராமரிப்பு மையங்கள் மற்றும் வீட்டு பராமரிப்பு போன்ற இடங்களில் உடனடி வேலைவாய்ப்பினை பெற்றுக்கொள்ளலாம்.

அனுமதிகளுக்கு
**49A, சப்பல் லேன், யாழ்ப்பாணம்** **0777069777**

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 14.09.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.